# வருடாந்த அறிக்கை 2015

மத்திய பொறியியல் உசாதுணைப் பணியகம்



# உள்ளடக்கம்


- எம்மைப் பற்றி 1
- தலைவரின் செய்தி 3
- பொது முகாமையாளரின் செய்தி 4
- நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள் 5
- பணிப்பாளர்கள் சபை பற்றிய விபரம் 6
- ம.பொ.உ.ப. முகாமைத்துவக் குழு 8
- பணிப்பாளரின் அறிக்கை 9
- கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 11
- கூட்டிணைந்த தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும் 13
- நிதிக் கூற்றுக்கள் 24
- முழுமையான வருமானக் கூற்று 24
- நிதி நிலைக் கூற்று 25
- காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று 26
- ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று 27
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 28
- கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 36
- முழுமையான நிதிக் கூற்றுக்கள் 47
- குறித்த ஆண்டின் செயலாற்றுகை 51
- சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் - CESL 62

# பொறியியலில் சிறப்புப்பெற்ற இலங்கை

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேசிய பொறியியல் நிர்மாண சிறப்புக்கு புகழ் பெற்ற சிறந்த ஒரு வியாபார அமைப்பு மற்றும் ஒரு அரச உடமை நிறுவனம் என்ற ரீதியில் ம.பொ.உ.ப. 42 ஆண்டு காலமாக பொறியியலில் திடமான செயலாற்றுகை அம்சங்களை மேற்கொண்டு வெற்றிகரமான முறையில் சுயமாக நிதியீட்டி வருகின்றது. எமது பொறியியல் அடிப்படைகள் பரந்த பலநோக்கு மகாவலி அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டத்தில் உறுதியாக பதிந்துள்ளன. இவை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல வகையான சமூகப் பொருளாதார உட்கட்டமைப்புகளின் அபிவிருத்திற்கு துணைபுரிந்துள்ளன என்பதுடன் பொறியியல் நிபுணத்துவத்தை சேர்க்கும் அளவுக்கு வளர்ந்துமுள்ளன.

அணைக்கட்டுக்கள், சுருங்கவழிகள், நீர்வலு சார்ந்த பொறியியல் (இலங்கை•ஃகிழக்கு ஆபிரிக்கா), நீர்ப்பாசனம், நீர் விநியோகம் / மற்றும் சுற்றாடல் பொறியியல், பெருந்தெருக்கள், பாலங்கள், புகையிரத வீதிகள், விமான நிலையங்கள், உயர் கட்டிடங்கள், நிர்மாணங்கள் மற்றும் நகர உட்கட்டமைப்பு வசதிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கலாசாலைகள், ஆய்வுகூடங்கள், சுகாதாரப் பராமரிப்பு விடயங்கள், கடலோரப் பகுதி மற்றும் கடல், பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகள், வெளிநாடுகளிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் முதலியன எமது ஒன்றிணைந்த வலிமைகளிலும் ஆற்றல்களிலும் உள்ளடங்குகின்றன. சுற்றாடல் ஆய்வுகள், இயற்கை வளங்கள் முகாமைத்துவம், மீள்குடியேற்ற சமூகப் பொருளாதார அம்சங்கள், சமுதாய அபிவிருத்தி ICT வலையமைப்புகள் முதலியனவும் எமது நிபுணத்துவ விடயத்தில் மேலும் உள்ளடங்குகின்றன. உண்மையில் எமது நிறுவனமே சகல விதமான பொறியியல் வடிவமைப்புகளுக்கும், உசாதுணைகளுக்கும் மற்றும் நிர்மாணத் தேவைகளுக்கும் ஒரேயொரு நிறுவனமாக விளங்குகின்றது.

யுத்தத்திற்குப் பிற்பட்டகால மாற்றங்கள் மற்றும் எமது மக்களின் அபிலாஷைகள் என்பன தொடர்பான எமது தேசிய கடப்பாடுகளை நாம் தொடர்ச்சியாக நிறைவேற்றியுள்ளோம். பொன் விழாவை நாம் நெருங்கிக் கொண்டிருப்பதால் எமது பணியகத்தின் நிலையும் கைத்தொழிலில் வலியமையாகக் காணப்படுகின்றது. ம.பொ.உ.ப. அதன் பயிற்றப்பட்ட பல வகையான நிபுணர்களையும் உயர் பொறியியல் ஆற்றல்களையும் கொண்ட ஊழியர்களைக் கொண்டு சுற்றாடலைப் பாதுகாப்பதில் எதிர்கால தேசிய சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு தனது முயற்சிகளை மும்மடங்குகளாக மேற்கொள்ளும் அதே வேளையில் கவர்ச்சியான பொது மற்றும் தனியார் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தயாராகவுள்ளது.



# தூர நோக்கு

உலகத்தில் முதல்தர பொறியியல் நிறுவனமாகத் திகழ்தல்

# செயற்பணி

மானிட வர்க்கத்தின் ஆகக்கூடிய நன்மைகளின் நிமித்தம் வளங்களின் பிரயோகப் பங்களிப்புக்காக பெருத்தமான முறையில் அதிகம் ஊக்குவிக்கப்பட்டதும் தேர்ச்சி பெற்றதுமான ஒரு ஊழியர் படையைக் கொண்டு காத்திரமான கலைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொறியியல், கட்டடக்கலை மற்றும் கணிய அளவையியல் முதலிய துறைகளில் சிறப்புப் பெற்று உலகத்தில் முதல்தரப் பொறியியல் நிறுவனமாக விளங்குதல்.



ம.பொ.உ.ப. - அபிலாஷை - இந்த அபிலாஷை ஒரு வரலாற்றைக் கொண்டு ஆரம்பமாகுகின்றது. ஒரு வரலாறு என்பது இரண்டு யுகங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு இந்த நாட்டின் முன்னிலையில் எண்ணற்ற பல குறிப்புக்களைக் கொண்டதாகும். அதாவது இன்று அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் க்'டப்பட்டு விழித்தெழுந்த நேரத்தில் பரிணாமம் பெற்றதாகும்.

சில உயிரற்ற பொருட்கள் போலல்லாது எமது ஆண்மாக்களுக்கு உயிரூட்டும் ... உணவளிக்கும் ... எமது உடலில் ஓடும் உயிர் நாடிகள் ... போல் அதிர்'டவசமாக அன்றைய அழியாத குறிப்புக்கள் அதாவது நாம் அடைந்த நீண்டகால சுதேசிய பொறியியல் சாதனைகள் என்றென்றும் எம்மிடம் நிலைத்திருக்கின்றன. நாங்கள் தேர்ந்தெடுத்துள்ள ஊழியர்களான ஆண் பெண் இருபாலாரிடத்திலும் இந்த அபிலா' வளர்ந்து நிரம்பியுள்ளது.

ம.பொ.உ.ப. பணியகத்தில், நாம் அத்தகைய அபிலா'களுக்கு புத்துயிரளித்து உயிரூட்டியுள்ளோம்.

# தலைவரின் செய்தி



பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
B.Sc.(Eng),
PG Dip, (Const.Mgt),
PG Dip, (Port & Coastal) Norway,
MIE(SL) C.Eng.MASCE
தலைவர்

நிதியாண்டு 2015 இற்கான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் (ம.பொ.உ.ப.) திரண்ட கணக்குகளையும் வருடாந்த அறிக்கையையும் சமர்ப்பிப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். தலைவர் என்ற ரீதியில் எனது முதலாவது வருடாந்தக் கூற்றை முன்வைக்கும் இத்தருனத்தில், பல பதவிகளிலும் 35 வருட காலமாக ஒரு பொறியியலாளராக பெருமையுடன் பணியாற்றிய இலங்கையிலுள்ள புகழ்மிக்க இந்தப் பொறியியல் உசாதுணை மற்றும் நிர்மாண விடயங்களுக்கான நிறுவனத்தின் தலைவராக என்னை நியமித்து எனக்கு மதிப்பளித்த மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எமது நிரல் அமைச்சாகிய மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு செயலாளராக பதவியுயர்வு பெற்றுச்சென்றுள்ள எமது நிறுவனத்தின் வலிமைக்கும் அபிலாஷக்கும் உறுதுணையாக விளங்கிய எமது முன்னாள் தலைவர் பொறியியலாளர் நிகால் ரூபசிங்க அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மெச்சத்தக்களவிலான ஒரு சாதனையை அடைவதற்கு சபையும் முகாமைத்துவக் குழுவும் மேற்கொண்ட முயற்சிகளையும் எதிர்நோக்கிய பேரண்டப் பொருளாதார மற்றும் ஏனைய சவால்களையும் குறிப்பிட்டு எமது செயலாற்றுகை பற்றி நாம் மீளாய்வு செய்வது பொருத்தமெனக் கருதுகின்றேன். மத்திய வங்கி 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 7.0மூ வீதத்தில் காணப்படுவதாக அறிக்கையிடுகின்றது. எனினும், நிர்மாணத் துறையின் வளர்ச்சி 2014 ஆம் ஆண்டிலிருந்த அத்தகைய 6.6மூ வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது 0.9மூ வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தக் காலப் பகுதியில் பாரியளவான கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படாமை இந்த வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. ம.பொ.உ.ப. தனது ஆரம்பத்திலிருந்தே நாட்டில் பாரியளவான பல உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதன்மை உசாதுணை நிறுவனமாக விளங்கி வருகின்றது. பேரண்டப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி எமது நிதி சார்ந்த செயலாற்றுகைகளை கணிசமானளவு பாதித்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் எமது குழுவின் வருமானம் 13.4 பில்லியன் ரூபா என்ற அளவில் காணப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டில் 14.9மூ வீதத்திலிருந்து அதாவது 11.4 பில்லியன் ரூபா வரை குறைவடைந்துள்ளது. இந்த வீழ்ச்சி எவ்வாறிருப்பினும், எமது நிருவாக, விற்பனை, பகிர்ந்தளிப்பு ஆகிய ஆகுசெலவுகளில் பயனுள்ள ஆகுசெலவு வினைத்திறன்களினூடாக வீதிகள் மற்றும் புகையிரத நிர்மாணத் துறை, கட்டிட நிர்மாணத் துறை ஆகியவற்றில் ம.பொ.உ.ப. பணியகத்தினால் தனது வளர்ச்சிப் போக்கைப் பேண முடிந்தது. ஆதலால் 2014 ஆம் ஆண்டிலிருந்த வரிக்கு முன்னருள்ள 4.3மூ வீத இலாப அதிகரிப்பு அதாவது 684.2 மில்லியன் ரூபாவிலிருந்து 2015 ஆம் ஆண்டில் 713.6 மில்லியன் ரூபா வரை அதிகரித்திருந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான ஒரு தொழில்முயற்சி என்ற ரீதியில், நாம் சகல ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளையும் கடுமையாகப் பின்பற்றி அனுசரித்து வருகின்றோம். ரூ.287.4 மொத்தத் தொகையொன்று திரண்ட வரிகளாகவும் ஏனைய வரிகளாகவும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டது. பணிப்பாளர்கள் சபையின் பணிப்புரைகளைக் கொண்டு மேம்பாட்டை மேற்கொள்ளும் நிமித்தம் தொடர்ச்சியாக மதிப்பிடப்படுகின்ற வலிமையான கட்டுப்பாடுகள் கண்காணிப்பு முறைமைகளைத் தாபிப்பதனூடாக நல்லாட்சியையும் பொறுப்புக்கூறும் விடயங்களையும் மேம்படுத்தும் நிமித்தம் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எதிர்காலத்தை எடுத்துநோக்கும் போது, ம.பொ.உ.ப. பொறியியல் கருத் திட்டங்களுக்கான திறந்த சந்தையில் போட்டித்தன்மை வாய்ந்த கேள்வி விலை மனு நடைமுறையில் பங்குபற்றுவதனூடாக நிதி சார்ந்த வளர்ச்சியை நிலைக்கச் செய்யும் வகையில் முழுமையான வசதிகளைக் கொண்டு காணப்படும் அதே வேளையில் வர்த்தகம் சார்ந்த செயற்பாடுகளின் பங்கொன்றுக்காக முதன்னிலைப் பட்டும் காணப்படுகின்றது. சென்ட்ரல் இன்ஜினியரிங் சேவிஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) நிறுவனம் வர்த்தக ரீதியில் ம.பொ.உ.ப. நிர்மாணக் கரமாக விளங்குவதால் பயனுள்ள பங்கபற்றலைத் தக்கவைத்துள்ளது. உசாதுணையைப் பொறுத்த வரையில், ம.பொ.உ.ப. கடந்த நாற்பது வருடங்காளாக கட்டியெழுப்பிய தனது பல துறை பெறுமதி வாய்ந்த புகழைக்கொண்டு சந்தையில் முதன்னிலை வகிக்கின்றது.

இறுதியாக, உதவி ஒத்தாசைகளை நல்கி, ஆலோசனைகளை வழங்கிய எனது சக சபை உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில், குறிப்பாக, பொது முகாமையாளருக்கு அவரின் தலைமைத்துவத்திற்கும் அர்ப்பணிப்புக்கும், அதே போன்று சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு அவர்களின் அர்ப்பணிப்புக்கும் மற்றும் எமது பெரும் பொக்கிஷமான ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமுவர்ந்த நன்றியை உரிதாக்க விரும்புகின்றேன்.

# பொது முகாமையாளரின் செய்தி



பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து
Bsc.Eng (Hons),
PG Dip(Hyd), Msc.(Struct.),CEng,
MICE (London),MIE (SL),
M.Cons E(SL), FSSE (SL)
பொது முகாமையாளர்

குறித்த மீளாய்வு ஆண்டு ம.பொ.உ.ப. தனது உள்ளக மற்றும் வெளிக்கள ரீதியான செயற்பாட்டு சூழல்களில் புதிய மாற்றங்களையும் சவால்களையும் எதிர்நோக்குவதை சுட்டிக்காட்டுகின்றது. எமது புதிய தலைவர் பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க அவர்களை நாம் வரவேற்பதோடு, ம.பொ.உ.ப. பணியகத்தின் தலைமைப் பதவியிலிருந்து விலகிச்சென்று எமது நிரல் அமைச்சின் உயர் பொறுப்புக்களைப் பொறுப்பேற்ற எமது முன்னாள் தலைவர் பொறியியலாளர் நிகால் ரூபசிங்க அவர்களுக்கும் நல்லாசிகள் பெற வாழ்த்துகின்றோம். 2015 ஆம் ஆண்டானது ம.பொ.உ.ப. பணியகத்தின் மிகவும் முறைப்படுத்தப்பட்ட பிரிவையும் அதன் நிர்மாணக் கரமாக விளங்குகின்ற CESL தேசிய பொறியியல் சந்தையில் திறமுறை ரீதியான நிலையை அடையும் வகையில் இயக்கச்செயற்பாட்டு முகாமைத்துவ வினைத்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு இரண்டு தனித்தனியான கூட்டு நிறுவனங்களாப் பிரிந்தமையையும் சுட்டிக் காட்டுகின்றது. அரசாங்கத்தில் வெளிவாரியான மாற்றம் நல்லாட்சியை வலியுறுத்தி நின்றது.

அதனையடுத்து, ஒரு துல்லியமான நிறுவனம் என்ற ரீதியில், ம.பொ.உ.ப. திறமுறை ரீதியில் சவால்களை எதிர்நோக்குவதிலும், நாட்டில் முதன்னிலை வகிக்கும் பொறியியல் உசாதுணை நிறுவனமாக தனது நிலையை வலுப்படுத்துவதிலும் மீண்டும் கவனம் செலுத்தியது. 2015 ஆம் ஆண்டு நிர்மாணத் துறையில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி பாரியளவான பொறியியல் கருத்திட்டங்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தாக மத்திய வங்கி அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. எனினும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர் பெறுமானமுடைய பொறியியல் உசாதுணை மற்றும் நிர்மாணக் கருத்திட்டங்களைப் பெற்று தொடர்ச்சியாக சாதகமான முறையில் எம்மால் சவால்களை எதிர்கொள்ள முடிந்தது. ஆதலால், முன்னைய ஆண்டுகளில் அடைந்த சாதனைகக்கு ஆதரவாகவிருந்து சம்பாத்தியங்களிலும் இலாபங்களிலும் புதியவொரு சாதனையை எம்மால் அடையக்கூடியதாகவுள்ளது. 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 1.98 பில்லியன் ரூபா என்ற வளர்ச்சியை உணர்த்தச்செய்யும் அளவுக்கு எமது பணியகத்தின் உசாதுணைப் பிரிவு சிறந்த ஒரு வருமான வளர்ச்சியை பேணியது. எதிர்பார்க்கப்பட்டவாறு நிர்மாணம் சார்ந்த வருமானம் அதே காலப் பகுதியில் 8.73 பில்லியன் ரூபா என்ற அளவை உணர்த்தும் அளவுக்கு 20% வீதத்தினால் வீழ்ச்சிகண்டுள்ளது. எமது அடிப்படை ரீதியான தகைமைகளும் அனுபவங்களும் வரும் உசாதுணைப் பிரிவுகளில் மேலும் வளர்ச்சியை அடைவதற்கு நாம் திறமுறை ரீதியில் கவனம் செலுத்த எதிர்பார்க்கின்றோம்.

சுயமாக நிதியீட்டும் ஒரு SOE என்ற ரீதியில் இந்தப் பணியகம் களுகங்கை, மொரகஹகந்தை, உமா ஓயா, ப்ரோட்லேண்ட் போன்ற தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திற்கான தனது பெறுமதிமிக்க பொறியியல் உசாதுணைகளினூடாக தொடர்ர்ந்தும் தேசிய பொருளாதாரத்திற்கு இன்றியமையாத பங்களிப்பை நல்கி வருகின்ற அதே வேளையில், எமது சகல ஒழுங்குறுத்துகைப் பொறுப்புப் பணிகளையும் முழுமையாக நிறைவேற்றி வருகின்றோம். பணியகம் நாட்டிலுள்ள அதிகமான பொறியியலாளர்களுக்கும் ஏனைய தொழில்தேர்ச்சியாளர்களுக்கும் தொடர்ந்தும் தொழில்வாய்ப்புகளை உருவாக்கி வருகின்றது.


ம.பொ.உ.ப. உன்னதமாகப் பயிற்றப்பட்ட தகைமை வாய்ந்த எமது தொழிலாளர்களினதும் துணை ஊழியர்களினதும் உதவியுடன் பல்வேறுபட்ட பொறியியல் துறைகளில் தனது பல பிரிவு நிபுணத்துவத்தையும் இணையற்ற திறமைகளையும் கொண்டு புகழும் மதிப்பும் பெற்றுக் காணப்படுகின்றது. ஆகையால், நாம் ஊழியர்களுக்கான பயிற்சியையும், திறன் அபிவிருத்தியையும் தொடர்ச்சியான ஒரு அறிவு இற்றைப்படுத்தல் நடபடிமுறையாக மதித்து இனங்காணுகின்றோம். 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில், ம.பொ.உ.ப. பதவியணியிலுள்ள 19 ஊழியர்களுக்கு பட்டப்படிப்பு பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதில் 4.5 மில்லியன் ரூபா நிதியை முதலீடு செய்தது. அத்துடன் வெளிவாரி திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவும் பொருட்டு 3.32 மில்லியன் ரூபா நிதியும் பயன்படுத்தப்பட்டது. நாம் ம.பொ.உ.ப. பணியகத்திலுள்ள ஊழியர்களின் தொழிலில் தனிப்பட்ட வளர்ச்சிக்கான வாய்ப்புகளை உறுதிசெய்யும் அதே வேளையில் அவர்களின் திறன்களை வளர்ப்பதிலும் இற்றைப்படுத்துவதிலும் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்வோம். இந்தப் பணியகம் 10 பல்கலைக்கழகங்களிலிருந்தும் 07 தொழில்நுட்ப ஃ வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவகங்களிலிருந்தும் வந்திருந்த 436 மாணவர்களுக்கு இலவசமாக கைத்தொழில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதனூடாக தேசிய பொறியியல் கல்விக்கும் பங்களித்துள்ளது. எமது சமூகப் பொறுப்புக்களின் பாகமாக, லேடி ரிஜ்வே வைத்தியசாலையிலுள்ள இருதய சத்திரசிகிச்சை கூடத்திற்கு 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான திருத்த வேலைகள் CSR முன்னெடுப்பாகக மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக, இலங்கையின் பொறியியல் கைத்தொழிலில் தனது மதிப்பையும் புகழையும் மேலும் முன்னேற்றரகரமாகப் பேணிவரும் வகையில் ம.பொ.உ.ப. பணியகத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கிய தலைவருக்கும், ஒத்துழைப்பை நல்கிய சிரேʻட முகாமையாளர்களுக்கும், அனைத்து ஊழியர்களுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். 2015 ஆம் ஆண்டு பயனுள்ள ஒரு ஆண்டாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எமது இலக்குகளை எம்மால் அடைய முடிந்தது. எதிர்வரும் ஆண்டுகளிலும் எமது எதிர்காலக் குறிக்கோள்களை எம்மால் சாதகமான முறையில் அடைய முடியும் எனவும் நம்புகின்றோம்.

# நிதி சார்ந்த முக்கிய குறிப்புகள்

| | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூ | ரூ | ரூ | ரூ |
| நிர்மாணம் சார்ந்த வருமானம் | 9,458 | 11,274 | 8,734 | 11,127 |
| உசாதுணை சார்ந்த வருமானம் | 1,966 | 2,128 | 1,976 | 2,132 |
| திரண்ட வருமானம் | 11,424 | 13,402 | 10,710 | 13,260 |
| முழுமொத்த இலாபம் | 1,744 | 1,914 | 1,262 | 1,603 |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம் | 714 | 684 | 596 | 552 |
| வரிக்குப் பின்னருள்ள தேறிய இலாபம் | 426 | 412 | 345 | 309 |
| மொத்தச் சொத்துக்கள் | 16,804 | 15,951 | 16,607 | 17,027 |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 0.50 | 0.50 | 0.50 | 0.50 |
| மொத்த ஒப்புரவு | 4,956 | 4,530 | 4,748 | 4,403 |
| மொத்த ஒப்புரவு | 16,804 | 15,951 | 16,607 | 17,027 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 13,676 | 12,618 | 13,876 | 14,087 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 11,653 | 11,232 | 11,683 | 12,442 |

# குழுவின் நிதி சர்ந்த முக்கிய குறிப்புகள்



# பணிப்பாளர்கள் சபை



### பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க

BSc.(Eng), PG Dip (Const.Mgt), PG Dip , (Port & Coastal) Norway, MIE(SL) C.Eng, MASCE

### தலைவர்

இவர் 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர்கள் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதே போன்று இவர் ம.பொ.உ.ப. நிர்மாண பொறியியல் பிரிவாகிய சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் லிமிற்றட் (தனியார்) நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார். இவர் 2010 ஆம் ஆண்டு முதல் ஒன்றிணைந்த மேலதிகப் பொது முகாமையாளராக (EPC) அதன் நடவடிக்கைகளின் போது பணிப்பாளர்கள் சபைக்கு நேரடியாக உதவி வந்தார். இவர் முழுமையாக ம.பொ.உ.ப. பல பதவிகளையும் வகித்து 34 வருட காலம் பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் பரந்த அனுபவம் வாய்ந்தவராவார். 1983 ஆம் ஆண்டு விக்டோரியா நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் வதிவிடப் பொறியியலாளராக தொழில் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் கருத்திட்டப் பொறியியலாளராகவும் (1995), கருத்திட்டக் குழு தலைவராகவும் (1996), பிரதிப் பொது முகாமையாளராகவும் (2005) மற்றும் 2010 ஆம் ஆண்டு மேலதிக் பொது முகாமையாளராகவும் பதவி வகித்த காலங்களில் அதிக பொறுப்புக்களையும் பதவியுயர்வுகளையும் பெற்றுள்ளார். இவரின் நீண்டகால தொழில் வாழ்க்கையில் பொறுப்பேற்ற பல கருத்திட்டங்களின் முகாமைத்துவத்தினூடாக அடைந்த சிவில் பொறியியல் பற்றிய விஷேட அறிவும் பரந்த நிபுணத்துவ அறிவும் இவரை பணிப்பாளர்கள் சபை வரைக்கும் கொண்டுசென்றுள்ளன.



### திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க

LL. B (Sri Lanka), சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, கம்பனிகள் செயலாளர், பதில் கடமைபுரியும் நீதிவான்

### தொழிற்படு பணிப்பாளர்

இவர் 2015 ஆம் ஆண்டு தொழிற்படு பணிப்பாளராக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியினுள் தொழிற்படு பணிப்பாளராக ம.பொ.உ.ப. பணியகத்தில் பணியாற்றினார். அதே போன்று இவர் சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் தனியார் கம்பனியின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார். இன்று இவர் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், பாதுகாப்பு அமைச்சின் பணிப்பாளராகவும், ரக்னா (தனியார்) நிறுவனத்தின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார். இதற்கு முன்னர் இவர் நீர் வளங்கள் சபையின் பணிப்பாளர் பதவியையும், உரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பதவியையும் வகித்துள்ளாரர். ஆரம்பத்தில் இலங்கை சட்டத்தரனிகள் வட மத்திய மாகாண பிராந்திய உப தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.



### பொறியியலாளர் என். ரூபசிங்க

BSc.Eng.(Hons),PG Dip. (Hydropower)Norway, C.Eng.,MIE (SL), MICE (London), நில அளவையாளர்

### பணிப்பாளர்

2015 ஆம் ஆண்டு இவர் பணிப்பாளராக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டார். 2015 ஆம் ஆண்டிலிருந்து பொதுத் திறைசேரி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் செயலாளராகவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திப் பொறுப்புக்களையும் வகிக்கின்றார். 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ம.பொ.உ.ப. தலைவராகப் பணியாற்றினார். 1981 ஆம் ஆண்டு சிவில் பொறியியலாளர் ஒருவராக ம.பொ.உ.ப. இணைந்து, வதிவிடப் பொறியியலாளர், பிரதான வதிவிடப் பொறியியலாளர், கருத்திட்ட முகாமையாளர், மேலதிகப் பொது முகாமையாளர், பொது முகாமையாளர் ஆகிய பதவிகளை வகித்து 34 வருடங்களுக்கும் அதிக கால பரந்த பொறியியல் மற்றும் முகாமைத்துவ ரீதியான அனுபவங்களை பணியகத்தினூடாகப் பெற்றுள்ளார். பொறியியல் கொள்வனவு மற்றும் நிர்மாண (EPC) பிரிவைத் தாபிக்கும் பொருட்டு கருத்திட்ட முகாமையாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் நிர்மாணம்) மற்றும் மேலதிகப் பொது முகாமையாளர் (EPC) ஆகிய பதவிகளை வகித்து முன்னின்று வழிகாட்டினார்.



### பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர

BSc.(Eng.), C.Eng., MICE(UK), FIE(SL)

### பணிப்பாளர்

இவர் 2015 ஆம் ஆண்டு சபைக்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் முன்னர் 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை ம.பொ.உ.ப. தலைவராகப் பணியாற்றியுள்ளார். இவர் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் பொறியியலிலும் முகாமைத்துவத்திலும் பரந்த அனுபவத்தைப் பெற்றுள்ளார். இவர் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வடிவமைப்பு பொறியியலாளராகவும் (1965 முதல்1967 வரை), வதிவிடப் பொறியியலாளராகவும் (1967-1968) மற்றும் வதிவிட நிர்மாண முகாமையாளராகவும் (1970 முதல் 1972 வரை) பணியாற்றினார். இவர் மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தில் பிரதான கருத்திட்டப் பொறியியலாளராக (1977) இணைந்து, பின்னர் ம.பொ.உ.ப. பணியகத்தில் மேலதிகப் பொது முகாமையாளராகவும் (1978 - 1985), நீர் வளங்கள் திட்டமிடலுக்கான மேலதிகப் பொது முகாமையாளராகவும் (1986 - 1995), பொது முகாமையாளராகவும் (1995 முதல் 1996 வரை) பதவியுயர்வு பெற்றார். இவர் ஐ.இ. வனங்கள் பற்றிய ஆணைக்குழு தலைமை அலுவலகத்திலும் (1968 முதல் 1970 வரை) பணியாற்றினார். இவர் ஐ.இ. கென்ட் நாட்டு சபையில் பிரதிப் பிரிவுப் பொறியியலாளராகவும் (1972 முதல் 1977 வரை).



### திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க

BSc., Dip. Mgt., FCA, பட்டயக் கணக்காளர்.

### பணிப்பாளர்

இவர் 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர்ள் சபைக்கு பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டார். இவர் 2004 ஆம் ஆண்டு முதல் ம.பொ.உ.ப. பணியகத்தில் பணிப்பாளராக இருந்து வருகின்றார். இவர் சென்ட்ரெரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் கம்பனி செயலாளராக பணியாற்றுகின்றார். இவர் நிதி முகாமைத்துவதிலும் கணக்கீடுகளிலும் பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் 1988 ஆம் ஆண்டிலிருந்து காபரேட்டு வி'ன் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், 1994 ஆம் ஆண்டிலிருந்து பைனான்ஸியல் கன்ஸ்ஸால்டென்ட்ஸ் என்ட் யெலீட் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.



### திரு பி.பீ.எஸ்.சி. நொரிஸ்

B.Sc. (வியாபார நிருவாகம்) ஆனஸ்ட் - ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், பொது நிருவாக முதுமாணிப் பட்டம் - அவுஸ்திரேலியா, LICA - இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்

### பணிப்பாளர்

இவர் 2015 ஆம் ஆண்டில் ம.பொ.உ.ப. பணியகத்தில் திறைசேரியைப் பிரதிநிதிப்படுத்தும் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது ம.பொ.உ.ப. பணியகத்தின் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் தலைவராக பணியாற்றுகின்றார். இவர் நிதி அமைமச்சினதும் பொது நிதிகள் திணைக்களத்தினதும் பணிப்பாளர் பதவியை வகிக்கின்றார். இவர் இலங்கை நிருவாக சேவையில் (இ.நி.சே.) பல பரந்த அனுபவத்தைக் கொண்டுள்ளார். இவர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சில் இ.நி.சே. பதவியான உதவிச் செயலாளர் பதவியில் (1998) தனது தொழிலை ஆரம்பித்து, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினதும், அரசிறை மற்றும் பொருளாதார விவகாரங்கள் திணைக்களத்தினதும் உதவிப் பணிப்பாளராகவும் (2002), வர்த்தக வரி மற்றும் ஊக்குவிப்புக் கொள்கைத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராகவும் (2009), அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் (2009) பணியாற்றினார். இவர் 2011 ஆம் ஆண்டில் சுங்கப் பணிப்பாளராகவும், 2014 ஆம் ஆண்டில் பெற்றோலிய கைத்தொழில்கள் அமைச்சின் மேலதிகப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 2014 ஆம் ஆண்டு இளைஞர் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் திறன்கள் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில் வழிகாட்டல் நிபுணராகவும் பணியாற்றியுள்ளார்.

# முகாமைத்துவக் குழு

**பொறியியலாளர் ஜி.டீ.எ. பியதிலக்க**
தலைவர் , / AGM (EPC-WP-1)

**பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து**
பொது முகாமையாளர்

**பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார**
கூட்டு. மேலதிகப் பொ.மு. ( EPC )

**பொறியியலாளர் ரீ.டி. விக்ரமரட்ன**
கூட்டு.மேலதிகப் பொ.மு. (C) /
உ.பொ.மு. (நீர் வளம்)

**பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க**
மேலதிகப் பொ.மு. ( EPC-WP 1 )

**பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார**
மேலதிகப் பொ.மு. (EPC-தெற்கு)

**பொறியியலாளர் எச்.எம். நந்தசேன**
மேலதிகப் பொ.மு. (EPC-மத்திய)

**பொறியியலாளர் டீ.ஆர். மித்ர**
மேலதிகப் பொ.மு. (வட மத்திய)

**பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய**
மேலதிகப் பொ.மு. (விஷேட கருத்திட்டம் - 02)

**பொறியியலாளர் ஜி.ஆர்.ஏ.எஸ். குணதிலக்க**
மேலதிகப் பொ.மு. (EPC-கிழக்கு)

**பொறியியலாளர் (திருமதி) எச்.எம்.எஸ். ரூபசிங்க**
மேலதிகப் பொ.மு. (EPC-துணைச் சேவைகள்)

**பொறியியலாளர் டப்ளியூ.ஏ. ஆரியதிலக்க**
மேலதிகப் பொ.மு. (வட பிராந்திய வீதிகள்)

**பொறியியலாளர் கே.எல்.எஸ்.ஆர். சஹபந்து**
உ/மேலதிகப் பொ.மு. (வடிவமைப்பு 01)

**பொறியியலாளர் பி.சி. ஜினசேன**
மேலதிகப் பொ.மு. (DHQC)

**பொறியியலாளர் ஜி.ஏ.டீ.எல்.ஜே. செனவிரட்ன**
மேலதிகப் பொ.மு. (E & M)

**பொறியியலாளர் யூ.எஸ். கருணாரட்ன**
மேலதிகப் பொ.மு. (EPC-WP 2)

**பொறியியலாளர் (திருமதி) ஏ.எ.பி. அதிகாரி**
உ/மேலதிகப் பொ.மு. (வடிவமைப்பு 02)

**பொறியியலாளர் ரீ.ஜி.டீ.ரீ. தர்மவர்தன**
உ/மேலதிகப் பொ.மு. (கருத்திட்டங்கள்)

**கட்டடக்கலைஞர் டப்ளியூ.கே. லலித் ஹேவகே**
மேலதிகப் பொ.மு. (கட்டடக்கலை)

**பொறியியலாளர் ஜ.ஆர்.பி. குணதிலக்க**
உ/மேலதிகப் பொ.மு. (விஷேட கருத்திட்டங்கள் - 01)

**பொறியியலாளர் பி.எம்.பி.சி. குணதிலக்க**
உ/மேலதிகப் பொ.மு. (EPC-தென் கிழக்கு)

**பொறியியலாளர் எஸ்.ஏ.யூ.டீ.சி. சிறிவர்த்தன**
உ/மேலதிகப் பொ.மு. (நீர் வளம்)

**பொறியியலாளர் டப்ளியூ.இ.பி. ரஞ்ஜன் குமார**
உ/மேலதிகப் பொ.மு. (சபரகமுவ)

**பொறியியலாளர் எம்.என். குணசேன**
உ/மேலதிகப் பொ.மு. (ஊவா)

**பொறியியலாளர் ஏ. புஷ்பராஜா**
உ/மேலதிகப் பொ.மு. (EPC-வடக்கு)

**பொறியியலாளர் எச்.ஆர்.டப்ளியூ.கே. ஹீன்தெனிய**
பி.பொ.மு. (கம்பஹா)

**பொறியியலாளர் எஸ்.எஸ்.ஏ. களுகல்தெனிய**
உ/மேலதிகப் பொ.மு. (வடிவமைப்பு 03)

**பொறியியலாளர் ஏ.ஏ. விராஜ் டயஸ்**
உ/மேலதிகப் பொ.மு. (NRM&LS)

**திருமதி லியனகே தேவிகா**
பி.பொ.மு. (QS)

**பொறியியலாளர் (திருமதி) ஏ.சி. ஜயதிலக்க**
உ/பி.பொ.மு. (IT)

**திரு ஜே.எம்.பீ. ஜயவீர**
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்

**திருமதி எஸ்.எச்.எச்.சி.யூ. சேனாநாயக்க**
சட்ட அலுவலர்/சபைக்கான செயலாளர்

**திரு ஜே.டப்ளியூ. ரட்நாயக்க**
உசாவுநர் (மனித வளம்)

**திரு யூ.என்.பீ. மாவத்தகம**
பி.பொ.மு. (நிதி)

# பணிப்பாளரின் அறிக்கை

## பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை - 2015

### சட்டமுறை அந்தஸ்து

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பல துறை சார்ந்த உசாதுணை சேவைகளை வழங்கும் நிமித்தம் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது 1959 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப் பட்ட ஒரு நியதிச்சட்டமுறையான ஒரு நிறுவனமாகும்.

### பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புப் பணிகள்

பணிப்பாளர்கள் சபை பொது வளங்களின் பாதுகாவலன் என்ற ரீதியின் தனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் உரிமைகளையும் நல்லெண்ணத்துடனும் நேர்மையுடனும் நிறைவேற்ற வேண்டும். இறுதியாக பொதுமக்களினால் பாரியளவில் சுமக்கப்படும் சரியான திட்டமின்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினதும் ஏதாவது தீர்மானங்களினதும் விளைவாக வரும் தனது கடினமான பொறுப்புக்கள் தொடர்பில் சபை எப்பொழுதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

### மிகச்சிறந்த செயன்முறைகள்

கூட்டிணைந்த நிருவாகத்திலுள்ள மிகச்சிறந்த செயற்பாடுகள் தொழில்முயற்சியின் சிறந்த அக்கறைகளில் வெளிப்படையாகவும் ஆக்கபூர்வமாகவும் திறமுறைத்திட்டத் தீர்மானங்களை விவாதிக்கக்கூடிய வகையில் சபையின் சிறந்த தொழிற்பாட்டிற்கும் விழிப்புணர்வுக்கும் உதவியாகவும் அமையும். இந்த நோக்கத்தின் நிமித்தம், சபை உறுப்பினர்களின் புரட்சிகரமான கருத்துக்களுக்கும் செவிசாய்க்கப்படுதல் வேண்டும். தனியானவொரு புரட்சியா-ளரினால் சபையின் பெரும் வித்தியாசத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் இருக்கின்றது. மிக உன்னதமான முறையில் செயலாற்றுகின்ற கம்பனிகள் ஒரு கடப்பாடு என்ற ரீதியிலும் பாராதீனப்படுத்த முடியாத ஒரு விடயம் என்ற ரீதியிலும் புரட்சி தொடர்பில் மிகவும் தீவிரமாக விவாதிக்ககூய பணிப்பாளர்கள் சபைகளைக் கொண்டிருக்கும்.

### தலைமைத்துவம் சார்ந்த வகி பங்கு

தனது தலைமைத்துவம் சார்ந்த வகிபங்கில் பணிப்பாளர்கள் சபையின் கடமைகளில் பின்வரும் அம்சங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும்.

- தொழில்முயற்சியின் செயற்பணியையும் அந்தத் தொழில்முயற்சி தனது பங்குதாரர்களினதும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளினதும் நலன்களில் எவ்வாறு சிறந்த முறையில் பணியாற்ற முடியும் என்பதையும் நிர்ணயித்தல்.
- சட்டமுறையான தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றனவா மற்றும் சங்க விஞ்ஞாபன உறுப்புரைகளின்ஃ கூட்டிணைந்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க குறித்த தொழில்முயற்சி இயங்குகின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளல்.
- முகாமைத்துவத்தின் மூலம் ஆகக்கூடிய அடைவுகளையும் தனது பங்கு தாரர்களுக்கும் ஏனைய அக்கறையுடைய தரப்புகளுக்குமான நன்மைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்படுத்துவதற்கான கொள்கைகளை வகுத்தமைத்தல்.
- எதிர்கால வளர்ச்சிக்கான நீண்டகாலக் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் வகுத்தமைக்கும் பொருட்டு வழமையான காலப் பகுதிகளில் பொதுக் கொள்கைக் குறிக்கோள்களை மீளாய்வு செய்து திறமுறை ரீதியான பணிப்புரைகளை விடுத்தல்.
- குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதற்குத் தேவையான நிதிகள் தொழில்முயற்சியின் சுமுகமான தொழிற்பாட்டிற்கு இடையூறுகள் ஏற்படாத சமயோசித அடிப்படையில் ஈட்டப்படுகின்றனவா அல்லது பெற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற் கொள்ளல்.
- போதிய பதிவுகளையும் கணக்குப் புத்தகங்களையும் பேணி சரியான பொறுப்புக்கூறும் தன்மையை உறுதிப்படுத்துதல்.
- அழிவுகள், பின்னடைவுகள் முதலியவற்றுக்கு எதிராக தொழில்முயற்சியை உந்தும் வகையில் பயனுள்ள இடர் முகாமைத்துவ முறைமை காணப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.

### மேற்பார்வை வகிபங்கு

தனது மேற்பார்வை வகிபங்கைப் பொறுத்த வரையில் பணிப்பாளர்கள் சபை தொழில்முயற்சியின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கும் அதே நேரம் சிரேஷ்ட முகாமையாளர்களுக்கு இடையில் பரந்தளவில் பகிரப்பட்ட பொறுப்புடன் செவ்வைகளாகவும் சமநிலைகளாகவும் பயனுள்ள சிறந்த கட்டுப்பாட்டு முறைமைகளின் தாபிப்புக்கும் பொறுப்புடையதாக விளங்கும்.

இந்த நோக்கத்தின் நிமித்தம் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருக்கும்.

- சபையின் கொள்கைகள் அதன் வகுத்தமைக்கப்பட்ட அதே கருத்திலும் பெருமளவில் பொதுமக்களினதும் நிறுவனங்களினதும் சிறந்த அக்கறையிலும் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.
- தொழில்முயற்சி அதன் இயக்கச்செயற்பாட்டுப் போக்கிலுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளும் பொருட்டு தகவல் அறிக்கைகளை முகாமை செய்தல் மற்றும் செயலாற்றுகையை மதிப்பிடுதல் ஆகிய வழிகளில் முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகளைக் கண்காணித்தல்.
- பெறுபேறுகள் விரும்பிய எதிர்பார்ப்புகளுடன் பொருந்தவில்லை என்றால், குறிக்கோள்கள் அடையப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற்கெ-ாள்ளும் பொருட்டு தாமதமின்றி பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தகுதிவாய்ந்த ஆட்களை முகாமையாளர்களாக நியமித்து தத்தமது தொழிற்பாடுகளை சுயாதீனமாகவும் பொறுப்புக்கூறக்கூடிய ஒரு விதத்திலும் மேற்கொள்வதற்கான உகந்தவொரு சூழலை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம், சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்களுக்கு இடையில் சரியான பிரதிநிதித்துவமும் கூட்டு முயற்சியும் காணப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.
- வருடாந்தப் பொதுக் கூட்டங்களிலும் /பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழு (COPE) கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் அக்கறையுடைய தரப்புகளுக்கு அறிக்கையிடுதல்.

## பணிப்பாளர் சபை

சபை மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தின் தலைவர் அடங்கலாக ஆறு (06) சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது

- பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க — **தலைவர்**
- திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க — **தொழிற்படு பணிப்பாளர்**
- பொறியியலாளர் என். ரூபசிங்க — **பணிப்பாளர்**
- திரு எஸ். எம். என். எல். சேனாநாயக்க — **பணிப்பாளர்**
- பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர — **பணிப்பாளர்**
- திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் — **பணிப்பாளர்**

## கூட்டங்களும் வரவும்

சபை நிதியாண்டு 2015 காலப் பகுதியில் 14 சந்தர்ப்பங்களில் கூடியுள்ளது. பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களது வரவு பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவி | 2015 | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பெப் 12 | மார்ச் 26 | ஏப் 29 | மே 29 | யூன் 03 | யூன் 30 | யூலை 27 | ஆகஸ் 13 | ஆகஸ் 31 | செப் 30 | ஒற் 29 | நவ 26 | திச 04 | திச 30 |
| பொறியியலாளர் ஜி.டீ.எ. பியதிலக்க | தலைவர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க | தொழிற்படு பணிப்பாளர் | √ | √ | √ | √ | - | √ | - | √ | - | √ | √ | √ | - | √ |
| பொறியியலாளர் என். ரூபசிங்க | பணிப்பாளர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| திரு எஸ். எம். என். எல். சேனாநாயக்க | பணிப்பாளர் | √ | - | √ | √ | √ | √ | √ | √ | - | √ | √ | √ | √ | √ |
| பொறியியலாளர் எச். பீ. ஜயசேக்கர | பணிப்பாளர் | √ | √ | - | √ | √ | √ | √ | - | - | √ | √ | √ | √ | √ |
| திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் | பணிப்பாளர் | - | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |



# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

PED 55 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், பொருத்தமான இலங்கைக் கணக்கீட்டு நியமங்களையும் ஏனைய ஏற்புடைய சட்டமுறையான தேவைப்பாடுகளையும் அனுசரித்து நிதி சார்ந்த அறிக்கையிடல் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை நிச்சயப்படுத்தி-ற்கொள்வதற்கான மேற்பார்வை செய்யும் பணியில் சபைக்கு உதவும் பொறுப்புப் பணியை கணக்காய்வுக் குழு கொண்டுள்ளது. அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள், ஒழுங்கு விதிகள் மற்றும் உரிய விதிமுறைகள் அனைத்தும் அனுசரிக்கப்படுகின்ற என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளும் பொருட்டு ஒவ்வாமை தொடர்பில் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தல், தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல், கண்காணித்தல் என்பவற்றினூடாக குழு மேலும் சபைக்கு உதவ வேண்டும். கணக்காய்வுக் குழு உள்ளகஃவெளிக்களக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ சுற்று நிறூபங்கள், COPE குழுவின் சிபாரிசுகள் என்பவற்றை மீளாய்வு செய்து பரிகார நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு சபைக்கு உதவ வேண்டும். இந்தக் குழு மேலும் போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் சபைக்கு உதவ வேண்டும். குழு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடி அதன் பின்னர் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதை இலகுபடுத்தும் வகையில் கூட்டத்தின் கூட்டறிக்கைகளுடன் உடனடியாக தனது சிபாரிசுகளை பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும். கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறைகள் பணிப்பாளர்கள் சபையினால் வெளியிடப்படுகின்றன.

## குறிப்பு விதிமுறைகள்

குழு PED 55 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையினால் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விசேட குறிப்பு விதிமுறைகளினால் நிருவகிக்கப்படுகின்றது. குழு தனது பொறுப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் தேவைப்பாடுகளுக்கும் மற்றும் குறிப்பு விதி முறைகளுக்கும் ஏற்ப பின்வரும் குறிக்கோள்களில் ஒருமுகப்பட்டுக் காணப்படுகின்றது.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை நிர்ணயித்தல் மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.
- பணியகத்தின் சகல செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்து மதிப்பிடுதல்.
- ஆகுசெலவு பயனுக்காகவும் வீணான செலவினம் முதலியவற்றைத் தவிர்ப்பதற்காகவும் வழமையான இடைவெளிகளில் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.
- வெளிக்களக் காய்வாளர்களுடன் தொடர்புகளைப் பேணி கணக்காய்வாளர் அதிபதியின் / வெளிக்களக் காய்வாளர்களின் முகாமைத்துவம் தொடர்பான சுற்றுநிறுபங்களைப் பின்பற்றுதல்.
- இணங்க நியதிச்சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள் என்பன குறித்த தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்பற்ற-ப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளல்.
- கணக்கீட்டுக் கொள்கைகள் அனுசரிக்கப்படுகின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.
- பரிகார நடவடிக்கையின் நிமித்த்ம உள்ளகக் கணக்காய்வு/வெளிக்களக் கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ சுற்று நிறூபங்கள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
- பொதுத் தொழில்முயற்சிகள் பற்றிய குழுவின் சிபாரிசுகளினது / பணிப்புரைகளினது செயற்படுத்துகை பற்றி மீளாய்வு செய்தல்.
- வருடாந்த அறிக்கையில் உள்ளீர்க்கும் நோக்கத்திற்கான குழுவின் முடிவுகள் பற்றிய அறிக்கையைத் தயாரித்தல்.
- தொழில்முயற்சி சார்ந்த துணை நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் அத்தகைய உரிய பிரச்சினைகளை வழமையான ஒரு அடிப்படையில் அடையாளப்படுத்துதல்.

## குழுவின் உறுப்பினர்கள்

PED 55 ஆம் இலக்கப் பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் எற்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக் குழு தனக்குத் தலைமை வகிக்கும் திறைசேரியினது பிரதிநிதி அடங்கலாக நிறைவேற்று சாராத மூன்று (03) சபை உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்கின்றது.

கணக்காய்வுக் குழுவின் தற்போதைய உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் — **குழுவின் பணிப்பாளர்/தலைவர்**
- திரு எஸ்.எம்.எல். சேனாநாயக்க — **பணிப்பாளர்**
- பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர — **பணிப்பாளர்**

குழு நிதி மற்றும் முகாமைத்துவ நிபுணத்துவத்துடன் வர்த்தக மற்றும் அரச துறைகளில் கலப்பு அனுபவத்தைக் கொண்டுள்ளது.

சபைக்கான செயலாளர் திருமதி எஸ்.எச்.எச்.சி.யூ. சேனாநாயக்க கணக்காய்வுக் குழுக்கான செயலாளராகத் தொழிற்படுகின்றார். பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் திரு ஜயவீர கணக்காய்வுக்குக் குழுவுக்கான ஏற்பாட்டாளராகத் தொழிற்படுகின்றார்.

## கூட்டங்களும் வரவும்

கணக்காய்வுக் குழு நிதியாண்டு 2015 காலப் பகுதியில் ஐந்து சந்தர்ப்பங்களில் கூடியது. குழுவின் உறுப்பினர்களது கூட்டத்திற்கான வரவு பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | 2015 | | | | |
|---|---|---|---|---|---|
| | 07 ஏப்ரல் | 14 மே | 15 யூலை | 21 ஒற்போபர் | 10 திசம்பர் |
| திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ் | √ | √ | √ | √ | √ |
| திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க | √ | √ | √ | √ | √ |
| பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர | √ | - | √ | - | √ |



சபையின் ஏனைய உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் அதே போன்று வெளிக்களக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் பொருத்தமான நேரத்தில் கலந்துரையாடல்களில் பங்கேற்குமாறு அழைக்கப்படுகின்றனர். கணக்காய்வின் நடவடிக்கைகள் பற்றி வழமையாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடப் படுகின்றது.

## இணக்கப்பாடு

குழு நிதிக் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அனுசரிக்கின்றனவா என்பதை நிச்சயப்படுத்திற் கொள்ளும் பொருட்டு உரிய சட்டவாக்கங்களுக்கும் ஒழுங்குறுத்துகை சார்ந்த தேவைப்பாடுகளுக்கும் இணங்கத் தொழிற்படும் பொறுப்பை சபைக்கு ஒப்படைத்துள்ளது. ஏற்கெனவேயிருக்கின்ற போதிய கட்டுப்பாடுகளையும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளையும் மதிப்பீடு செய்த குழு ஏற்கெனவே இருக்கின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்குத் தேவையான மேலதிகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் தணிப்புத் திறமுறைத்திட்டங்கள் என்பன தொடர்பில் சபைக்கு சிபாரிசுகளை முன்வைத்தது. மேலும், குழு பணியகத்தின் வழமையான இயக்கச்செயற்பாடுகளை மீளாய்வு செய்து தனது வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்கால நன்மைகளை மதிப்பிட்டுள்ளது. அதற்கிணங்க, நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பிரயோகிக்கப்பட்ட நிகழ் அக்கறை எடுகோள் சரியானது என்பதை குழு உறுதிசெய்கின்றது.

## வெளிக்களக் கணக்காய்வு

கணக்காய்வாளர் அதிபதி எமது பணியகத்தின் வெளிக்களக் களக்காய்வாளராகத் தொழிற்படுகின்றார்.

**திரு பி.பீ.எஸ்.சி. நொனிஸ்**
**தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**



# கூட்டிணைந்த தகவல்களும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

## 1. கூட்டிணைந்த தகவல்கள்

### 1.1 அமைவிடமும் சட்டமுறையான அமைப்பும்

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் 1957 இன் 49 ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப் பட்ட இலங்கையில் அமைந்திருக்கும் ஒரு அரச கூட்டுத்தாபனமாகும். இந்தப் பணியகத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2015 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்தினது திரண்ட நிதிக் கூற்றுக்கள் பணியகத்தினதும் துணை நிறுவனங்களினதும் (இதனகத்துப் பின்னர் குழு எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திரண்ட நிதிக் கூற்றுக்களை உள்ளடக்கியிருக்கும்.

பணியகத்தினது சகல கம்பனிகளினதும் நிதிக் கூற்றுக்கள் திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஒரு பொதுவான நிதியாண்டைக் கொண்டிருக்கும்.

### 1.2 அடிப்படை செயற்பாடுகளும் இயக்கச்செயற்பாடுகளின் தன்மையும்

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் அடிப்படை ரீதியில் நிர்மாணம் சார்ந்த வியாபார நடவடிக்கைகளிலும், உசாதுணை, மற்றும் பொறியியல் சம்பந்தப்பட்ட ஏதாவது செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது.

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் (CESL)

பணியகத்திற்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணைக் கம்பனியாகும். இது ஒரு குழு உறுப்பினராக அல்லது கூட்டு வியாபார ஸ்தாபனமாக விளங்குகின்றது என்ற ரீதியில் அல்லது அதன் சொந்தத்தில் அதற்கான இணைந்த அல்லது இடைநேர் சம்பந்தப்பட்ட சகல அம்சங்களிலும் அதே நேரம் சிவில், மின்சாரம் மற்றும் எந்திரப் பொறியியல் ஆகிய துறைகளிலும் வடிவமைப்பு நிர்மாண, சுழற்சிச்சாவி மற்றும் ஏனைய வகை நிர்மாணப் பணிகள் முதலியயவற்றை இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் ஏற்று நிறைவேற்றுவதில் ஈடுபடுகின்றது.

## 2. கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

### 2.1 இணக்கப்பாடு பற்றிய கூற்று

பணியகத்தினதும் குழுவினதும் நிதிக் கூற்றுக்கள் முழுமையான வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றறை உள்ளடக்கியிருக்கும். இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (இ.ப.க.நி.) வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (SLFRS மற்றும் LKAS) தயாரிக்கப்பட்டுள்ளன.

துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் பணியகம் எடுத்துரைக்காத வரையில் பணியகத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப் படுகின்றன.

### 2.2 அளவீட்டு அடிப்படை

நிதி நிலைக் கூற்றிலுள்ள பின்வரும் விடயங்கள் தவிர, திரண்ட நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- நிதி சார் சொத்துக்களும் பொறுப்புக்களும் நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளன.
- சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் நியாய விலைப் பெறுமானங்கள் பரிவர்த்தனைத் திகதியிலுள்ள ஊகிக்கப்பட்ட ஆகுசெலவாக இனங்காணப்படுகின்றன.

பணியகத்தின் பணிப்பாளர்கள் எதிர்காலத்தில் எதிர்வுகூறக்கூடிய நிகழும் ஒரு கருசனை விடயமாக பணியகத்தின் ஆற்றல் தொடர்ந்திருக்குமா என்பது பற்றிய ஒரு மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் வியாபாரத்தை ஒழிப்பதற்கான அல்லது முடிவுறுத்துவதற்கான ஒரு தேவை பற்றி எதிர்வு கூறவில்லை.

### 2.3 தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயம்

திரண்ட நிதிக் கூற்றுக்கள் பணியகத்தின் தொழிற்படு நாணயமான இலங்கை ரூபாவில் (ரூ.) எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.4 மதிப்பீடுகளினதும் தீர்வுகளினதும் பயன்

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை (SLFRSs) அனுசரித்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் விடயமானது கொள்கைப் பிரயோகத்திற்கும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளுக்கும் பயனுள்ள தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்றது.

மதிப்பீடுகளும் சம்பந்தப்பட்ட எடுகோள்களும் வரலாற்று அனுபவத்தினதும் ஏனைய வளங்களிலிருந்து உடனடியாகத் தென்படாத சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் பெறுமானங்கள் தொடர்பான தீர்வுகளை மேற்கொள்ளும் அடிப்படையை உருவாக்குவதன் பயனாக வரும் சந்தர்ப்ப சூழ்நிலையின் கீழ் நியாயமனளவில் நம்பப்படுகின்ற ஏனைய பல காரணிகளினதும் அடிப்படையில் அமைந்திருக்கும்.

மதிப்பீடுகளும் முக்கிய எடுகோள்களும் ஒரு நிகழும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மீளாய்வு நடைமுறை நிதியாண்டையும் எதிர்கால நிதியாண்டையும் பாதிக்குமாயின் அந்த மீளாய்வு காலப் பகுதியில் அல்லது அந்த மீளாய்வு அந்த நிதியாண்டை மாத்திரம் பாதிக்குமாயின், மதிப்பீடுகள் மீளாய்வு செய்யப்படுகின்ற காலப் பகுதியில், கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

திரண்ட நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான பயனைக்கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் காணப்படும் முக்கிய தீர்வுகள் பற்றிய விபரங்கள் கீழ்காணும் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| முக்கிய கணக்கீட்டு மதிப்பீடு/தீர்வு | குறிப்பு இல. | பக்க இல. |
|---|---|---|
| ஒப்பந்த வருமானம், ஆகுசெலவு, மற்றும் நிறைவு விகிதம் | 09 | 28 |

நிதிக் கூற்றுக்களில் பொருண்மையான ஒரு தீர்வின் பயனாக வரும் முக்கிய ஒரு பொறுப்பைக் கொண்டுள்ள எடுகோள்கள், மதிப்பீடுகள், நிச்சயமற்றதன்மைகள் என்பன தொடர்பான விபரங்கள் கீழ்காணும் அட்டவணையில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

| முக்கிய கணக்கீட்டு மதிப்பீடு/தீர்வு | குறிப்பு இல. | பக்க இல. |
|---|---|---|
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 15 | 29/30 |
| ஊழியர் நன்மைகள் | 22 | 32 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 23 | 33 |

### 2.5 கணக்கீட்டுக் கொள்கைகளிலுள்ள மாற்றம்

#### (a) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு

கம்பனி தற்போதைய பெறுமானத்தில் தனது திட்டவட்டமான ஓய்வூதிய கடப்பாட்டை மதிப்பிட்டு அளிவிடும் பொருட்டு ஊழியர் நன்மைகள் என்ற LKAS 19 நியமத்தைப் பின்பற்றியது. திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு ஊழியர் நன்மைகள் என்ற LKAS 19 நியமத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட அலகுக் கடன் (எ.அ.க.) முறையியலைப் பிரயோகித்து சுயாதீனக் கணிப்பீட்டாளர்களினால் வருடாந்தம் கணிப்பிடப்படுகின்றது. திட்டவட்டமான நன்மைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான அத்தகைய கணிப்பீட்டு இலாபங்களும் நட்டங்களும் ஏனைய முழுமையான வருமானத்தில் அவை எழும் காலப் பகுதியில் முழுமையாக இனங்காணப்படுகின்றன.

## 3 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 திரட்டு அடிப்படை

#### (a) துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்கள் அனைத்தும் குழுவினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் அந்தக் கட்டுப்பாடு ஆரம்பமாகுகின்ற திகதியிலும் அந்தக் கட்டுப்பாடு முடிவுறாது என்ற வரையிலான திகதியிலும் இருந்து திரண்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன. துணை நிறுவனங்களின் கணக்கீட்டுக் கொள்கைகள் குழுவினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க தேவையான நேரத்தில் மாற்றப்பட்டுள்ளன.

#### (b) திரண்ட நிதி மீது மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குழுவுக்கு இடையிலான நிலுவைகள், கொடுக்கல்வாங்கல்கள், மற்றும் குழுவின் கொடுக்கல்வாங்களுக்கு இடையிலிருந்து எழுகின்ற ஏதாவது மாற்றம் பெறாத வருமானம் மற்றும் செலவுகள் ஆகியன திரண்ட நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் நேரத்தில் விட்டுவிடப்படுகின்றன. கணக்கீடு செய்யப்பட்ட முதலீட்டைப் பெறும் தரப்பு ஒப்புரவுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற மாற்றம்பெறாத இலாபங்கள் முதலீட்டைப் பெறும் தரப்பில் குழுவுக்கு இருக்கின்ற அக்கறையின் அளவுக்கான முதலீடுகளுக்கு எதிராக விட்டுவிடப்படுகின்றன. மாற்றம்பெறாத நட்டங்கள் மாற்றம்பெறாத இலாபங்கள் மாற்றம்பெறாத அதே விதத்தில் விட்டுவிடப் படுகின்றன. ஆனால், நட்டம் ஏற்படவில்லை என்பதற்கான சான்று இல்லை என்ற அளவுக்கு மாத்திரமே அவ்வாறு செய்யப்படுகின்றது.

## 3.2 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள்

சகல நாணயமாற்றுக் கொடுக்கல்வாங்கல்களும் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் செயல்வலுப்பெற்றிருக்கின்ற நேரத்திலுள்ள நாணயமாற்று வீதத்தில் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் பெறுமானம் குறிக்கப்பட்ட நிதி சார்ந்த சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள அதேவிடத்து நாணயமாற்று வீதத்தில் தொழிற்படு நாணய ஒப்புரவுகளுக்குப் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன.

ஒரு வெளிநாட்டு நாணயப் பெறுமதியில் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் அளவிடப்படும் நிதி சாராத சொத்துக்கள் ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதங்களைப் பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாரா சொத்துக்களும் பொறுப்புக்களும் பெறுமானங்கள் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலிருந்த நாணயமாற்று வீதங்களைப் பிரயோகித்து பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. நிதி சாராத சொத்துக்களின் பரிவர்த்தனை மீது எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் கொடுக்கல்வாங்கல் வித்தியாசத்திற்கு உயர்வைக் கொடுக்கும் சொத்தின் இலாபத்திற்கு அல்லது நடத்திற்கு இணங்க இனங்காணப்படுகின்றது.

## 3.3 நிதி சார்ந்த சொத்துக்களும் நிதி சார்ந்த பொறுப்புக்களும்

### (a) பிரித்துப்பெற முடியாத நிதி சார்ந்த சொத்துக்கள்

குழு ஆரம்பத்தில் கடன்களையும், வருமதிகளையும் மற்றும் வைப்புகளையும் அவை உருவாகும் நேரத்தில் இனங்காணுகின்றது. ஏனைய சகல நிதி சார்ந்த சொத்துக்களும் அடிப்படை ரீதியில், குழு அந்தச் சொத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு ஒரு தரப்பாக மாறுகின்ற வர்த்தகத் திகதியில் இனங்காணப்படுகின்றன.

நிதி சார்ந்த சொத்துக்களின் உரித்துடமை வழங்கல்களும் மற்றும் சகல பொறுப்புக்களும் பொருண்மையாளவில் மாற்றப்படுகின்ற ஒரு கொடுக்கல் வாங்கலிலுள்ள நிதி சார்ந்த சொத்துக்கள் மீது தொடர்புடைய காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கு குழு உரிமைகளை மாற்றுகின்ற அல்லது காலாவதியாகும் சொத்துக்களிலிருந்து வரும் காசுப் பாய்ச்சலுடன் தொடர்புடைய உரிமைகளை குழு கொண்டிருக்கின்ற போது குழு ஒரு நிதி சார்ந்த சொத்தை இனங்காணாமல் விட்டுவிடுகின்றது. குழுவினால் உருவாக்கப்பட்டு அல்லது பிடித்து வைக்கப்பட்டு மாற்றப்படும் நிதி சார்ந்த சொத்துக்களிலுள்ள ஏதாவதொரு அக்கறை விடயம் தனியானவொரு சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்படுகின்றது.

ஒரே நேரத்தில் சொத்துக்களை மாறச்செய்து பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்தல் அல்லது தேறிய ஒரு அடிப்படையில் தீர்ப்பனவு செய்தல் ஆகிய இரண்டிலொன்றை குழு மேற்கொள்ள எண்ணுகின்ற போதும் மற்றும் தொகைகளை சமப்படுத்துவதற்கு குழு சட்ட உரிமையைக் கொண்டிருக்கின்ற போதும் மாத்திரமே சொத்துக்களும் பொறுப்புக்களும் சமநிலைப்படுத்தப்பட்டு நிதி நிலைக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

குழுவு பின்வரும் பிரித்துப்பெற முடியாத நிதி சார்ந்த சொத்துக்களைக் கொண்டிருக்கும்: கடன்கள், வருமதிகள், மற்றும் விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள்.

#### (i) கடன்களும் வருமதிகளும்

கடன்களும் வருமதிகளும் என்பது நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளையுடைய துல்லியமானவொரு சந்தையில் குறிப்பிட்டவொரு விலையைக் கொண்டிருக்காத நிதி சார்ந்த சொத்துக்களாகும். இத்தகைய சொத்துக்கள் நேரடியாக சேரக்கூடிய ஏதாவது கொடுக்கல்வாங்கல் ஆகுசெலவுகள் அடங்கலாக நியாய விலைப் பெறுமானத்தின் அடிப்படை ரீதியில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலையடுத்து, கடன்களும் வருமதிகளும் ஏதாவது குறைந்தளவான நட்டங்களுக்கு பயனுள்ள வட்டி முறையியலைப் பிரயோகித்து கழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப் படுகின்றன.

கடன்களும் வருமதிகளும் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள் அடங்கலாக பங்கிலும், வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலும் காணப்படும் காசும் காசு ஒப்புரவுகளையும் மற்றும் முதலீடுகளையும் உள்ளடக்கியிருக்கும்.

#### (ii) காசும் காசு ஒப்புரவுகளும்

காசு நிலுவைகளில் காசும் காசு ஒப்புரவுகளும் உள்ளடங்ககின்றன. தேவையின் அடிப்படையில் மீளச்செலுத்தக்கூடியதும் குழுவினது காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாதவொரு பாகமாக உருவாகுகின்றதுமான வங்கி மேலதிகப் பற்றுக்கள் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்றின் நோக்கத்திற்காக காசும் காசு ஒப்புரவுகளினதும் ஒரு ஆக்கக்கூறாக உள்ளடக்கப்படுகின்றன.

#### (iii) விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள்

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள் பிரிக்க முடியாத நிதி சார்ந்த சொத்துக்களாகும். அத்தகைய சொத்துக்கள் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய சொத்துக்கள் என குறித்தொதுக்கப்படுகின்றனவேயொழிய ஏனைய நிதி சார்ந்த சொத்துக்களின் எந்த வகுதியாகவும் வகைப்படுத்தப் படுவதில்லை. ஒப்புரவுப் பிணைமுறிகளிலுள்ள குழுவினது முதலீடுகள் விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலை அடுத்து, அவை நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்படுகின்றன. அவற்றிலுள்ள மாற்றங்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டு நியாய விலைப் பெறுமான ஒதுக்கத்திலுள்ள ஒப்புரவினுள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரு முதலீடு இனங்காணப்படாமல் விட்டுவிடப்படுகின்ற போது, ஏனைய முழுமையான வருமானத்திலுள்ள திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மாற்றப்படுகின்றது. எனினும், துல்லியமான ஒரு சந்தையில் குறித்தவொரு சந்தை விலையைக் கொண்டிருக்காத மற்றும் நியாய விலைப் பெறுமானம் நம்பத்தகுந்தளவில் அளவிட முடியாத ஒப்புரவு சாதனங்களிலுள்ள முதலீடுகள் தொடர்பில் ஒப்புரவு சாதனங்கள் ஆகுசெலவில் அளவிடப்படுகின்றன.

### (b) பிரித்துப்பெறவியலாத நிதி சார்ந்த பொறுப்புக்கள்

குழு விநியோகிக்கப்பட்ட பற்றுப் பிணைமுறிகளை அவை உருவாகிய திகதியில் அடிப்படை ரீதியில் இனங்காணுகின்றது. ஏனைய சகல நிதி சார்ந்த பொறுப்புக்களும் சாதனத்தின் ஒப்பந்த சார் ஏற்பாடுகளுக்கான தரப்பாக குழு மாறுகின்ற திகதியில் அடிப்படை ரீதியில் இனங்காணப்படுகின்றன.

குழு ஒரு நிதி சார்ந்த பொறுப்பை அதன் ஆக்கபூர்வமான கடப்பாடுகள் விடுவிக்கப்படும், இரத்துச்செய்யப்படும் அல்லது முடிவடையும் நேரத்தில் இனங்காணாமல் விட்டுவிடுகின்றது.

குழு பிரித்துப்பெறவியலாத நிதி சார்ந்த பொறுப்புக்களை ஏனைய நிதி சார்ந்த பொறுப்புக்கள் வகுதியில் வகைப்படுத்துகின்றது. அத்தகைய நிதி சார்ந்த பொறுப்புக்கள் ஆரம்பத்தில் நேரடியாக சேரக்கூடிய ஏதாவது கொடுக்கல் வாங்கல் ஆகுசெலவுகள் அடங்கலாக நியாய விலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலையடுத்து, இந்த நிதி சார்ந்த பொறுப்புக்கள் கழிக்கப்பட்ட ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன.

கடன்கள், பற்றுக்கள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் என்பன ஏனைய நிதி சார்ந்த பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

### சாதாரணப் பங்கு மூலதனம்

சாதாரணப் பங்குகள் ஒப்புரவாக வகைப்படுத்தப்படுகின்றன. சாதாரண பங்குகளின் விநியோகத்திற்கு நேரடியாக சேரும் அதிகரிக்கும் ஆகுசெலவுகள் ஏதாவதொரு வரிப் பயன்களின் ஒப்புரவிலிருந்து வரும் ஒரு குறைப்பாக இனங்காணப்படுகின்றன.

## 3.4 நட்டம்

### 3.4.1 பிரித்துப்பெறவியலாத நிதி சார்ந்த சொத்துக்கள்

இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் கொணரப்படாத நிதி சார்ந்த ஒரு சொத்து நட்டத்திற்கு தெளிவான சான்றிருக்கின்றதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டு அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மதிப்பிடப்படுகின்றது. தெளிவான சான்று சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னரும் நட்ட நிகழ்வொன்று ஏற்பட்டுள்ளது என்பதையும் மற்றும் அந்த நட்ட நிகழ்வு நம்பத்தகுந்தளவில் மதிப்பிடக்கூடிய அந்த சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மீது பாதகமானவொரு தாக்கத்தைக் கொண்டிருந்தது என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டுமாயின் அப்போது நிதி சார்ந்த ஒரு சொத்துக்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது எனக் கருதப்படும்.

நிதி சார்ந்த சொத்துக்களுக்கு நட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதற்கான தெளிவான சான்றை குழு கருத்திற்கொள்ளாது என்ற நிபந்தனைகளின் பேரில் குழுவுக்கு வரவேண்டிய ஒரு தொகையை மீள்சீராக்குகின்ற ஒரு பற்றின் மூலம் வரும் இயல்புநிலையை அல்லது தவறுகையை, இல்லையெனில் ஒரு கடனாளி அல்லது கடன் வழங்குநர் திவால்நிலைக்கு உள்ளாகுவார் அல்லது ஒரு பிணைமுறிக்கான ஒரு துல்லியமான சந்தை காணப்படாமை என்பவற்றை சுட்டிக்காட்டும் சுட்டிகளையும் உள்ளடக்கியிருக்கும். அது தவிர, ஒரு ஒப்புரவுப் பிணைமுறியிலுள்ள ஒரு முதலீடு தொடர்பில், அதன் நியாய விலைப் பெறுமானத்திலுள்ள குறிப்பிடத்தக்க அல்லது நீடித்த ஒரு வீழ்ச்சி அதன் ஆகுசெலவுக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் அது நட்டத்தின் தெளிவான சான்றாகக் காணப்படும்.

### 3.4.2 நிதி சார்ந்த சொத்துக்கள்

குழு வருமதிகளுக்கான நட்டத்தின் சான்றை குறித்த சொத்து மட்டத்தில் கருத்திற்கொள்கின்றது. தனிப்பட்ட ரீதியான சகல முக்கியமான வருமதிகளும் விசேட நட்டமாக மதிப்பிடப்படுகின்றன.

கழிக்கப்பட்ட ஆகுசெலவில் அளவிடப்படும் ஒரு நிதி சார்ந்த சொத்து தொடர்பான ஒரு நட்டம் அதன் கொணரப்படும் தொகைக்கும் சொத்தின் உண்மையான பயனுள்ள வட்டி வீதத்தில் தள்ளுபடிசெய்யப்படும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பிடப்பட்ட தற்போதைய பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்படுகின்றது. நட்டங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டு வருமதிகளுக்கு எதிரான ஒரு கொடுப்பனவுக் கணக்கில் பிரதிபலிக்கப்படுகின்றன. நட்டம் ஏற்பட்ட சொத்துக்கள் மீதான வட்டி தொடர்ந்தும் நெகிழாத தள்ளுபடியினூடாக இனங்காணப்படுதல் வேண்டும். அடுத்தடுத்து வரும் ஒரு நிகழ்வு நட்டத் தொகை குறைவடைவதற்கு காரணமாக அமைகின்ற போது, நட்டத்திலுள்ள குறைவு இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக மாற்றப்படுகின்றது.

விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய முலீட்டுப் பிணைமுறிகள் மீதான நட்டங்கள் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ள திரண்ட நட்டத்தை மாற்றுவதன் மூலம் இனங்காணப்பட்டு, இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு ஒப்புரவிலுள்ள நியாய விலை ஒதுக்கத்தில் முன்வைக்கப் படுகின்றன. ஏனைய முழுமையான வருமானத்திலிருந்து அகற்றப்படுகின்ற மற்றும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்ற திரண்ட நட்டமே இலாபத்தில் அல்லது நட்டத்தில் முன்னர் இனங்காணப்பட்ட ஏதாவது குறைந்த நட்டம், தற்போதைய நியாய விலைப் பெறுமானம், ஏதாவது அடிப்படை மீள்கொடுப்பனவினதும் கழிவினதும் தேறிய கொள்முதல் செலவு என்பவற்றுக்கு இடையிலுள்ள வித்தியாசமாகும். நேரப் பெறுமானத்திற்கு சேரக்கூடிய நட்ட ஏற்பாடுகளிலுள்ள மாற்றங்கள் வட்டி வருமானத்தின் ஒரு ஆக்கக்கூறாக பிரதிபலிக்கப்படுகின்றன.

### 3.4.3 நிதி சாராத சொத்துக்கள்

பொருட்பதிவேடுகளும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் தவிர குழுவினது நிதி சாராத சொத்துக்களின் கொணரப்படும் தொகைகள் ஏதாவது நட்டத்திற்கான அறிகுறி இருக்கின்றதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் நிமித்தம் அறிக்கையிடப்படும் ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதாவது நட்ட அறிகுறி தென்படுமாயின், சொத்தின் அறவிடக்கூடிய தொகை மதிப்பிடப்படும்.

ஒரு சொத்தின் அல்லது அதன் காசு ஈட்டும் அலகின் அறவிடக்கூடிய தொகையே அதன் பாவனையிலுள்ள அதன் பெறுமானத்திலும் விற்பனைக்கான அதன் நியாய விலைப் பெறுமான குறைந்தளவான ஆகுசெலவுகளிலும் பெரிதாகக் காணப்படும். பாவனையிலுள்ள பெறுமானத்தை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் சொத்துக்கான குறித்த பொறுப்பினதும் பணத்தின் காலப் பெறுமானத்தினதும் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் முன்கூட்டிய வரித் தள்ளுபடி வீதத்தைப் பிரயோகித்து அவற்றின் தற்போதைய பெறுமானத்திற்குத் தள்ளுபடி செய்யப்படுகின்றன. நட்டம் தொடர்பில் சோதனையிடும் நோக்கத்திற்காக, சொத்துக்கள் ஏனைய சொத்துக்களின் அல்லது குழுவின் சொத்துக்களின் (“காசு ஈட்டும் அலகுகள்“) பாரியளவான சுயாதீனக் காசுப் பாய்ச்சல்களான தொடர் பாவனையிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்களை உருவாக்குகின்ற சொத்துக்களின் சிறு பிரிவுக்கு ஒன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு வியாபார இணைப்பில் பெற்றுக்கொள்ளப்படும் நன்மதிப்பு, நட்டம் தொடர்பில் சோதனையிடும் நோக்கத்திற்காக அந்த இணைப்பின் கூட்டிணைவுகளிலிருந்து நன்மை பயக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்ற காசு ஈட்டும் அலகுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது.

ஒரு சொத்தின் கொணரப்படும் தொகை அல்லது அதன் காசு ஈட்டும் அலகு அதன் மதிப்பிடப்பட்ட அறவிடக்கூடிய தொகையை விஞ்சினால் இனங்காணப்படுகின்றது. அத்தகைய நட்டங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

காசு ஈட்டும் அலகுகள் தொடர்பில் இனங்காணப்படும் நட்டங்கள் முதலில் அந்த அலகுகளுக்கு அமைந்திருக்கும் ஏதாவது கொணரப்படும் நன்மதிப்புத் தொகையைக் குறைப்பதற்கும் அதன் பின்னர் ஒரு விகித அடிப்படையில் பிரிவிலுள்ள ஏனைய சொத்துக்களின் (குழுப் பிரிவுகள்) கொணரப்படும் தொகையைக் குறைப்பதற்கும் ஒதுக்கப்படுகின்றன.

நன்மதிப்பு தொடர்பான ஒரு நட்டம் மாற்றப்படுவதில்லை. ஏனைய சொத்துக்கள் தொடர்பில், முன்னைய காலத்தில் இனங்காணப்பட்ட நட்டங்கள் அத்தகைய நட்டங்கள் குறைந்துள்ளன அல்லது ஒருபோதுமில்லை என்றளவுக்கு ஏதாவது சுட்டிகள் தொடர்பில் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன. ஒரு நட்டம், அறவிடக்கூடிய தொகையை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் ஒரு மாற்றம் இருந்துள்ளது என்றால் மாத்திரம் மாற்றப்படும். சொத்தின் கொணரப்படும் தொகை அந்தக் கொணரப்படும் தொகை நிர்ணயிக்க-ப்பட்டிருக்கக்கூடும் எனும் தேறிய தேய்மான அல்லது கழிவுத் தொகையை விஞ்சும் அளவுக்கு மாத்திரம் மாற்றப்படுகின்றது. இல்லையெனில் நட்டம் இனங்காணப்பட்டிருக்கும்.

## 3.5 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

### 3.5.1 இனங்காணலும் அளவீடும்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன ஆகுசெலவில் /குறைந்த திரண்ட தேய்மான மீள்மதிப்பீட்டில், திரண்ட நட்டத்தில் எடுத்துரைக்கப்படுகின்றன. குழு சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றின் ஒரு சில விடயங்களுக்கான (குறிப்பு 15) பரிமாற்றல் திகதியில் ஊகிக்கப்படும் ஆகுசெலவாக நியாயப் பெறுமானத்தைப் பிரயோகிப்பதற்கு இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRS) முதல் தடவையாகப் பின்பற்றப்படும் SLFRS 1 என்ற நியமத்தின் தெரிவு விலக்களிப்பைப் பிரயோகிப்பதற்குத் தேர்ந்தெடுத்தது.

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் ஆகுசெலவு அதன் கொள்வனவு விலையையும், அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழில்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாக ஏற்பட்ட ஏதாவது செலவையும் உள்ளடக்கியிருக்கும். சுயமாக நிர்மாணம் பெற்ற சொத்துக்களின் ஆகுசெலவு மூலப்பொருட்களின் செலவையும், நேரடித் தொழிலாளர் செலவையும், அதன் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் அதனைத் தொழிற்படும் நிலைக்குக் கொண்டுவருதில் ஏற்பட்ட ஏதாவது பிற நேரடியான செலவுகளையும் உள்ளடக்கியிருக்கும். ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் பாகங்கள் வித்தியாசமான பயனுள்ள பாவனை காலத்தைக் கொண்டிருக்கின்ற பொது அத்தகைய பாகங்கள் அத்தகைய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் தனித்தனியான பொருட்களாக (பெரும் பாகம்) கணக்கீடு செய்யப்படுகின்றன.

### 3.5.2 குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்

குழு பொருண்மையளவில் சகல பொறுப்புக்களையும் உரித்துடமைகளையும் பொறுப்பேற்கும் அடிப்படையிலான குத்தகைகள் நிதி சார்ந்த குத்தகைகளாக வகுக்கப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பேரில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் அளவிடப்பட்டு ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமானத்திற்கும் அதன் நியாய விலைப் பெறுமானத்திற்கும் குறைந்த பெறுமானத்திற்கு சமனான ஒரு தொகையில் மூலதனமாக்கப் படுகின்றன. ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து, அந்தச் சொத்து அதற்கு ஏற்புடைய கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க கணக்கீடு செய்யப் படுகின்றது.

### 3.5.3 அடுத்தடுத்து வரும் ஆகுசெலவுகள்

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் பாகத்தை மீளிடும் ஆகுசெலவு நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடிய அதன் ஆகுசெலவுக்கும் குழுவுக்கும் அந்தப் பாகம் செல்வதினுள் அநேகமாக எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிலைத்திருக்குமாயின் அதன் கொணரப்படும் தொகையில் இனங்காணப்படுகின்றது. மீளிடப்பட்ட பாகத்தின் கொணரப்படும் தொகை இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினலும் பராமரிப்புக்கான நாளாந்த செலவுகள் ஏற்பட்ட இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 3.5.4 இனங்காணாது விட்டுவிடுதல்

ஒவ்வொரு சொத்தினதும், பொறித்தொகுதியினதும், உபகரணத்தினதும் கொணரப்படும் தொகை அதன் பாவனையிலிருந்து அல்லது அகற்றலிலிருந்து மேலும் பொருளாதார நன்மைகளை எதிர்பார்க்க இயலாத போது அல்லது அது அகற்றப்படும் போது இனங்காணாமல் விட்டுவிடப்படுகின்றது. இனங்காணாமல் விட்டுவிடுவதன் பேரிலான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய வருமானத்தினுள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

### 3.5.5 தேய்மானம்

தேய்மானம் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனை காலத்தின் அடிப்படையில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. குத்தகைக்கு விடப்பட்ட ஆதனங்கள் குத்தகை காலம் முடிவில் குழு அவற்றின் உரித்துடமையைப் பெறும் நியாயமான நிச்சயத்தில் அவற்றின் பயனுள்ள பாவனை காலம் மற்றும் குறுகிய குத்தகை காலம் ஆகியவற்றின் அடிப்படையில் தேய்மானம் கணிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் தேய்மானம் அது பாவனைக்காகக் கிடைக்கச்செய்யப்படும் போது ஆரம்பமாகும். அதேபோன்று ஒரு சொத்தின் தேய்மானம் அந்தச் சொத்து இனங்காணப்படாத நாளிலும் மற்றும் விற்பனைக்காக (அல்லது குழு விற்பனைக்காக வகைப்படுத்தி அகற்றலுக்காக ஒதுக்கப்படுதல் அடங்கலாக) வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படும் நாளுக்கு முன்னைய நாளிலும் முடிவுறும். ப்ரீஹோல்ட் காணிகள் மற்றும் நிகழும் மூலதனப் பணிகள் என்பன தொடர்பில் தேற்மானத்திற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவ-தில்லை.

மதிப்பிடப்பட்ட பயனுள்ள பாவனைகாலம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் வகுதி | பயனுள்ள பாவனை காலம் |
|---|---|
| ப்ரீஹோல்ட் கட்டிடங்கள் | 13.33 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துக்கள் | 8 ஆண்டுகள் |
| நிர்மாண கருவிசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 4-5 ஆண்டுகள் |
| வாகனங்கள் | 4 ஆண்டுகள் |
| பொறித்தொகுதிகள், இயந்திராதிகள் | 5 ஆண்டுகள் |
| கொள்கலன்கள் | 5 ஆண்டுகள் |
| கணனிகள் | 5 ஆண்டுகள் |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | 8 ஆண்டுகள் |

### 3.5.6 நிகழும் மூலதனப் பணிகள்

அறிக்கையிடப்படும் திகதிற்கு நிறைவு செய்யப்படாத குறித்த ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட மூலதனச் செலவுகள் நிகழும் மூலதனப் பணிகளாகக் காட்டப்படுகின்றன. இதே நேரம் குறித்த ஆண்டு காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டு பாவனைக்குக் கிடைக்கச்செய்யப்பட்டுள்ள மூலதனச் சொத்துக்கள் பொறித்தொகுதிகளுக்கும், உபகரணங்களுக்கும், சொத்துக்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

## 3.6 பொருட்பதிவேடுகள்

பொருட்பதிவேடுகள் குறைந்த ஆகுசெலவிலும் மாறக்கூடிய பெறுமானத்திலும் மதிப்பிடப்படுகின்றன. ஆகுசெலவு அளவிடப்பட்ட சராசரி ஆகுசெலவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் அவற்றை ஏற்கெனவேயிருந்த இடங்களுக்கும் முன்பிருந்த நிலைகளுக்கும் கொண்டுவருவதற்கும் ஏற்பட்ட செலவுகள் இதில் உள்ளடங்கியிருக்கும்.

### 3.6.1 நிகழும் பணி

நிகழும் நிர்மாண ஒப்பந்தங்கள் நிர்மாணப் பணி நிறைவேற்றப்படும் திகதிற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் செலவுப்பட்டியல்படுத்தப்படாத முழுமொத்தத் தொகையைப் பிரதிபலிக்கும். இது குறைந்த முன்னேற்றப் பட்டியல்களினதும் இனங்காணப்பட்ட நட்டங்களினதும் அடிப்படையில் குறித்த திகதிற்கு இனங்காணப்படும் இலாபம் அடங்கலாக ஆகுசெலவில் அளவிடப்படுகின்றது. ஆகுசெலவு விஷேட கருத்திட்டங்களுடன் நேரடியாக சம்பந்தப்படும் சகல செலவினங்களையும், வழமையான இயக்கச்செயற்பாட்டு அகற்றலின் அடிப்படையில் குழுவினது ஒப்பந்தம் சார்ந்த செயற்பாடுகளில் நிலையான வித்தியாசமான மேன்தலைகளின் ஒதுக்கத்தையும் உள்ளடக்கியிருக்கும். நிகழும் நிர்மாண ஒப்பந்தங்கள் முன்னேற்ற செலவுப்பட்டியல்களை விஞ்சும் இனங்காணப்பட்ட இலாபங்கள் அடங்கலாக ஏற்பட்ட ஆகுசெலவில் சகல ஒப்பந்தங்களுக்கும் நிதி நிலைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளின் பாகமாக எடுத்துரைக்கப்படுகின்றன. முன்னேற்ற செலவுப்பட்டியல்கள் இனங்காணப்பட்ட இலாபங்களையும் ஏற்பட்ட ஆகுசெலவுகளையும் விஞ்சினால், வித்தியாசம் நிதி நிலைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளின் பாகமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

## 3.7 ஊழியர் நன்மைகள்

### (a) திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள்

ஒரு திட்டவட்டமான பங்களிப்புத் திட்டம் என்பது தொழிலுக்குப் பிற்பட்டகால நன்மைகள் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் பங்களிப்புகள் தனியான ஒரு நிதியத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், நிறுவனம் மேலும் மேலதிகத் தொகைகளைச் செலுத்துவதற்கு சட்டபூர்வமான அல்லது ஆக்கபூர்வமான ஒரு பொறுப்பைக் கொண்டிருக்காது. திட்டவட்டமான பங்களிப்புத் திட்டத்திற்குரிய பங்களிப்புகளுக்கான பொறுப்புக்கள் ஊழியர்களினால் வழங்கப்படும் சேவை காலப் பகுதியில் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையில் ஊழியர்கள் நன்மை சார்ந்த செலவாக இனங்காணப்படுகின்றன. முன்கூட்டி செலுத்தப்பட்ட பங்களிப்புகள் எதிர்காலக் கொடுப்பனவுகளில் கிடைக்கக்கூடிய ஒரு மீளளிக்கத்தகு காசு அல்லது ஒரு குறைப்பு என்ற அளவுக்கு ஒரு சொத்தாக இனங்காணப்படுகின்றன.

### (a) திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள் (தொடர்ச்சி)

**திட்டவட்டமான பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்**

ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்புக்கும் தகுதியுடைய சகல ஊழியர்களும் அந்தந்த நியதிச்சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் உரிய பங்களிப்பு நிதியங்களினால் அணவப்பட்டுள்ளனர். குழு ஊழியர்களின் மொத்த சம்பாத்தியத்தின் 12 மூ வீதத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3மூ வீதத்தை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச்செய்கின்றது.

### (b) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

அறிக்கையிடப்படும் திகதியில் திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் தற்போதைய பெறுமானமே திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் தொடர்பில் நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படும் பொறுப்பாகும். திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு “ஊழியர் நன்மைகள்“ என்ற LKAS 19 நியமத்தினால் சிபாரிசு செய்யப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட அலகுக் கடன் (எ.அ.க.) முறையியலைப் பிரயோகித்து சுயாதீனக் கணிப்பாளர்களினால் வருடாந்த ரீதியில் கணிப்பிடப்படுகின்றது. திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கான அத்தகைய கணிப்பு இலாபங்கள் அல்லது நட்டங்கள் அவை ஏற்படும் முழுமையான காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

குழு ஆகக்குறைந்தது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவையாவது உண்மையான பெறுமானத்தை மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கின்றது.

பணிக்கொடைப் பொறுப்பு திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானத்தை அடைவதற்குத் தேவைப்படுத்தப்படும் எடுகோள்களைக் கருத்திற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட அலகுக் கடன் (எ.அ.க.) முறையியலைப் பிரயோகித்து பெறுமானம் கணிக்கப்படுகின்றது.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கு இணங்க, தொடர்ச்சியான 5 வருட சேவைப் பூர்த்தியின் பின்னரே ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு தொடர்பான பொறுப்பு எழுகின்றது.

## 3.8 ஏற்பாடுகள்

கடந்தவொரு நிகழ்வின் காரணமாக குழு அநேகமாக பொறுப்பைத் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் பொருளாதார நன்மையின் ஒரு வெளிப் பாய்ச்சலாக விளங்குகின்றதும் நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடியதுமான ஒரு நிகழ்கால சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டைக் கொண்டிருந்தால், ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடுகள் பொறுப்புக்கான குறித்த கடப்பாட்டினதும் பணத்தின் நேரப் பெறுமானத்தினதும் நடைமுறை சந்தை மதிப்பீட்டைப் பிரதிபலிக்கும் முன்கூட்டிய வரி வீதத்தில் எதிர்பார்க்கப்படும் எதிர்காலக் காசுப் பாய்ச்சல்களைக் கழிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. நெகிழ்தன்மை வாய்ந்த தள்ளுபடி நிதி சார்ந்த ஆகுசெலவாக இனங்காணப்படுகின்றது.

## 3.9 முழுமையான வருமானக் கூற்று

### 3.9.1 வருமானம்

### (a) நிர்மாண ஒப்பந்தங்கள்

ஒப்பந்த வருமானம் அநேகமாக நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடிய வருமானத்திற்கு பயனாக அமையும் என்ற அளவுக்கு ஒப்பந்தப் பணியிலும், கோரல்களிலும் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளிலும் காணப்படும் ஏதாவது வித்தியாசங்களையும் ஒப்பந்தத்தில் உடன்பட்ட ஆரம்பத் தொகைகளையும் உள்ளடக்கியிருக்கும். ஒரு நிர்மாண ஒப்பந்தத்தின் பயன் நம்பத்தகுந்தளவில் அளவிடக்கூடியதாக ,ருக்கும் போது, ஒப்பந்த வருமானம் அந்த ஒப்பந்தத்தின் நிறைவுக் கட்டத்திற்கான விகித அடிப்படையில், ,லாபத்தில் அல்லது நட்டத்தில் ,னங்காணப்படுகின்றது.

நிறைவுக் கட்டம் மதிப்பிடப்பட்ட மொத்த ஒப்பந்த ஆகுசெலவு பொறுப்பேற்கப்படும் திகதிற்கு நிறைவேற்றப்படும் பணிக்காக ஏற்பட்ட அந்த ஒப்பந்த ஆகுசெலவு விகிதத்திற்கான குறிப்பைக்கொண்டு மதிப்பிடப்படுகின்றது. ஒரு நிர்மாண ஒப்பந்தத்தின் பலனை நம்பத்தகுந்தளவில் மதிப்பிடமுடியாது எனும் போது, ஒப்பந்த வருமானமானது அநேகமாக அறவிடக்கூடிய ஏற்பட்ட ஒப்பந்த ஆகுசெலவுகளின் அளவுக்கு மாத்திரம் ,னங்காணப்படுகின்றது.

### (b) உசாதுணை சார்ந்த சேவைகள்

குழு நிர்மாணப் பணி சம்பந்தப்பட்ட உசாதுணை சார்ந்த சேவையிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றது. உசாதுணை சார்ந்த சேவைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் அறிக்கையிடப்படும் திகதியிலுள்ள கொடுக்கல்வாங்கல் கட்டத்திற்கான விகிதத்தின் அடிப்படையில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. நிறைவுக் கட்டம் நிறைவேற்றப்படும் பணியின் மதிப்பீட்டிற்கான குறிப்பைக்கொண்டு மதிப்பிடப்படுகின்றது.

### 3.9.2 வட்டி வருமானம்

விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்டுக் கிடைக்கக்செய்யக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்களுடன் வரும் வட்டியிலும் கழிக்கப்பட்ட ஆகுசெலவிலும் அளவிடப்படும் நிதி சார்ந்த சகல சொத்துக்களுக்குமான வட்டி வருமானம் அல்லது செலவினம் நிதி சார்நத சொத்தின் அல்லது பொறுப்பின் கொணரப்படும் தேறிய தொகைக்குப் பொருத்தமானவிடத்து நிதி சார்நத சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட பாவனை காலத்தினூடாக அல்லது குறுகியவொரு காலப் பகுதியினூடாக மதிப்பிடப்படும் எதிர்காலக் காசுக் கொடுப்பனவுகளை அல்லது பெறுகைகளை சரியான விதத்தில் தள்ளுபடிசெய்வதற்கு உதவும் வீதமாகிய பயன்தகு வட்டி வீதத்தை (ப.வ.வீ.) பிரயோகித்துப் பதியப்படுகின்றது. வட்டி வருமானம் முழுமையான வருமானக் கூற்றிலுள்ள நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 3.9.3 பங்குலாப வருமானம்

பங்குலாப வருமானம் கொடுப்பனவைப் பெறுவதற்கு பங்குதாரரின் உரிமை தாபிப்புப் பெறுகின்ற நேரத்தில் கணிப்பிடப்படுகின்றது.

### 3.9.4 ஏனைய வருமானம்

சொத்துக்களினதும், பொறித்தொகுதிகளினதும், உபகரணங்களினதும் அகற்றலின் மூலம் வரும் இலாபங்கள் அல்லது ஏற்படும் நட்டங்கள் அந்தச் சொத்துக்களின் அகற்றல், கொணரப்படும் பெறுமானம் மற்றும் சம்பந்தப்பட்ட செலவுகள் என்பன கழிக்கப்பட்ட பின்னர் இனங்காணப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய இலாபங்களும் நட்டங்களும் ஒரு தேறிய அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றன.

### 3.9.5 செலவின இனங்காணல்

#### (a) நிர்மாண மற்றும் உசாதுணை ஆகுசெலவுகள்

ஒப்பந்தம் சார்ந்த செலவினங்கள் அவை எதிர்கால ஒப்பந்த செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட சொத்தாக உருவாகாத வரையில் ஏற்பட்ட செலவினங்களாக இனங்காணப்படுகின்றன. ஏற்பட்ட நட்டங்கள் நிர்மாண ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட மொத்த ஆகுசெலவு அநேகமாக அதன் வருமானத்தை விஞ்சுகின்ற போது ஒரு செலவினமாக இனங்காணப்படுகின்றன.

#### (b) ஏனைய செலவுகள்

வினைத்திறன் வாய்ந்த விதத்தில் வியாபார நடவடிக்கைகளை நிருவகிப்பதிலும், சொத்துக்களையும், பொறித்தொகுதிகளையும் உபகரணங்களையும் பேணிப்பராமரிப்பதிலும் ஏற்படும் சகல செலவினங்களும் குறித்த ஆண்டிற்கான இலாபத்தில் வரும் வருமானத்திற்கு கணக்குக் காட்டப்பட்டுள்ளன.

### 3.9.6 வரி விதிப்பு

#### (a) நடைமுறை வரிகள்

நடைமுறை காலத்திற்கும் முன்னைய காலங்களுக்குமான நடைமுறை வருமான வரிப் பொறுப்புக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படுதல் அல்லது அறவிடப்படுதல் வேண்டும் என்ற தொகையில் அளவிடப்படுகின்றன. அந்தத் தொகையைக் கணிப்பிடுவதற்குப் பிரயோகிக்கப்படும் வரி வீதங்களும் சட்டங்களும் அறிக்கையிடப்படும் திகதியளவில் பொருண்மையாக சட்டமாக்கப்படும் அல்லது சட்டமாக்கப் பட்டிருக்கின்ற அத்தகைய சட்டங்களாகவும் வீதங்களாகவும் இருக்கும்.

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட செலினவினங்களினதும் வருமானத்தினதும் அடிப்படைகளில் அமைந்திருக்கும் என்பதுடன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்க கணிப்பிடவும் படுகின்றது.

உரிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான அந்தந்தக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

#### (b) பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரி நிதி சார்ந்த அறிக்கையிடும் நோக்கங்களுக்கான சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கும் வரி விதிப்பு நோக்கங்களுக்கான தொகைகளுக்கும் இடையில் காணப்படும் தற்காலிக வித்தியாசங்கள் தொடர்பில் இனங்காணப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரி பின்வரும் விடயங்களின் நிமித்தம் இனங்காணப்படுவதில்லை.

- கணக்கீட்டை அல்லது வரி விதிக்கக் கூடிய இலாபத்தை அல்லது நட்டத்தைப் பாதிக்காத ஒரு வியாபாரத் தொடர்பற்ற ஒரு கொடுக்கல்வா-ங்கலிலுள்ள சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் அடிப்படை இனங்காணலின் பேரிலான தற்காலிக வித்தியாசங்கள்
- எதிர்கூவு கூறக்கக்கூடிய எதிர்காலத்தில் அநேகமாக ஒதுக்கம் பெறாத அளவுக்கு துணை நிறுவனங்களிலும் கூட்டாகக் கட்டுப்பாடுடைய தாபனங்களிலும் காணப்படும் முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட தற்காலிக வித்தியாசங்கள், மற்றும்
- நன்மதிப்பின் அடிப்படை இனங்காணலின் பேரில் எழுகின்ற வரி விதிக்கக்கூடிய தற்காலிக வித்தியாசங்கள்

பிற்போடப்பட்ட வரி அறிக்கையிடப்படும் திகதியளவில் பொருண்மையாக சட்டமாக்கப்படும் அல்லது சட்டமாக்கப்பட்டுள்ள சட்டங்களின் அடிப்படையில் தற்காலிக வித்தியாசங்கள் ஒதுக்கத்திற்குப் பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

## 4. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 7 (காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று) நேரடி முறையியலைப் பிரயோகித்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 5. அறிக்கையிடப்படும் திகதிற்கு பின்னர் நிகழும் சம்பவங்கள்

அறிக்கையிடப்படும் திகதிற்கு பின்னர் நிகழ்கின்ற அந்த சம்பவங்கள் அனுகூலமாகவும் அனுகூலமற்றதாகவும் அமையலாம். இவை பிரச்சினையின் நிமித்தம் நிதிக் கூற்றுக்கள் அதிகாரமளிக்கப்படும் திகதிற்கும் அறிக்கையிடப்படும் திகதி இறுதிக்கும் இடையில் நிகழ்கின்றன.

அறிக்கையிடப்படும் காலத்தின் பின்னர் நிகழ்கின்ற சம்பவங்களின் பொருண்மை கருத்திற்கொள்ளப்பட்டு, தேவையான போது நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

## 6. வெளியிடப்பட்ட ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் செயல்வலுப்பெறாத புதிய கணக்கீட்டு நியமங்கள்

வெளியிடப்பட்ட நியமங்களும் அவற்றின் விளக்கங்களும் கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ள கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதி வரை இன்னும் செயல்வலுப்பெறவில்லை. இந்த நியமங்கள் செயல்வலுப் பெறும் போது ஏற்புடையதாக இருந்தால் அவற்றைப் பின்பற்றுவதற்கு குழு எதிர்பார்க்கின்றது.

### (i) நிதி சார்ந்த சொத்துக்கள் சாதனங்கள் - நியமம் ளுடுகுசுளு 09

நியமம் SLFRS 9 வெளியிடப்பட்டது போல் நியமம் LKAS 39 இல் விவரிக்கப்பட்டவாறு நிதி சார்ந்த சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புக்களினதும் அளவுக்கும் வகைப்படுத்தலுக்கும் ஏற்புடைய நியமம் LKAS 39 இன் பிரதியீட்டைப் பிரதிபலிக்கின்றது. இந்த நியமம் 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஆண்டு காலப் பகுதிகளுக்கு செயல்வலுப்பெற்றிருக்கும். நியமம் SLFRS 9 I பின்பற்றுவதானது கம்பனியினதும் குழுவினதும் நிதி சார்ந்த சொத்துக்களினதும் சாதனங்களினதும் அளவிலும் வகைப்படுத்தலிலும் தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

### (ii) வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்து கிடைக்கும் வருமானம் - நியமம் ளுடுகுசுளு 15

நியமம் SLFRS - 15 வருமானம் எவ்வளவு மற்றும் அந்த வருமானம் எப்போது இனங்காணப்படுகின்றது என்பதை நிர்ணயித்துக் கொள்ளும் பொருட்டு முழுமையான ஒரு வேலைச்சட்டகத்தைத் தாபிக்கச்செய்கின்றது. இது நியமம் LKAS 18 “வருமானம்”, நியமம் LKAS 11 “நிர்மாண ஒப்பந்தங்கள்” ஆகியன அடங்கலாக ஏற்கெனவே காணப்படும் வருமான இனங்காணல் வழிகாட்டல்களுக்கு பிரதியீடு செய்வதாக அமைகின்றது. நியமம் SLFRS 15 ஐ பின்பற்றுவதானது முன்னர் அனுமதிக்கப்பட்டவை அடங்கலாக 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதியில் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பமாகும் ஆண்டு காலப் பகுதிகளுக்கு செயல்வலுப்பெற்றிருக்கும்.

குழு இந்த நியமங்கள் செயல்வலுப்பெறும் போது அவற்றைப் பின்பற்றும். நிறைவு பெறாத விரிவான மீளாய்வு, நிதி சார்ந்த தாக்கம் ஆகியன இந்த நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படும் திகதியில் நியாயமான விதத்தில் மதிப்பிடக் கூடியதாக இருக்காது.















# நிதி அறிக்கைகள்

## மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

### நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

**திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|---|
| | | 2015 ரூ. | 2014 ரூ. | 2015 ரூ. | 2014 ரூ. |
| | குறிப்பு | | மீளெடுத்துரைக்கப்பட்டது | | மீளெடுத்துரைக்கப்பட்டது |
| வருமானம் | 9 | 11,423,636,967 | 13,401,582,667 | 10,710,472,734 | 13,259,699,366 |
| விற்பனை ஆகுசெலவு | 10 | (9,679,902,097) | (11,487,873,150) | (9,448,860,733) | (11,656,600,792) |
| மொத்த இலாபம் | | 1,743,734,870 | 1,913,709,517 | 1,261,612,002 | 1,603,098,574 |
| ஏனைய வருமானம் | 11 | 168,515,920 | 147,476,316 | 173,393,789 | 169,674,146 |
| நிருவாக சார் செலவுகள் | | (1,128,975,590) | (1,189,348,793) | (759,749,098) | (1,033,810,083) |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள் | | (222,249,855) | (314,175,035) | (220,503,209) | (314,175,035) |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் பெறுபேறுகள் | | 561,025,344 | 557,662,005 | 454,753,483 | 424,787,602 |
| நிதி சார்ந்த வருமானம் | | 168,766,491 | 154,451,475 | 150,007,977 | 145,235,138 |
| நிதி சார்ந்த ஆகுசெலவு | | (16,207,048) | (27,890,447) | (8,789,218) | (17,589,492) |
| தேறிய நிதி சார்ந்த வருமானம் | 12 | 152,559,443 | 126,561,028 | 141,218,758 | 127,645,646 |
| வருமான வரிக்கு முன்னருள்ள இலாபம் | | 713,584,787 | 684,223,033 | 595,972,241 | 552,433,247 |
| வருமான வரி சார்ந்த செலவுகள் | 14 | (287,358,436) | (271,949,391) | (250,935,705) | (243,267,389) |
| குறித்த ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | | 426,226,351 | 412,273,642 | 345,036,536 | 309,165,858 |
| குறித்த ஆண்டிற்குரிய ஏனைய முழுமையான வருமானம் | | - | - | - | - |
| குறித்த ஆண்டிற்குரிய மொத்த முழுமையான வருமானம் | | 426,226,351 | 412,273,642 | 345,036,536 | 309,165,858 |

*அடைப்புக் குறிகளினுள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தல்களைக் குறிக்கும்.*

28 தொடக்கம் 35 வரையான பக்கங்களில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றன.

# நிதி நிலைக் கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி நிலைக் கூற்று | | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|---|
| | | 2015<br>ரூ. | 2014<br>ரூ. | 2015<br>ரூ. | 2014<br>ரூ. |
| **சொத்துக்கள்** | குறிப்பு | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், | 15 | **3,088,678,195** | 3,298,246,727 | **2,686,829,682** | 2,896,020,996 |
| உபகரணங்கள் | 16 | **39,477,863** | 34,521,663 | **44,253,587** | 44,521,683 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | **3,128,156,058** | 3,332,768,390 | **2,731,083,269** | 2,940,542,679 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| பொருட்கள் பதிவேடு | 17 | **594,682,065** | 661,739,053 | **92,491,334** | 320,879,617 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 18 | **8,937,778,990** | 8,582,269,469 | **9,443,009,085** | 9,581,357,319 |
| குறுங்கால முதலீடுகள் | 16 | **3,341,850,862** | 2,753,124,096 | **2,570,978,949** | 2,457,313,968 |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 20 | **801,392,970** | 620,947,793 | **622,427,835** | 449,363,357 |
| கம்பனிகளுக்கு இடையிலான நடைமுறைக் கணக்குகள் | 19 | **-** | - | **1,147,466,029** | 1,278,026,970 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **13,675,704,887** | 12,618,080,411 | **13,876,373,232** | 14,086,941,231 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **16,803,860,945** | 15,950,848,801 | **16,607,456,501** | 17,027,483,910 |
| **ஒப்புரவும் பொறுப்புகளும்** | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | | **500,000** | 500,000 | **500,000** | 500,000 |
| மூலதன ஒதுக்கீடு | | **3,028,000** | 3,028,000 | **3,028,000** | 3,028,000 |
| பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியம் | | **4,952,476,935** | 4,526,250,584 | **4,744,367,819** | 4,399,331,283 |
| **மொத்த ஒப்புரவு** | | **4,956,004,935** | 4,529,778,584 | **4,747,895,819** | 4,402,859,283 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| குத்தகைக் கடன்கள் | 21 | **-** | 888,699 | **-** | - |
| ஊழியர் நன்மைகள் | 22 | **177,457,833** | 182,165,317 | **176,438,911** | 182,165,317 |
| பிற்போடப்பட்ட வரி | 23 | **17,617,814** | 6,477,006 | **-** | - |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **195,075,647** | 189,531,022 | **176,438,911** | 182,165,317 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 24 | **10,877,454,823** | 10,485,704,301 | **10,931,756,058** | 11,724,834,406 |
| செலுத்த வேண்டிய வருமான வரிகள் | 25 | **774,441,714** | 737,897,410 | **751,365,710** | 717,039,064 |
| குத்தகைக் கடன்கள் | 21 | **883,827** | 7,937,483 | | 585,840 |
| தள அலுவலகங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்குகள் | | | | | |
| கம்பனிகளுக்கு இடையிலான நடைமுறைக் கணக்குகள் | 26 | | | | |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் | 20 | | | | |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **11,652,780,363** | 11,231,539,196 | **11,683,121,770** | 12,442,459,310 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **11,847,856,010** | 11,421,070,218 | **11,859,560,681** | 12,624,624,627 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **16,803,860,945** | 15,950,848,801 | **16,607,456,501** | 17,027,483,910 |

*அடைப்புக் குறிகளினுள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தல்களைக் குறிக்கும்.*

28 தொடக்கம் 35 வரையான பக்கங்களில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றன.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை சான்றுபடுத்துகின்றோம்.

யூ.என்.பீ. மாவத்தகம
**பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)**

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குவது பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

சபைக்காகவும் சபையின் சர்பாகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றது:

பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க
**தலைவர்**

எம்.ஆர்.ஜி. ரணதுங்க
**பணிப்பாளர்**

2017 சனவரி 26
கொழும்பு

# காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதி நிலைக் கூற்று | குழு 2015 ரூ. | குழு 2014 ரூ. | ம.பொ.உ.ப. 2015 ரூ. | ம.பொ.உ.ப. 2014 ரூ. |
|---|---|---|---|---|
| வரிக்கு முன்னருள்ள இலாபம் | **713,584,787** | 684,223,033 | **595,972,241** | 552,433,247 |
| ***பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்*** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீதான தேய்மானம் | | | | |
| தீராத, சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு | **427,194,180** | 431,739,029 | **270,578,458** | 328,077,547 |
| தீராத, சந்தேகத்திற்கிடமான பற்றுக்களின் ஒதுக்கம் | **243,149,506** | 308,872,386 | **239,395,936** | 308,872,386 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு/(ஒதுக்கம்) | **(67,849,238)** | (52,969,199) | **(66,248,516)** | (52,969,199) |
| தேறிய நிதி சார்ந்த வருமானம் | **19,492,872** | 15,117,495 | **18,473,950** | 15,117,495 |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் | **(152,559,447)** | (126,561,028) | **(141,218,758)** | (127,645,645) |
| முதலீடுகளின் அகற்றல் மீதான இலாபம் | **(913,314)** | 728,679 | **(993,769)** | 728,680 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | **1,182,099,347** | 1,261,150,395 | **915,959,542** | 1,024,614,512 |
| பொருட்பதிவேடுகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **67,056,988** | 85,083,263 | **228,388,283** | 93,451,892 |
| சம்பந்தப்பட்ட கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **(530,809,789)** | 4,196,101,067 | **(34,799,186)** | (371,813,692) |
| சம்பந்தப்பட்ட கம்பனிகளிடமிருந்து வர வேண்டிய தொகைகளிலுள்ள (அதிகரிப்பு)/குறைவு | **391,750,522** | (3,965,989,760) | **(793,078,348)** | 391,542,452 |
| தள அலுவலகங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்குகளிலுள்ள அதிகரிப்பு | **-** | - | **130,560,941** | (194,991,669) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | **1,110,097,071** | 1,576,344,965 | **447,031,230** | 942,803,494 |
| செலுத்தப்பட்ட வட்டி | | | | |
| செலுத்தப்பட்ட வரி | **(16,207,044)** | (27,890,447) | **(8,789,218)** | (17,589,493) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | **(239,673,323)** | (74,775,998) | **(216,609,058)** | (57,339,754) |
| | **(24,200,356)** | (36,957,075) | **(24,200,356)** | (36,957,075) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **830,016,348** | 1,436,721,444 | **197,432,598** | 830,917,172 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பவற்றிலுள்ள முதலீடுகள் | | | | |
| மூலதன நிகழும் பணிகளிலுள்ள முதலீடுகள் | **(234,793,003)** | (365,286,891) | **(61,687,770)** | (90,546,698) |
| இனங்காணப்படாத வித்தியாசங்கள் | **(1,000,000)** | (2,571,990) | **-** | - |
| நீண்டகால வைப்பு முதலீடு/அகற்றல் | **19,080,663** | - | **1,294,397** | - |
| குறுங்கால வைப்பு முதலீடு/அகற்றல் | **(4,956,200)** | 3,804,734 | **268,097** | (6,195,266) |
| வட்டி வருமானம் | **(588,726,766)** | (983,864,676) | **(113,664,981)** | (728,732,071) |
| | **168,766,491** | 154,451,475 | **150,007,977** | 145,235,138 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(641,628,816)** | (1,193,467,346) | **(23,782,280)** | (680,238,897) |
| செலுத்தப்பட்ட பங்குலாபங்கள் | **(7,942,355)** | (21,742,155) | **(585,840)** | (11,668,598) |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசு** | **(7,942,355)** | (21,742,155) | **(585,840)** | (11,668,598) |
| காசும் காசு ஒப்புரவுகளிலிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | | | |
| **ஆரம்பத்திலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும்** | **180,445,177** | 221,511,942 | **173,064,478** | 139,009,678 |
| | **620,947,793** | 399,435,851 | **449,363,357** | 310,353,679 |
| **இறுதியிலிருந்த காசும் காசு ஒப்புரவுகளும் (குறிப்பு 20)** | **801,392,970** | 620,947,793 | **622,427,835** | 449,363,357 |

*அடைப்புக் குறிகளினுள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தல்களைக் குறிக்கும்.*

28 தொடக்கம் 35 வரையான பக்கங்களில் குறிப்பிபீடுசெய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றன.

## ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

| | ம.பொ.உ.ப. | | | |
|---|---|---|---|---|
| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | பங்களிக்கப் பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கீடு | பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | மொத்தம் |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2014 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 500,000 | 3,028,000 | 4,090,165,425 | 4,093,693,425 |
| குறித்த ஆண்டிற்கு எடுத்துரைக்கப்பட்ட தேறிய இலாபம் | - | | 309,165,858 | 309,165,858 |
| ஏனைய முழுமையான வருமானம் | | | - | - |
| 2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 500,000 | 3,028,000 | 4,399,331,283 | 4,402,859,283 |
| 2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **500,000** | **3,028,000** | **4,399,331,283** | **4,402,859,283** |
| குறித்த ஆண்டிற்கு எடுத்துரைக்கப்பட்ட தேறிய இலாபம் | - | - | 345,036,536 | 345,036,536 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | - |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **500,000** | **3,028,000** | **4,744,367,819** | **4,747,895,819** |

| | குழு | | | |
|---|---|---|---|---|
| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | பங்களிக்கப் பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கீடு | பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | மொத்தம் |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 2014 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 500,000 | 3,028,000 | 4,113,976,942 | 4,117,504,942 |
| குறித்த ஆண்டிற்கு எடுத்துரைக்கப்பட்ட தேறிய இலாபம் | | | 412,273,642 | 412,273,642 |
| ஏனைய முழுமையான வருமானம் | | | - | - |
| 2014 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 500,000 | 3,028,000 | 4,526,250,584 | 4,529,778,584 |
| 2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **500,000** | **3,028,000** | **4,526,250,584** | **4,529,778,584** |
| குறித்த ஆண்டிற்கு எடுத்துரைக்கப்பட்ட தேறிய இலாபம் | - | - | 426,226,351 | 426,226,351 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | - | - | - |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | **500,000** | **3,028,000** | **4,952,476,935** | **4,956,004,935** |

28 தொடக்கம் 35 வரையான பக்கங்களில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றன.

## நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள்

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு 2015 ரூ. | குழு 2014 ரூ. | ம.பொ.உ.ப. 2015 ரூ. | ம.பொ.உ.ப. 2014 ரூ. |
|---|---|---|---|---|
| **9 வருமானம்** | | | | |
| நிர்மாணம் சார்ந்த வருமானம் | 9,457,853,907 | 11,273,975,233 | 8,734,403,246 | 11,127,444,260 |
| உசாதுணை சார்ந்த வருமானம் | 1,965,783,059 | 2,127,607,434 | 1,976,069,488 | 2,132,255,106 |
| | 11,423,636,967 | 13,401,582,667 | 10,710,472,734 | 13,259,699,366 |
| **10 விற்பனை ஆகுசெலவு** | | | | |
| நிர்மாணம் சார்ந்த ஆகுசெலவு | 8,332,292,766 | 10,132,060,118 | 8,078,502,315 | 10,284,412,205 |
| உசாதுணை சார்ந்த ஆகுசெலவு | 1,347,609,331 | 1,355,813,032 | 1,370,358,418 | 1,372,188,587 |
| | 9,679,902,097 | 11,487,873,150 | 9,448,860,733 | 11,656,600,792 |
| **11 ஏனைய வருமானம்** | | | | |
| நானாவித வருமானம் | 77,168,913 | 75,739,607 | 54,141,541 | 86,954,644 |
| வாடகை வருமானம் | 12,136,776 | 5,611,316 | 4,348,474 | |
| நடைமுறையல்லாத கணக்கு வைப்பு மீதான இலாபம் | 1,047,791 | | 1,047,791 | |
| மீளளிக்க வேண்டிய ஆகுசெலவு | 9,399,663 | 11,400,998 | 46,693,928 | 29,730,614 |
| வெளிநாட்டு இலாபம் அல்லது நட்டம் | 913,540 | 19,689 | 913,540 | 19,689 |
| தீராத கடன் ஏற்பாட்டு ஒதுக்கீடு | 67,849,238 | 52,969,199 | 66,248,516 | 52,969,199 |
| தரகு வருமானம் | - | 1,735,507 | - | |
| | 168,515,920 | 147,476,316 | 173,393,789 | 169,674,146 |
| **12 தேறிய நிதி சார் வருமானம்** | | | | |
| **நிதி சார் வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | 168,766,491 | 154,451,475 | 150,007,977 | 145,235,138 |
| | 168,766,491 | 154,451,475 | 150,007,977 | 145,235,138 |
| **நிதி சார் ஆகுசெலவு** | (16,207,044) | (27,890,447) | (8,789,218) | (17,589,492) |
| **தேறிய நிதி சார் வருமானம்** | 152,559,447 | 126,561,028 | 141,218,758 | 127,645,646 |
| **14 வருமான வரி** | | | | |
| நடைமுறை வரிச் செலவுகள் | 276,217,628 | 265,700,526 | 250,935,705 | 243,267,389 |
| பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு | 11,140,808 | 6,248,865 | - | - |
| | 287,358,436 | 271,949,391 | 250,935,705 | 243,267,389 |
| வரி செலுத்த வேண்டிய இலாபத்திற்கு முன்னருள்ள கணக்கீட்டு இணக்கல் | | | | |
| நிர்மாணம் சார்ந்த வருமானம் மீதான வரி -12% | 63,597,714 | 55,814,491 | 27,174,983 | 27,132,489 |
| ஏனைய வருமானம் மீதான வரி - 28% | 105,876,473 | 101,282,089 | 105,876,473 | 101,282,089 |
| பிற்போடப்பட்ட வரி | 117,884,249 | 114,852,811 | 117,884,249 | 114,852,811 |
| நடைமுறை வருமான வரிச் செலவுகள் | 287,358,436 | 271,949,391 | 250,935,705 | 243,267,389 |

# நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் (தொடர்ச்சி)

## 15 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

### 15.1 ம.பொ.உ.ப.

| | காணி | கட்டிடங்கள் | தளபாடங்களும் பொருத்துக்களும் | நிர்மாண கருவி சாதனங்களும் உபகரணங்களும் | அலுவலக உபகரணங்கள் | பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் | கொள்கலன்கள் | கணனிகள் | வாகனங்கள் | வாசிகசாலைப் புத்தகங்கள் | நிகழும் மூலதனப் பணி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **ஆகுசெலவு** | | | | | | | | | | | | |
| **2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,701,736,867 | 818,776,397 | 57,578,529 | 199,505,672 | 61,030,337 | 491,588,587 | 12,380,896 | 118,929,500 | 381,612,012 | 1,479,368 | 19,331,449 | 3,863,949,614 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள சேர்வகள் | - | - | 6,460,825 | 17,504,658 | 8,273,302 | 12,468,132 | - | 13,557,179 | 3,170,000 | 253,673 | - | 61,687,770 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள அகற்றல்கள் / பதிவழிப்புகள் | - | - | (64,977) | (36,846) | (216,333) | (347,189) | - | (678,286) | - | - | - | (1,343,631) |
| **2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **1,701,736,867** | **818,776,397** | **63,974,376** | **216,973,485** | **69,087,306** | **503,709,530** | **12,380,896** | **131,808,393** | **384,782,012** | **1,733,041** | **19,331,449** | **3,924,293,752** |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| **2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | - | 171,716,650 | 20,807,842 | 118,357,898 | 24,123,665 | 230,044,954 | 8,173,107 | 63,208,256 | 330,888,305 | 607,936 | - | 967,928,613 |
| குறித்த ஆண்டிற்கான அறவீடு | - | 66,101,019 | 8,416,072 | 39,513,574 | 9,601,341 | 85,835,062 | 2,476,179 | 24,784,632 | 33,651,382 | 199,197 | - | 270,578,458 |
| குறித்த ஆண்டிற்கான அகற்றல்கள் | - | - | (32,489) | (29,477) | (152,760) | (277,751) | - | (550,527) | - | - | - | (1,043,003) |
| **2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **-** | **237,817,669** | **29,191,425** | **157,841,995** | **33,572,246** | **315,602,265** | **10,649,286** | **87,442,361** | **364,539,687** | **807,133** | **-** | **1,237,464,072** |
| **தேறிய புத்தகப் பெறுமானம்** | | | | | | | | | | | | |
| **2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | 1,701,736,867 | 647,059,747 | 36,770,687 | 81,147,774 | 36,906,672 | 261,543,633 | 4,207,787 | 55,721,244 | 50,723,707 | 871,432 | 19,331,449 | 2,896,020,994 |
| **2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **1,701,736,867** | **580,958,728** | **34,782,951** | **59,131,489** | **35,515,060** | **188,107,265** | **1,731,610** | **44,366,032** | **20,242,325** | **925,908** | **19,331,449** | **2,686,829,682** |

# நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புகள் (தொடர்ச்சி)

## 15 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

### 15.2 குழு

| | காணி | கட்டிடங்கள் | தளபாடங்களும் பொருத்துக்களும் | நிர்மாண கருவி சாதனங்களும் உபகரணங்களும் | அலுவலக உபகரணங்கள் | பொறித் தொகுதிகள், இயந்திராதிகள் | கொள்கலன்கள் | கணனிகள் | வாகனங்கள் | வாசிகசாலைப் புத்தகங்கள் | நிகழும் மூலதனப் பணி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **ஆகுசெலவு** | | | | | | | | | | | | |
| 2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 868,308,713 | 66,576,332 | 269,796,240 | 70,698,716 | 637,340,952 | 22,809,362 | 134,249,216 | 699,201,842 | 1,479,368 | 30,237,106 | 4,510,849,861 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள சேர்வுகள் | - | 2,839,187 | 10,641,436 | 48,848,974 | 13,128,530 | 63,867,583 | - | 21,914,581 | 73,217,089 | 335,623 | 1,000,000 | 235,793,003 |
| குறித்த ஆண்டு காலப் பகுதியிலுள்ள அகற்றல்கள் / பதிவழிப்புகள் | - | - | (64,977) | (36,846) | (216,333) | (24,662,189) | - | (678,286) | - | - | (786,276) | (26,444,907) |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 871,147,900 | 77,152,791 | 318,608,368 | 83,610,913 | 676,546,346 | 22,809,362 | 155,485,511 | 772,418,931 | 1,814,991 | 30,450,830 | 4,720,197,957 |
| **திரண்ட தேய்மானம்** | | | | | | | | | | | | |
| 2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | 180,508,053 | 22,485,019 | 133,788,961 | 26,373,109 | 257,083,642 | 10,694,386 | 67,615,747 | 513,446,277 | 607,936 | - | 1,212,603,130 |
| குறித்த ஆண்டிற்கான அறவீடு | - | 69,904,618 | 9,803,563 | 61,282,448 | 11,592,409 | 119,497,200 | 4,561,872 | 28,939,477 | 121,408,010 | 204,584 | - | 427,194,180 |
| குறித்த ஆண்டிற்கான அகற்றல்கள் | - | - | (32,489) | (29,477) | (152,760) | (7,512,296) | - | (550,527) | - | - | - | (8,277,548) |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | - | 250,412,671 | 32,256,093 | 195,041,932 | 37,812,757 | 369,068,546 | 15,256,258 | 96,004,697 | 634,854,287 | 812,520 | - | 1,631,519,762 |
| **தேறிய புத்தகப் பெறுமானம்** | | | | | | | | | | | | |
| 2015 சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 687,800,660 | 44,091,313 | 136,007,279 | 44,325,607 | 380,257,310 | 12,114,976 | 66,633,469 | 185,755,565 | 871,432 | 30,237,106 | 3,298,246,731 |
| 2015 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை | 1,710,152,014 | 620,735,229 | 44,896,698 | 123,566,436 | 45,798,155 | 307,477,800 | 7,553,104 | 59,480,814 | 137,564,645 | 1,002,472 | 30,450,830 | 3,088,678,195 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு 2015 ரூ. | குழு 2014 ரூ. | ம.பொ.உ.ப. 2015 ரூ. | ம.பொ.உ.ப. 2014 ரூ. |
|---|---|---|---|---|---|
| 16 | **முதலீடுகள்** | | | | |
| | நீண்டகால முதலீடு (குறிப்பு 16.1) | **39,477,863** | 34,521,663 | **44,253,587** | 44,521,683 |
| | குறுங்கால முதலீடு (குறிப்பு 16.2) | **3,341,850,862** | 2,753,124,096 | **2,570,978,949** | 2,457,313,968 |
| | | **3,381,328,725** | 2,787,645,759 | **2,615,232,536** | 2,501,835,652 |
| 16.1 | **நீண்டகால முதலீடு** | | | | |
| | **கடன்களும் கிடைக்க வேண்டிய நிதி சார்ந்த சொத்துக்களும்** | | | | |
| | நிலையான வைப்பிலுள்ள முதலீடு | **37,477,863** | 32,521,663 | **32,253,567** | 32,521,663 |
| | **விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி சார்ந்த சொத்துக்கள்** | | | | |
| | பங்குகளிலுள்ள முதலீடு | **2,000,000** | 2,000,000 | **2,000,000** | 2,000,000 |
| | | **39,477,863** | 34,521,663 | **34,253,567** | 34,521,663 |
| | **துணை நிறுவனத்திலுள்ள முதலீடு (குறிக்கப்படாத)** | | | | |
| | சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | **-** | - | **10,000,020** | 10,000,020 |
| | | **-** | - | **10,000,020** | 10,000,020 |
| | | **39,477,863** | 34,521,663 | **44,253,587** | 44,521,683 |
| 16.2 | **குறுங்கால முதலீடு** | | | | |
| | களஞ்சியம் | **23,060,945** | 354,379,710 | **23,060,945** | 354,379,710 |
| | குறுங்கால முதலீடுகள் | **3,318,789,917** | 2,398,744,386 | **2,547,918,004** | 2,102,934,258 |
| | | **3,341,850,862** | 2,753,124,096 | **2,570,978,949** | 2,457,313,968 |
| 17 | **பொருட்பதிவேடுகள்** | **572,953,193** | 661,739,053 | **92,491,334** | 320,879,617 |
| 18 | **வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகள்** | | | | |
| | வர்த்தக சார் வருமதிகள் (குறிப்பு18.1) | **8,752,260,696** | 8,340,680,497 | **7,477,102,671** | 7,674,627,115 |
| | ஏனைய வருமதிகள் (குறிப்பு18.2) | **62,188,982** | 79,214,999 | **55,085,186** | 78,865,817 |
| | வைப்புகள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள் (குறிப்பு18.3) | **123,329,312** | 162,373,973 | **1,910,821,229** | 1,827,864,387 |
| | | **8,937,778,990** | 8,582,269,469 | **9,443,009,085** | 9,581,357,319 |
| 18.1 | **வர்த்தக சார் வருமதிகள்** | | | | |
| | கடன்கள் | **4,910,809,866** | 4,851,494,259 | **4,918,751,788** | 4,813,303,421 |
| | வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய தொகைகள் | **2,323,950,223** | 1,938,653,785 | **1,061,164,764** | 1,311,573,698 |
| | கிடைக்க வேண்டிய பிடித்துவைத்தல் தொகைகள் | **2,738,974,863** | 2,631,971,685 | **2,710,616,323** | 2,631,189,228 |
| | கழிக்குக - நட்டத்திற்கான ஏற்பாடு (குறிப்பு 18.1.1) | **(1,221,474,256)** | (1,081,439,232) | **(1,213,430,205)** | (1,081,439,232) |
| | | **8,752,260,696** | 8,340,680,497 | **7,477,102,671** | 7,674,627,115 |
| 18.1.1.1 | **நட்டத்திற்கான ஏற்பாடு** | | | | |
| | ஆரம்பத்திலுள்ள நிலுவை | **1,085,729,714** | 825,536,046 | **1,081,439,232** | 825,536,046 |
| | இனங்காணப்பட்ட நட்டம் | **220,641,109** | 308,872,385 | **216,887,539** | 308,872,385 |
| | பதிவழிக்கப்பட்ட தொகைகள்/ஒதுக்கம் | **(84,896,566)** | (52,969,199) | **(84,896,566)** | (52,969,199) |
| | இறுதியிலுள்ள நிலுவை | **1,221,474,257** | 1,081,439,232 | **1,213,430,205** | 1,081,439,232 |
| 18.2 | **ஏனைய வருமதிகள்** | | | | |
| | ஊழியர் கடன்கள் | **38,553,373** | 45,044,790 | **38,073,373** | 45,044,790 |
| | முன்கூட்டி செலவாகிய ஊழியர் ஆகுசெலவு | **2,757,468** | 4,175,840 | **2,757,468** | 4,175,840 |
| | பொதுத்தொங்கு கணக்கு | **(41,901)** | (30,530) | **(23,151)** | (30,530) |
| | நானாவிதப் பற்றுக்கள் | **20,123,687** | 15,751,205 | **13,481,141** | 15,402,022 |
| | கிடைக்க வேண்டிய நி.வை.வ. | **796,355** | 14,273,695 | **796,355** | 14,273,695 |
| | | **62,188,982** | 79,214,999 | **55,085,186** | 78,865,817 |
| 18.3 | **வைப்புக்கள், முற்கொடுப்பனவுகள், முற்பணங்கள்** | | | | |
| | வைப்புக்கள் | **12,725,152** | 8,655,238 | **9,180,234** | 7,264,484 |
| | முற்பணங்கள் | **95,901,885** | 141,059,312 | **1,892,868,464** | 1,811,978,144 |
| | முற்கொடுப்பனவுகள் | **14,702,275** | 12,659,423 | **8,772,530** | 8,621,759 |
| | | **123,329,312** | 162,373,973 | **1,910,821,229** | 1,827,864,387 |
| 19 | **சம்பந்தப்பட்ட கம்பனிகளிடமிருந்து வரவேண்டிய தொகை** | | | | |
| | சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | | | **1,147,466,029** | 1,278,026,970 |
| | | **-** | - | **1,147,466,029** | 1,278,026,970 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **20 காசும் காசு ஒப்புரவுகளும்** | | | | |
| **அனுகூல நிலுவைகள்** | | | | |
| கையிலும் வங்கியிலுமுள்ள காசு | **753,815,916** | 587,965,939 | **594,670,819** | 445,494,154 |
| வங்கி வசக்கட்டுநிதி | **269,607** | 269,607 | **269,607** | 269,607 |
| பரிமாற்றத்திலுள்ள காசு | **47,307,448** | 32,712,246 | **27,487,409** | 3,599,596 |
| | **801,392,971** | 620,947,792 | **622,427,835** | 449,363,357 |
| **பிரதிகூலனுகூல நிலுவைகள்** | | | | |
| வங்கி மேலதிகப்பற்று | **-** | - | **-** | - |
| காசுப் பாய்ச்சல் நோக்கத்திற்கான காசும் காசு ஒப்புரவுகளும் | **801,392,971** | 620,947,792 | **622,427,835** | 449,363,357 |
| **21 குத்தகைக் கடன்கள்** | | | | |
| ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய தொகை | **883,827** | 7,937,483 | **-** | 585,840 |
| ஒரு வருடத்தின் பின்னர் செலுத்த வேண்டிய தொகை | **-** | 888,699 | **-** | |
| | **883,827** | 8,826,182 | **-** | 585,840 |
| **22 ஊழியர் நன்மைகள்** | | | | |
| **சனவரி 01 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **182,165,317** | 204,004,897 | **182,165,317** | 204,004,897 |
| முன்னைய ஆண்டிற்கான நிதியேற்பாடு | **19,492,872** | 15,117,495 | **18,473,950** | 15,117,495 |
| | **201,658,189** | 219,122,392 | **200,639,267** | 219,122,392 |
| குறித்த ஆண்டு காலப்பகுதியில் செலுத்தப்பட்ட கொடுப்பனவு | **(24,200,356)** | (36,957,075) | **(24,200,356)** | (36,957,075) |
| **திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள நிலுவை** | **177,457,833** | 182,165,317 | **176,438,911** | 182,165,317 |

a) 2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கான ம.பொ.உ.ப. ஊழியர் நன்மைகள் கடப்பாடுகள் அட்சுஅரியல் என்ட் மெனேஜ்மென்ட் கன்ஷல்ட்டென்ட் (ப்ரைவட்) லி என்றழைக்கப்படு தொழில் ரீதியில் தகுதி வாய்ந்த கணிப்பீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட உண்மையான விலைமதிப்பீட்டின் அடிப்பன காணப்படுகின்றன. அதற்கிணங்க, ம.பொ.உ.ப. மற்றும் குழு ஆகியவற்றின் 2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கான திட்டவட்டமான ஓய்வூதிய நன்எ கடப்பாடுகளின் நிதியிடப்படாத தற்போதைய பெறுமானம் 176 மில்லியன் ரூபாவாகும்.

b) கணிப்பீட்டில் பிரயோகிக்கப்பட்ட முக்கியமான எடுகோள்களில் பின்வருவன உள்ளடங்கியிருக்கும்:

| | | |
|---|---|---|
| தள்ளுபடி வீதம் | 10% | |
| ஊழியர் புறழ்வுக் காரணி | 0.01% - 0.18% | 0.01% - 0. |
| ஓய்வூதிய வயது | 60 ஆண்டுகள் | 60 ஆண்டு |

c) திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் மீதான செலவுகள்

| | | |
|---|---|---|
| வட்டி ஆகுசெலவு | 18,216,532 | 20,400, |
| நடைமுறை சேவை ஆகுசெலவு | 14,184,516 | 14,766, |
| உடடியாக இனங்காணப்பட்ட தேறிய கணிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | (13,927,098) | (20,049, |
| முழுமையான வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப்பட்ட செலவுகள் | 18,473,950 | 15,117, |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு | | ம.பொ.உ.ப. | |
|---|---|---|---|---|
| | 2015 ரூ. | 2014 ரூ. | 2015 ரூ. | 2014 ரூ. |
| **23 பிற்போடப்பட்ட வரி** | | | | |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 6,477,006 | 228,141 | | |
| குறித்த ஆண்டு காலப்பகுதியிலான ஏற்பாடு | 11,140,808 | 6,248,865 | | |
| குறித்த ஆண்டு இறுதியிலுள்ள நிலுவை | 17,617,813 | 6,477,006 | | |
| **24 வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள்** | | | | |
| வர்த்தக சார் கொடுமதிகள் (குறிப்பு 24.1) | 10,278,486,607 | 9,737,696,372 | 10,540,694,377 | 11,151,130,052 |
| ஏனைய கொடுமதிகள் (குறிப்பு 24.2) | 598,968,216 | 748,007,929 | 391,061,682 | 573,704,353 |
| | 10,877,454,823 | 10,485,704,301 | 10,931,756,058 | 11,724,834,405 |
| **24.1 வர்த்தக சார் கொடுமதிகள்** | | | | |
| கடன்கள் | 3,694,215,992 | 2,752,035,300 | 3,476,350,036 | 4,671,202,415 |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் | 2,721,236,946 | 3,092,010,112 | 2,582,909,025 | 2,015,533,738 |
| ஊக்குவிப்பு, ஏனைய முற்பணங்கள் | 3,494,653,710 | 3,514,139,617 | 3,296,111,961 | 3,479,785,137 |
| ஒப்பந்தத் தரப்புகளுக்கு செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் தொகைகள் | 368,379,960 | 379,511,343 | 1,185,323,355 | 984,608,762 |
| | 10,278,486,607 | 9,737,696,372 | 10,540,694,377 | 11,151,130,052 |
| **24.2 ஏனைய கொடுமதிகள்** | | | | |
| செலுத்தப்படாத சம்பளங்கள் | 673,958 | (566,477) | 266,255 | (566,477) |
| நானாவிதக் கடன்கள் | 64,065,064 | 54,070,619 | 53,838,660 | 49,609,241 |
| மீளளிக்கத்தகு வைப்புக்கள் | 382,670 | 384,244 | 382,670 | 384,244 |
| அட்டுறு செலவுகள் | 336,573,012 | 406,106,210 | 257,565,814 | 330,046,519 |
| பெ.சே.வ. இற்கான ஏற்பாடு | - | | - | |
| செலுத்துநர் வரி | 5,864,442 | 4,888,684 | 5,675,798 | 4,798,783 |
| இரத்துச்செய்யப்பட்ட காசோலை | - | 4,927,410 | - | 2,754,693 |
| ஏனைய வரிகள் | 191,409,071 | 278,197,239 | 73,332,485 | 186,677,350 |
| | 598,968,216 | 748,007,929 | 391,061,682 | 573,704,353 |
| **25 செலுத்த வேண்டிய வருமான வரி** | | | | |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலுள்ள நிலுவை | 737,897,410 | 546,972,887 | 717,039,064 | 531,111,429 |
| குறித்த ஆண்டிற்கான வருமான வரி | 276,217,628 | 265,700,526 | 250,935,705 | 243,267,389 |
| முன்னைய ஆண்டிற்கான ஏற்பாடு | - | - | | |
| முன்னைய ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (233,458,346) | (65,704,199) | (211,600,000) | (48,842,740) |
| நிறுத்திவைத்தல் வரி | (6,214,977) | (9,071,804) | (5,009,058) | (8,497,014) |
| குறித்தஆண்டு இறுதியிலுள்ள நிலுவை | 774,441,714 | 737,897,410 | 751,365,710 | 717,039,064 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

## திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 27 சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல்வாங்கல்கள்

#### 27.1 துணை நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

a) பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க ம.பொ.உ.ப. மற்றும் குழு என்றழைக்கப்படும் துணை நிறுவனம் (CESL) ஆகிய இரண்டினதும் தலைவராவார். 2015 திசம்பர் 31 ஆம் திகதிற்கு ம.பொ.உ.ப. பணிப்பாளர்களாக இருந்த திரு ஆர்.ஜி.எம். ரணதுங்க, திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க மற்றும் பொறியியலாளர் எச்.பீ. ஜயசேக்கர ஆகியோர் இந்த CESL நிறுவனத்தின் பணிப்பாளர்களாகவும் இருந்தனர். குறித்த ஆண்டு காலப் பகுதியில் இந்தக் கம்பனி ம.பொ.உ.ப. பணியகத்துடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. விபரங்கள் பின்வருமாறு:

2015 ஆம் ஆண்டிலிருந்து பணிப்பாளர்கள் சபை பின்வருமாறு மாற்றமடைந்திருந்தது.

| பெயர் | பதவிப்பெயர் ம.பொ.உ.ப. | CESL |
|---|---|---|
| பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க | தலைவர் | தலைவர் |
| திரு எம்.ஆர்.ஜி. ரணதுங்க | தொழிற்படு பணிப்பாளர் | பணிப்பாளர் |
| பொறியியலாளர் என். ரூபசிங்க | பணிப்பாளர் | பணிப்பாளர் |
| திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க | பணிப்பாளர் | பணிப்பாளர் |

ம.பொ.உ.ப. மற்றும் CESL நிறுவனம் ஆகியவற்றின் முக்கிய முகாமைத்துவ ஊழியர்கள் பற்றிய விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| பெயர் | பதவிப்பெயர் ம.பொ.உ.ப. | CESL |
|---|---|---|
| பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து | பொது முகாமையாளர் | பணிப்பாளர் |
| பொறியியலாளர் ரீ.டீ. விக்ரமரட்ன | கூட்டுத்தாபன மேலதிகப் பொது முகாமையாளர் (உசாதுணை) | பணிப்பாளர் |
| பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார | கூட்டுத்தாபன மேலதிகப் பொது முகாமையாளர் (EPC) | பணிப்பாளர்/பி.நி.அ. |
| பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய | மேலதிகப் பொது முகாமையாளர் | பணிப்பாளர் |
| திரு யூ.என்.பீ. மாவத்தகம | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) | பணிப்பாளர் |

b)

| கொடுக்கல்வாங்கல்களின் தன்மை | தொகை 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|
| உப நிர்மாண ஆகுசெலவுகள் | 5,833,113,570 | 4,810,727,985 |
| வாகனங்களின் வாடகை தொடர்பான செலவுகள் | 39,406,657 | 30,216,137 |
| இயந்திராதிகளின் வாடகை தொடர்பான செலவுகள் | - | 9,947,459 |
| இயந்திராதிகளின் வாடகை வருமானம் | - | 22,133,220 |
| வேலையரங்கு வருமானம் | 1,270,314 | 1,777,419 |
| அஸ்பால்ட்டுகளின் விற்பனை | - | 1,289,746 |
| ஆய்வுகூடப் பரிசோதனை வருமானம் | 2,096,151 | 7,370,466 |

#### 27.2 சம்பந்தப்பட்ட தரப்புகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் நியதிகளும் நிபந்தனைகளும்

சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து செய்யப்படும் கொள்வனவுகள் அல்லது அத்தகைய கொள்வனவுகளுக்காக ஏற்பட்ட செலவினம் என்பன மிக நெருங்கிய கொடுக்கல்வாங்கல்களில் காணப்படும் அத்தகையவற்றுக்கு இணையான நியதிகளினதும் நிபந்தனைகளினதும் அடிப்படையில் அமைந்திருக்கும். ஆண்டு முடிவிலுள்ள நிலுவைகள் பாதுகாப்பற்றவையாகவும் வட்டி நீங்கியதாகவும் காணப்படும். தீர்ப்பனவானது காசு அடிப்படையில் நிகழும். சம்பந்தப்பட்ட ஏதாவது தரப்பிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள் அல்லது அந்தத் தரப்புகளுக்குக் கொடுக்க வேண்டியவைகள் தொடர்பில் எந்தவிதமான உத்தரவாதங்களும் அளிக்கப்படவில்லை. இந்தக் குறிப்பு இந்த நிதிக் கூற்றுக்களுக்கான 19 ஆம் இலக்கக் குறிப்புடன் சேர்த்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

#### முக்கிய முகாமைத்துவ ஊழியர்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

LKAS 26 'சம்பந்தப்பட்ட தரப்பு வெளிப்படுத்துகைகள்' நிறுவனத்தின் திட்டமிடல், பணிப்புரை விடுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்கான பொறுப்பும் அதிகாரமும் கொண்டவர்கள், முக்கிய முகாமைத்துவ ஊழியர்களாவர். அதற்கிணங்க, ம.பொ.உ.ப. / குழுவின் முக்கிய முகாமைத்துவ ஊழியர்களான பணிப்பாளர்கள் (நிறைவேற்று மற்றும் நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் அடங்கலாக) முக்கிய முகாமைத்துவ ஊழியர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

| முக்கிய முகாமைத்துவ ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நஷ்டஈடுகள் | குழு 2015 ரூ. | 2014 ரூ. | ம.பொ.உ.ப. 2015 ரூ. | 2014 ரூ. |
|---|---|---|---|---|
| சம்பளங்களும் ஏனைய தொழில் சார்ந்த நன்மைகளும் | 2,811,789 | 2,890,468 | 1,371,968 | 1,371,968 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

## திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

### 28 பொறுப்புக்களும் இடைநேர் பொறுப்புக்களும்

பின்வருவன தவிர, அறிக்கையிடப்படும் திகதியில் ம.பொ.உ.ப. பணியகத்தில் அல்லது அதன் குழுவில் பொருண்மையான பொறுப்புக்களும் இடைநேர் பொறுப்புக்களும் இருக்கவில்லை.

### 28.1 இடைநேர் பொறுப்புக்கள்

**ம.பொ.உ.ப. எதிராக தாக்கல்செய்யப்பட்ட வழக்குகள் பற்றிய விபரங்கள்**

| வழக்கு இலக்கம் | விபரம் | தறபோதைய நிலை |
|---|---|---|
| MR/ 8748<br>மாத்தளை மாவட்ட நீதிமன்றம் | எச்.ஆர்.எஸ். தெத்தெனிய மற்றும் ஏ.ஜே.ஏ.பி. இந்திரசிறி ஆகியோர் தம்புள்ள - கன்டலம வீதிக்கு அருகில் அமைந்துள்ள அவர்களின் இல்லத்திற்கு ஏற்பட்ட நட்டங்களுக்காக ரூ. 8,000,000/- நஷ்டஈட்டைக் கோருகின்றனர். வீதியின் நிர்மாணத்தினால் அந்தப் பாதிப்புகள் ஏற்படவில்லை என விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 296/ நட்டங்கள்<br>அம்பாறை மாவட்ட நீதிமன்றம் | சி. சமந்த நந்த சில்வா ம.பொ.உ.ப. வாகன விபத்தினால் அவரது மகன் இறந்ததற்காக ரூ. 2,500,000/- நஷ்டஈட்டைக் கோருகின்றார். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 155/ நட்டங்கள்<br>கடுவளை மாவட்ட நீதிமன்றம் | வெளிநாட்டுப் பணியகம் ம.பொ.உ.ப. நிர்மாண ஸ்தலத்திலிருந்து மூலப்பொருட்கள் விழுந்ததால் தனது மின்பிறப்பாக்கிக்கு சேதம் ஏற்பட்டதாகக் கூறி ரூ.1,664,677/- தொகையை நஷ்டஈடாக செலுத்துமாறு கோரியுள்ளது. ம.பொ.உ.ப. நிர்மாண வேலைகளுக்கு மூலப்பொருட்கள் பயன்படுத்தவில்லை என்பதால் இந்த வழக்கை எதிர்த்து வாதாடி வருகின்றது. | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 956/M<br>வெலிமட மாவட்ட நீதிமன்றம் | சுந்தர ராஜ் வருன் குமார் மற்றும் சுப்பையா ஆசரி சுந்தர ராஜ் ஆகியோர் விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு ரூ. 1,000,000/- தொகையை நஷ்டஈடாகக் கோரியுள்ளனர். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 524/ நட்டங்கள்<br>கடுவளை மாவட்ட நீதிமன்றம் | எம்.ஐ.எஸ். யோமால் பெரேரா விபத்தினால் ஏற்பட்ட சேதங்களுக்கு ம.பொ.உ.ப. பணியகத்திடமிருந்து ரூ. 10,000,000/- நஷ்டஈடாகக் கோரியுள்ளார். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| நடுத்தீர்ப்பாளர் மூலமான தீர்வு<br>172 மீற்றர் உயரமான சுயமாக தாங்கிநிற்கும் உருக்காலான ஒலிபரப்புக் கோபுரத்தின் நிர்மாணம் - கொக்காவில் | IGTL சொலூஷன் லங்கா நிறுவனம் கோபுரத்தை நிறுவுவதற்கும் அதற்கு நிறந்தீட்டுவதற்கும் ஏற்பட்ட அதிகரித்த மேலதிக ஆகுசெலவுகளுக்காக ரூ. 64,312,623/- தொகையைக் கோரியுள்ளது. ம.பொ.உ.ப. IGTL நிறுவத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க குறித்த வேலை ஒப்பந்தம் மொத்தமான ஒரு நிலையான நிதித் தொகையில் வழங்கப்பட்டதால் மேலதிகக் கோரல்களை விடுப்பதற்கான ஏற்பாடுகளில்லை எனக் கூறி வழக்கை எதிர்த்து வாதாடி வருகின்றது. | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 370/M<br>மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் | சின்னராசா சிவராசா (விதவை) ஹம்சவதனி மற்றும் ஏனைய ஆறு நபர்களும் இணைந்து, ம.பொ.உ.ப. கவனயீனத்தால் கணவர் இறந்தார் என்று கூறி ரூ. 70,000,000/- நஷ்டஈட்டைக் கோருகின்றனர். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 32246/5<br>கொழும்பு நீதிவான் நீதிமன்றம் | குறித்த காலப்பகுதிற்கான ஊ.சே.நி. நிதியாக ரூ. 212,110/ தொகையை கோருதல். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 1564/13<br>கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | பொறியியலாளர் டப்ளியூ.கே.பி.ஐ. ரொட்ரிகு ஒரு மான நஷ்டஈட்டு வழக்கைத் தாக்கல் செய்து ரூ. 500,000,000/- தொகையை நஷ்டஈடாகக் கோருகின்றார். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 1820/13 DMR<br>கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | துவான் வம்ச காசிம் ம.பொ.உ.ப. பணியத்திடமிருந்து ரூ. 1,000,000/- தொகையை தொழிலாளர் நஷ்டஈடாகக் கோருகின்றார். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 1286/L<br>அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றம் | தொழில் ஆணையாளர் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு தொடர்பில் ரூ.1,374,354/- தொகையை ஊ.சே.நி. நிதியாகக் கோரி ம.பொ.உ.ப. பணியகத்திற்கு எதிராக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |
| 609/14 DMR<br>கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | திருமதி ஏ.டீ.கே. பிட்டியகும்புர ரூ.30,000,000/- தொகையை நஷ்டஈடாகக் கோரி ம.பொ.உ.ப. பணியகத்திற்கு எதிராக ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். ஆனால், குறித்த வேலைகள் CESL நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டன. | இன்னும் வழக்கு முடிவடையவில்லை |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } சீஈஎன்/பீ/சீஈசீபீ/எவ்ஏ/2015    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2017 மே 18

தலைவர்,
மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்.

**மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (சீஈசீபீ) மற்றும் சீஈசீபீ மற்றும் அதன் துணைக்கம்பனி என்பவற்றின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (சீஈசீபீ) மற்றும் சீஈசீபீ மற்றும் அதன் துணைக்கம்பனி என்பவற்றின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சீஈசீபீயின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீஈசீபீயின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீஈசீபீயின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

#### (அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 ஆம் மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### (ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சீஈசீபீ

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 தொகுதி நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

ரூபா 41,901 தொங்கல் கணக்கு மீதியானது இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாமல் 2015 ஆம் ஆண்டிற்கான தொகுதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**2.3 சீசீபீயின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செயற்திட்டங்கள் தொடர்பான ஆண்டிறுதி கடன்பட்டோர் மீதிகளை மதிப்பீடு செய்யும் போது கொடுப்பனவுச் சான்றிதழ்கள் / சான்றுறுதிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்களிலுள்ள தொகைகளை சீசீபீ கருத்திற்கொள்ளாததன் விளைவால் அந்தச் செயற்திட்டங்களின் கடன்பட்டோர் மீதிகளின் உண்மை நிலைமை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 15,944,859 ஆல் குறைத்தும் ரூபா 17,021,023 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்த நிர்மாணப் பிரிவின் 48 செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 285,307,117 கூட்டுத்தொகையான அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் கணக்குகளில் காணப்பட்டன. இந்த மீதி ஒப்பந்த நிபந்தனைகளின் 03 ஆம் பிரிவு, நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தால் வழங்கப்பட்ட ஐசீரீஏடி/எஸ்பீடி/02 ஆம் இலக்க நியம கேள்வி கோரல் ஆவணத்தின் 14.2(பீ) உட்பிரிவு என்பவற்றின் பிரகாரம் 90 சதவீத பூர்த்தியாக்கல் கட்டத்தினை செயற்திட்டம் அடைவதற்கு முன்னர் வேலை ஆரம்பிப்பு முற்பணம் முழுமையாக அறவிடப்பட்டிருந்ததன் காரணமாக இந்த மீதி அதன் தன்மையில் அசாதாரணமாக இருந்தது.

(இ) டி1726, டி1691, டி1721, டி1758, டி884 மற்றும் டி1597 ஆகிய இலக்கத்தைக் கொண்ட ஆறு நிர்மாண செயற்திட்டங்கள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டமை தொடர்பில் ரூபா 1,807,996,165 சீராக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொகை மீளாய்வாண்டின் ஒப்பந்த வருமானத்தை மதிப்பீடு செய்வதில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிர்மாண வருமானம் ரூபா 83,009,985 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 2,162,929 மற்றும் ரூபா 5,356,240 வேலை ஆரம்பிப்பு முற்பண மீதி 871 ஆம் இலக்கத்தைக் கொண்ட செயற்திட்டம் மற்றும் C-880 ஆம் இலக்கத்தைக் கொண்ட உசாத்துணைச் செயற்திட்டம் என்பவற்றின் முறையே 31 மற்றும் 27 ஆம் இலக்க சிட்டைகளின் பிரகாரம் முழுமையாக அறவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியவைகளாக இந்த தொகைகள் காட்டப்பட்டிருந்தன. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணம் அந்த தொகைகளால் அதிகரித்துக்

காட்டப்பட்டிருந்தது. மேலும், 29 ஆம் இலக்க சிட்டை தொடர்பான ரூபா 3,641,916 வேலை ஆரம்பிப்பு முற்பணம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு இரு தடவை எடுக்கப்பட்டிருந்தது. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 3,641,916 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டவாறு, 2012 ஆம் ஆண்டில் வீதிச் செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கான மூலதன மானியமாக முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து ரூபா 3,601 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் சீஈசீபீ இனால் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 இல் சீஈசீபீ இற்கு செலுத்த வேண்டிய ஒப்பந்தக் கொடுப்பனவுகளிலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ரூபா 250 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது. மேலும், அந்தச் சொத்துக்களின் தொழில்சார் பெறுமதி மதிப்பீடு எதனையும் மேற்கொள்ளாமலும் ரூபா 3,351 மில்லியன் மானியத்தை புறக்கணித்தும் சீஈசீபீ ரூபா 250 மில்லியன் பெறுமதியில் அவற்றை கணக்கீடு செய்திருந்தது.

(ஊ) C-880 மற்றும் C-1189 ஆம் இலக்கத்தைக் கொண்ட உசாத்துணைச் செயற்திட்டம் தொடர்பில் முறையே ரூபா 5,367,016 பெறுமதியான மூன்று சிட்டைகள் மற்றும் ரூபா 1,221,047 உசாத்துணை வருமானம் என்பன 2015 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) உசாத்துணைச் செயற்திட்டங்களின் கடன்பட்டோர் மீதியை மதிப்பீடு செய்யும் போது, ரூபா 128,049,658 ஆன சான்றுறுதிப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் பெறுமதி கருதப்படுவதற்குப் பதிலாக ரூபா 144,463,477 சிட்டைப் பெறுமதியாக கருதப்பட்டிருந்ததனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 16,413,819 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு தள அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ஏழு வாகனங்கள் வேறொரு தள அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களில் மீண்டும் காட்டப்பட்டிருந்தது. ஆகையால், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிலையான சொத்து மீதியின் சரியான தன்மையை கணக்காய்வில் தொடர்புபடுத்த முடியாதிருந்தது.

விகணகாධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

### 2.3.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஜாவத்த தள அலுவலகத்தின் இருப்பு மீதிக்கும் அந்த அலுவலகத்தின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு மீதிக்கும் இடையில் ரூபா 2,002,841 வேறுபாடு கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 2.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 11 தள அலுவலகங்களின் 202 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 528,611,508 நிர்மாணப் பிரிவு கடன்பட்டோர் மீதி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு வருடங்களிற்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாகவிருந்தது. அறவீட்டு நடவடிக்கையெதுவும் எடுக்கப்படாமல் அந்த மீதிகள் 2016 ஒக்தோபர் 30 வரையிலும் நிலுவையாகவிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 51 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 34,287,514 நிலுவைக் கடன்பட்டோர் மீதி உசாத்துணைப் பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நான்கு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு மேலாக அறவிடப்படாதிருந்ததுடன் 2016 மே 31 வரையிலும் இந்த மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர் வளங்கள் பிரிவின் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்ட நான்கு உசாத்துணைச் செயற்திட்டங்கள் தொடர்பில் ரூபா 1,188,982 கூட்டுத்தொகையான தீர்ப்பனவு செய்யப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் 5 வருடங்களிற்கு மேலாக காணப்பட்டன.

### 2.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 4,621,437,551 கூட்டுத்தொகையான பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம், வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் என்பன தொடர்பான வயதுப் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், இந்த மீதிகளின் நம்பகத்தன்மையை கணக்காய்வில் மதிப்பிடமுடியாதுள்ளது.

விගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

(ஆ) ரூபா 1,185,323,365 தொகையான உப ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருந்தது. இருந்த போதிலும், தள அலுவலகங்கள் உப ஒப்பந்ததாரர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளைக் காட்டுவதன் மூலம் இந்த நோக்கத்திற்கான பதிவேடொன்றை பேணியிருக்கவில்லை. மேலும், கொடுக்க வேண்டிய நிறுத்திவைத்தல் பணத்திற்கான பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கொடுக்க வேண்டிய நிறுத்திவைத்தல் பணத்தின் சரியானதன்மை மற்றும் நம்பகத்தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1994 யூன் 04 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | ஒதுக்கப் படிகள், வேதனப் படிகள் மற்றும் தொழில்சார் படிகள் போன்ற பல்வேறு படிகள் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமில்லாமல் சீஈசீபீயின் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டில் அத்தகைய படியாக அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 139,720,462 ஆக இருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈசீபீ மற்றும் தொகுதியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 552,433,247 மற்றும் ரூபா 684,223,033 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 595,972,241 மற்றும் ரூபா 713,584,787 ஆன வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 43,538,994 மற்றும் ரூபா 29,361,755 அல்லது 7.9 சதவீதம் மற்றும் 4.3 சதவீத முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான சீஈசீபீ மற்றும் தொகுதியின் நிதி வருமானம் முறையே ரூபா 4,772,839 மற்றும் ரூபா 14,315,016 ஆல் அதிகரித்தமையும் செயற்பாட்டுச் செலவினம் முறையே ரூபா 260,617,259 மற்றும் 152,299,283 ஆல் குறைவடைந்தமையும் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான சீஈசீபீ மற்றும் தொகுதியின் வருமானம் முறையே ரூபா 2,549,226,637 மற்றும் ரூபா 1,977,945,700 ஆல் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான சீஈசீபீயின் பெறுமதிச் சேர்க்கை ரூபா 2,171 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய 04 ஆண்டுகளிற்கான பெறுமதிச் சேர்க்கையை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டினைத் தவிர்த்து படிப்படியான முன்னேற்றம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈசீபீ அதன் 1,350 பதவியணியினர் பலம் மற்றும் ரூபா 16,607 மில்லியன் மொத்தச் சொத்துக்கள் அடிப்படை என்பவற்றைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 596 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை உழைத்திருந்தது. ஆகையால், சீஈசீபீ இன் மொத்தச் சொத்துக்களில் 3.58 சதவீதத்தை இலாபம் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

(ஆ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 4.9 சதவீதம் மற்றும் 3.7 சதவீதமாக இருந்தன. இந்த இலாப எல்லைகள் முறையே 0.7 சதவீதத்தாலும் 0.63 சதவீதத்தாலும் சிறிதளவு அதிகரித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈசீபீயின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், உசாத்துணைப் பிரிவு மற்றும் நிர்மாணப் பிரிவு என்பன மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அவற்றின் இரண்டு இலக்குகளை அடைவதற்கு தவறியிருந்தன.

(ஆ) சீஈசீபீயின் உசாத்துணைப் பிரிவு அனைத்து வகையான பொறியியல் உசாத்துணைகளில் நாட்டிற்கு சேவைசெய்வதற்காக அனைத்து தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களுடன் முழுமையாக உருவாக்கப்பட்டிருந்த போதிலும் சீஈசீபீயை ஸ்தாபித்த நோக்கங்களிற்கு முரணாக தற்போது சீஈசீபீ உசாத்துணையை விட நிர்மாண வேலைகள் மீது பிரதானமாக கவனம் செலுத்தியிருந்தது.

### 4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

ஊழியர் சேமலாப நிதியம் (ஈபிஎவ்) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈரீஎவ்) என்பவற்றிற்கான பங்களிப்பு 2006-2011 காலப்பகுதிக்கான வழ்க்கைச் செலவுப் படிகளை எடுக்காமல் சீஈசீபீயால் கணிப்பிடப்பட்டிருந்தன. ஆகையால், மீளாய்வாண்டின் போது 50 சதவீத மேலதிகக்கட்டணத்தை உள்ளடக்கிய ஊழியர் பங்களிப்பின் பகுதியொன்றாக சீஈசீபீயால் ரூபா 79,520,536 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காசு அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் பெறுமதி சேர் வரி (வற்) என்பவற்றை சீஈசீபீ செலுத்துகின்றது. 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2002

இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காசு அடிப்படையில் என்பீரீ மற்றும் வற் என்பவற்றை செலுத்துவதற்கான அங்கீகாரத்தை உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து சீஈசீபீ பெற்றிருக்கவில்லை.

(ஆ) சீஈசீபீயின் தள அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக வாகனங்களை கொள்வனவு செய்யும் நோக்கில் வரையறுக்கப்பட்ட தனியார் மத்திய பொறியியல் சேவைகள் கம்பனிக்கு (சீஎஸ்எல்) காசு முற்பணங்களை சீஈசீபீ செலுத்தியிருந்தது. பின்னர் சீஈஎஸ்எல் இந்த முற்பணங்களை பயன்படுத்தி வாகனங்களை கொள்வனவு செய்து சீஈசீபீக்கு வாடகைக்கு வழங்கியிருந்தது. வாடகை கட்டணங்களுக்கு சேர்க்கப்பட்ட 10 சதவீத முகாமைத்துவ கட்டணத்துடன் ஐந்து வருடங்களிற்குள் சீஈசீபீயிடமிருந்து பெறவேண்டிய வாடகை வருமானத்திலிருந்து சீஈஎஸ்எல் ஆல் மேற்படி காசு முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டியிருந்தது. மேலும், ஐந்து ஆண்டுகளின் இறுதியில் இந்த வாகனங்களின் உரிமைத்துவம் சீஈஎஸ்எல் இன் கீழ் இருந்தது.

## 4.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

வற் பதிவு இலக்கங்களின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் வற் சிட்டைகள் என்பவற்றைப் பரீட்சிக்காமல் 22 ஒப்பந்ததாரர்களிற்கு சீஈசீபீயால் ரூபா 3,956,356 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தகாரர்களால் குறிப்பிடப்பட்ட வற் இலக்கங்கள் மற்றும் பெயர்கள் செயற்பாட்டிலில்லாதிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள மந்தமான செயலாற்றல் காரணமாக கையேற்கப்பட்ட 31 நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது சீஈசீபீயால் ரூபா 158,737,294 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) நியம தொழில்நுட்பக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 1353 ஆம் இலக்கத்தையுடைய செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 27,112,744 ஆக இருந்தபோதிலும் அந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 37,523,409 ஆக இருந்தது. எனவே, இந்த செயற்திட்டம் மீது சீஈசீபீயிற்கு விளைந்த நட்டம் ரூபா 10,410,665 ஆக இருந்தது.

### 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈசீபீயின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 1,350 மற்றும் 1,471 ஆக இருந்தன. சகல ஊழியர் வகுதிகளிலும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை 121 ஆல் விஞ்சி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் முறையான பதவியணி முகாமைத்துவம் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 நிதிகளின் குறைப்பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 80,325,947 தொகை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாமல் நீர் வளங்கள் பிரிவின் கீழ் பரந்த காணி செயற்திட்டத்திற்காக திறக்கப்பட்டிருந்த வங்கி நடைமுறைக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு மாதங்களிற்கு மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) துறைமுக புனரமைப்பிற்காக மாலைதீவு சுனாமி நிர்மாணச் செயற்திட்டத்திற்கான உசாத்துணைச் சேவை 2014 யூலையில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 8,047,501 (எம்விஆர் 856,016.91) நடைமுறைக் கணக்கு மீதி சீஈசீபீக்கு எதுவித திருப்பியனுப்புதலும் இல்லாமல் வங்கியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான இலக்கங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சீஈசீபீயின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

| முறைமைகள் அல்லது கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள் | செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய மீதிகள் உரிய தரப்பினர்களால் உறுதிப்படுத்தப்படாமல் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக காணப்பட்டன. |
| (ஆ) | பொருட்கட்டுப்பாடு மற்றும் இருப்பு முகாமைத்துவம் | ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான வேலைத்தளத்திலுள்ள பொருள் மற்றும் இருப்பு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | விலைப்பட்டியலிடல் | நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக உண்மையாக செய்யப்பட்ட வேலை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# ஒப்பீட்டு ரீதியான நிதிக் கூற்றுக்கள்

## மத்திய பொறியியல் உசாதுணை பணியகம்

## முழுமையான வருமானக் கூற்று

**திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | 2015 | | 2014 | | 2013 | | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| வருமானம் | 11,423,636,967 | 10,710,472,734 | 13,401,582,667 | 13,259,699,366 | 15,132,718,158 | 15,131,164,037 | 13,051,404,569 | 13,051,404,569 | 8,550,176,848 | 8,550,176,848 |
| விற்பனை ஆகுசெலவு | (9,679,902,097) | (9,448,860,733) | (11,487,873,150) | (11,656,600,792) | (13,280,839,809) | (13,414,329,871) | (11,427,073,880) | (11,491,305,532 | (7,592,905,377) | (7,626,512,721) |
| **முழுமொத்த இலாபம்** | **1,743,734,870** | **1,261,612,002** | **1,913,709,517** | **1,603,098,574** | **1,851,878,349** | **1,716,834,166** | **1,624,330,689** | **1,560,099,037** | **957,271,471** | **923,664,127** |
| ஏனைய வருமானம் | 168,515,920 | 173,393,789 | 147,476,316 | 169,674,146 | 153,445,158 | 144,727,925 | 394,515,789 | 378,235,199 | 291,500,170 | 289,825,801 |
| நிருவாகம் சார்ந்த செலவு | (1,128,975,590) | (759,749,098) | (1,189,348,793) | (1,033,810,083) | (1,255,752,763) | (1,151,711,425) | (1,183,162,649) | (1,118,904,881 | (951,787,024) | (921,391,793) |
| விற்பனை, பகிர்ந்தளிப்பு செலவு | (222,249,855) | (220,503,209) | (314,175,035) | (314,175,035) | (335,210,717) | (321,479,322) | (316,855,524) | (316,855,524 | (84,396,410) | (84,396,410) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் பெறுபேறுகள்** | **561,025,344** | **454,753,483** | **557,662,005** | **424,787,602** | **414,360,027** | **388,371,344** | **518,828,305** | **502,573,831** | **212,588,207** | **207,701,724** |
| நிதி சார்ந்த வருமானம் | 168,766,491 | 150,007,977 | 154,451,475 | 145,235,138 | 217,808,170 | 213,907,634 | 201,368,165 | 199,625,758 | 114,975,754 | 114,939,272 |
| நிதி சார்ந்த கட்டணங்கள் | (16,207,048) | (8,789,218) | (27,890,447) | (17,589,492) | (22,154,752) | (17,532,829) | (24,343,420) | (20,123,026 | (15,444,710) | (14,609,857) |
| **தேறிய நிதி சார்ந்த வருமானம்** | 152,559,443 | 141,218,758 | 126,561,028 | 127,645,646 | 195,653,418 | 196,374,805 | 177,024,745 | 179,502,732 | 99,531,044 | 100,329,415 |
| **வருமான வரிக்கு முன்னருள்ள இலாபம்** | **713,584,787** | **595,972,241** | **684,223,033** | **552,433,247** | **610,013,445** | **584,746,149** | **695,853,050** | **682,076,563** | **312,119,251** | **308,031,139** |
| வருமான வரி | (287,358,436) | (250,935,705) | (271,949,391) | (243,267,389) | (267,791,716) | (256,524,029) | (291,677,345) | (285,794,064 | (164,074,708) | (161,905,298) |
| **தேறிய இலாபம்** | **426,226,351** | **345,036,536** | **412,273,642** | **309,165,858** | **342,221,729** | **328,222,120** | **404,175,705** | **396,282,499** | **148,044,543** | **146,125,841** |

# ஒப்பீட்டு ரீதியான நிதிக் கூற்றுக்கள்

## நிதி நிலைக் கூற்று

**திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான**

| | 2015 | | 2014 | | 2013 | | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. | குழு | ம.பொ.உ.ப. |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | | | | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் | 3,088,678,195 | 2,686,829,682 | 3,298,246,727 | 2,896,020,996 | 3,362,855,558 | 3,134,280,527 | 3,217,787,244 | 3,029,322,086 | 2,664,214,277 | 2,643,168,837 |
| முதலீடுகள் | 39,477,863 | 44,253,587 | 34,521,663 | 44,521,683 | 38,326,397 | 38,326,417 | 68,114,301 | 68,114,321 | 64,456,627 | 64,456,647 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **3,128,156,058** | **2,731,083,269** | **3,332,768,390** | **2,940,542,679** | **3,401,181,955** | **3,172,606,944** | **3,285,901,545** | **3,097,436,407** | **2,728,670,904** | **2,707,625,484** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | | | | |
| பொருட்பதிவேடுகள் | 594,682,065 | 92,491,334 | 661,739,053 | 320,879,617 | 746,822,316 | 414,331,509 | 667,283,290 | 473,612,890 | 278,209,888 | 277,233,388 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 8,937,778,990 | 9,443,009,085 | 8,582,269,469 | 9,581,357,319 | 13,034,273,723 | 9,465,446,814 | 10,760,043,614 | 8,586,558,801 | 9,277,200,225 | 6,908,203,554 |
| குறுங்கால முதலீடுகள் | 3,341,850,862 | 2,570,978,949 | 2,753,124,096 | 2,457,313,968 | 1,769,259,420 | 1,728,581,897 | 1,572,852,406 | 1,572,852,406 | 1,707,593,967 | 1,707,593,967 |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 801,392,970 | 622,427,835 | 620,947,793 | 449,363,357 | 399,435,851 | 310,353,679 | 534,761,471 | 464,311,326 | 615,208,770 | 528,777,653 |
| கம்பனிகளுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு | - | 1,147,466,029 | - | 1,278,026,970 | - | 1,083,035,301 | - | 234,753,626 | - | |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **13,675,704,887** | **13,876,373,232** | **12,618,080,411** | **14,086,941,231** | **15,949,791,310** | **13,001,749,200** | **13,534,940,781** | **11,332,089,049** | **11,878,212,850** | **9,421,808,562** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **16,803,860,945** | **16,607,456,501** | **15,950,848,801** | **17,027,483,910** | **19,350,973,265** | **16,174,356,144** | **16,820,842,326** | **14,429,525,456** | **14,606,883,754** | **12,129,434,046** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | | | | | | |
| பங்களிக்கப்பட்ட மூலதனம் | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 | 500,000 |
| மூலதன ஒதுக்கீடுகள் | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 3,028,000 | 12,697,551 | 12,697,551 |
| பிடித்துவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | 4,952,476,935 | 4,744,367,819 | 4,526,250,584 | 4,399,331,283 | 4,113,976,942 | 4,090,165,425 | 3,776,496,520 | 3,766,684,612 | 3,247,819,226 | 3,245,900,524 |
| **மொத்த ஒப்புரவு** | **4,956,004,935** | **4,747,895,819** | **4,529,778,584** | **4,402,859,283** | **4,117,504,942** | **4,093,693,425** | **3,780,024,520** | **3,770,212,612** | **3,261,016,777** | **3,259,098,075** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| குத்தகைக் கடன்கள் | - | - | 888,699 | - | 7,199,960 | 604,418 | 35,565,671 | 11,624,193 | 49,724,339 | 36,288,826 |
| ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு | 177,457,833 | 176,438,911 | 182,165,317 | 182,165,317 | 204,004,898 | 204,004,898 | 228,787,990 | 228,787,990 | 203,004,443 | 203,004,443 |
| பிற்போடப்பட்ட வரி | 17,617,814 | - | 6,477,006 | - | 228,141 | - | 76,387 | - | 61,355 | - |
| **மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | **195,075,647** | **176,438,911** | **189,531,022** | **182,165,317** | **211,432,999** | **204,609,316** | **264,430,048** | **240,412,183** | **252,790,137** | **239,293,269** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | | | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 10,877,454,823 | 10,931,756,058 | 10,485,704,301 | 11,724,834,406 | 14,451,694,061 | 11,333,291,954 | 12,328,575,900 | 10,019,342,795 | 10,584,051,848 | 8,123,827,340 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 774,441,715 | 751,365,710 | 737,897,410 | 717,039,064 | 546,972,887 | 531,111,429 | 382,092,902 | 374,116,600 | 452,561,417 | 450,453,362 |
| குத்தகைக் கடன்கள் | 883,827 | - | 7,937,483 | 585,840 | 23,368,376 | 11,650,020 | 36,544,774 | 18,740,207 | 7,107,672 | - |
| தள அலுவலகங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு | - | - | - | - | - | - | 6,701,059 | 6,701,059 | - | - |
| கம்பனிகளுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு | - | - | - | - | - | - | 22,473,123 | - | - | 7,406,097 |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் | - | - | - | - | - | - | - | - | 49,355,903 | 49,355,903 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | **11,652,780,363** | **11,683,121,770** | **11,231,539,196** | **12,442,459,310** | **15,022,035,324** | **11,876,053,403** | **12,776,387,758** | **10,418,900,661** | **11,093,076,840** | **8,631,042,702** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **11,847,856,010** | **11,859,560,681** | **11,421,070,218** | **12,624,624,627** | **15,233,468,323** | **12,080,662,719** | **13,040,817,806** | **10,659,312,844** | **11,345,866,977** | **8,870,335,971** |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | **16,803,860,945** | **16,607,456,501** | **15,950,848,801** | **17,027,483,910** | **19,350,973,265** | **16,174,356,144** | **16,820,842,326** | **14,429,525,456** | **14,606,883,754** | **12,129,434,046** |


*அடைப்புக்குறிகளுக்குள்ளிருக்கும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்*


# ம.பொ.உ.ப. பின்னணி

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) நீர் வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான பல துறை பொறியியல் உசாதுணை சேவைகளை வழங்கும் நிமித்தம் 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும்.

இந்தப் பணியகம் இலங்கையிலுள்ள பாரிய சில அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னோடியாக விளங்கியது. இது பல பொறியியல் பிரிவுகளிலும் பல நிபுணர்களை உள்ளடக்கிய இலங்கையில் காணப்படும் மிகவும் முதன்னிலையான உசாதுணை நிறுவனமாகும். ம.பொ.உ.ப. மகாவலிக் கருத் திட்டத்தின் செயற்படுத்துகையில் (இலங்கையிலுள்ள பாரிய ஆற்று மைய நீர்த்தேக்க அபிவிருத்தி) முக்கியமான நிறுவனங்களில் ஒரு நிறுவனமாக பணியாற்றியுள்ளது. பல பில்லியன் ரூபா பெறுமதியான இந்தக் கருத்திட்டங்களின் செயற்படுத்துகையில், இந்தப் பணியகம் ஏனைய பல சர்வதேச உசாதுணை நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி, இந்த நிறுவனங்களினூடாகப் பெற்றுக் கொண்ட அனுபவத்தைக் கொண்டு தனது பொறியியல் ஆற்றலை மேலும் வளர்த்திருந்தது. இந்தப் பணியகம் பாரிய நீர்வலு மற்றும் நீர்ப்பாசனக் கருத்திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட சகல உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும் (அணுகு வீதிகள், பாலங்கள், கட்டிடங்கள் மற்றும் நீர் விநியோகம்) வடிவமைப்புக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாக விளங்கியது. சமூகப் பொருளாதார அம்சங்கள் (மீள்குடியேற்றம், சமுதாய அபிவிருத்தி) மற்றும் சுற்றாடல் ஆகியன தொடர்பான ஆய்வுகள் இந்த சகல பாரிய கருத்திட்டங்களினதும் இன்றியமையாத பாகமாக விளங்கின.

## ம.பொ.உ.ப. பிரதான பிரிவுகள்



ம.பொ.உ.ப. தலைமை அலுவலகம்
415, பௌத்தாலோக்க மாவத்தை,
கொழும்பு 07

# சுருக்கம்

மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் பொறியியல் உசாதுணை சார்ந்த சேவைகளை வழங்கும் நிமித்தம் 1973 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இது பாரிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு பங்களித்து வருகின்றது. விக்டோரியா, கொத்மலை, ரந்தெனிகல, ரன்டம்பே, மாதுருஓயா, கன்யொன், போவதென்ன, சமனலவெவ, குக்குலேகங்கை மற்றும் கொத்மலை அணைக்கட்டு போன்ற கருத்திட்டங்களுக்கும் பங்களித்தது.

தனது ஆரம்பத்திலிருந்து சுயமாக நிதியீட்டி வருகின்றது. இது வெற்றிகரமாக இயங்கியுள்ளது. அரச வருமானத்திற்கு பெரும் பங்களித்துள்ளது.

திறமையும் அனுபவமும் வாய்ந்த அதிகம் ஊக்குவிப்புப் பெற்ற ஊழியர்படை. இதில் 450 எண்ணிக்கைக்கும் அதிகமான பொறியியலாளர்களும், 50 எண்ணிக்கைக்கும் அதிகமான கட்டடக்கலைஞர்களும், 500 எண்ணிக்கைக்கும் அதிகமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர்.

இது 1995 ஆம் ஆண்டில் நிர்மாணத் துறைக்கு (EPC) வியாபித்தது. கட்டிடங்கள், வீதிகள், சுதந்திர வர்த்தக வலயம், பொருளாதார நிலையங்கள், வைத்தியசாலைகள், கைத்தொழில் பேட்டைகள் முதலியவற்றின் நிர்மாண விடயங்களில் ஈடுபட்டது.

நாட்டில் திகன, அனுராதபுரம், காலி, இரத்தினபுரி, பதுளை, கந்தளாய், அம்பாறை, ஜாவத்தை, பத்தரமுல்ல, கம்பஹா, மஹரகம மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பன்னிரெண்டு பிராந்திய அலுவலகங்களுடன் இயக்கச்செயற்பாடுகளை ஆரம்பித்தது.

யுத்தத்திற்குப் பின் அரசாங்கத்துடனான பங்காளித்துவத் தரப்பு

- வடக்கின் வசந்தம்
- வட பிராந்திய வீதிப் புனரமைப்புக் கருத்திட்டம்
- கிழக்கின் உதயம்
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசரநிலைக் கருத்திட்டம் (CARE)

மாலைதீவு, இந்தியா, மியன்மார், ஐக்கிய இராச்சியம், தன்சானியா, ருவண்டா, கிழக்காபிரிக்கா பிராந்தியம் போன்ற சர்வதேச சந்தைகளில் 2007 ஆம் ஆண்டு பிரவேசித்தது.

இது அனுகூலமான நிதி சார்ந்த செயலாற்றுகையைக் காண்பித்த 20 சிறந்த அரச உடமை தொழில்முயற்சி (அ.உ.தொ.) நிறுவனங்கள் பட்டியலில் இடம்பிடித்தது.

2005 ஆம் ஆண்டு முதல் ம.பொ.உ.ப. புகழ்விலும் சந்தைப் பங்கிலும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கண்டுள்ளது. LMD என்பது ஒரு முன்னோடி வியாபார சஞ்சிகையாகும். இந்த சஞ்சிகையில் அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சி நிறுவனங்கள், தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் செயலாற்றுகை தொடர்பான தகவல்களும், தற்போதைய வியாபார அம்சங்களும், முகாமைத்துவ அபிப்பிராயங்களும் உள்ளடங்கியுள்ளன. இந்த LMD சஞ்சிகை நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகையின் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் 20 மிகச் சிறந்த அரச உடமை தொழில்முயற்சி நிறுவனங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது. ம.பொ.உ.ப. முடிவடைந்த 2011/12 ஆண்டிற்கு சிறந்த 20 அ.உ.தொ. நிறுவனங்கள் பட்டியலில் 12-வது நிலையை அடைந்துள்ளது.

ம.பொ.உ.ப. 2011 ஆம் ஆண்டில் முற்றிலும் அரசாங்கத்திற்கு சொந்தமான துணை நிறுவனமாகிய சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) நிறுவனத்தைத் தாபித்து தனது நிர்மாணத் துறையை நெறிப்படுத்துகின்றது. CESL ம.பொ.உ.ப. ஒரு நிர்மாண கரமாக தொழிற்படுகின்றது.

# 2015 ஆம் ஆண்டின் முக்கிய குறிப்புகள்

## 2015 திசம்பர் இறுதியளவில் அடைந்த சாதனைகள் - உசாதுணைப் பிரிவு

**உள்நாட்டு வங்கி நிதியிட்டுள்ள வீதிகள் புனரமைப்புக் கருத்திட்டம் (LBFP)**

| பொதி/விவரம் | கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம் - இ.ரூ. | பௌதீக முன்னேற்றம் % | குறிப்புகள் |
|---|---|---|---|
| நாகொட - நேபொட மற்றும் அவித்தாவ - லேவந்துவ வீதிகள்<br>நாவுல-எலஹர-பள்ளேகம-ஹெட்டிபொல மற்றும் ஹசலக்க - ஹந்துன்கம வீதிகள்<br>ஹப்புதல - பொரலந்த -கெப்பெட்டிபொல வீதி<br>பொடகம-ஹம்பேகமுவ-கல்தோட்ட வீதி | 12,784,173,027.90 | 82 | கருத் திட்டம் நிகழ்கின்றது. |





உள்நாட்டு வங்கி நிதியிட்டுள்ள வீதிகள் புனரமைப்புக்

**தென் பிராந்திய அதிவேக வீதி விரிவாக்கல்**

**பொதி/விவரம் :** மாத்தறையிலிருந்து பெலியத்த, மாத்தளையிலிருந்து அம்பாந்தோட்டை

**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம :** 255,280,000,000.00 இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் % :** 8.34

**குறிப்புகள் :** கருத்திட்டம் நிகழ்கின்றது.




### மாத்தறை - கதிர்காமம் புகையிரத வீதி விரிவாக்கல் கருத்திட்டம்



**பொதி/விவரம்:** **மாத்தறை** : பெலியத்த பிரிவு

**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம்** : 36 பில்லியன் இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் %** : 71% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்புகள்:** கருத்திட்டம் நிகழ்கின்றது.

### அக்குரேகொட பாதுகாப்பு தலைமை அலுவலகக் கட்டிடத்தொகுதி (DHQC)



**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம்** : 77 பில்லியன் இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் %** : 77 % நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்புகள்:** கருத்திட்டம் நிகழ்கின்றது. மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் பொறியியல், கணிய அளவை மற்றும் நிர்மாண முகாமைத்துவம் என்பன தொடர்பான சேவைகளை வழங்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது.

### திருகோணமலை கப்பல் கட்டுமிட இறங்குதுறை வடிவமைப்பு

**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம்** : 1000 மில்லியன் இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் %** : 40% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்புகள்** : கருத்திட்டம் நிகழ்கின்றது.





### களுகங்கை தலவேலைகள் அபிவிருத்திக் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த ஆகு செலவு 12,723 மில்லியன் ரூபா. 2015 ஆம் ஆண்டு இறுதியளவில் அடையப்பட்ட முன்னேற்றம் 15%.





### ப்ரோட்லேண்ட் நீர்வலு கருத்திட்டம்

ம.பொ.உ.ப. இந்தக் கருத்திட்டத்தின் நிர்மாண மேற்பார்வைக்கும் வடிவமைப்பு மீளாய்வுக்கும் பொறுப்புடையதாகும். இந்தக் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 11,480 மில்லியன் ரூபாவாகும். அடையப்பட்ட முன்னேற்றம் 6%.



### AVIC வதிவிடக் கருத்திட்ட நிர்மாணம் - கொழும்பு 03

ம.பொ.உ.ப. ஆவணங்களின் மீளாய்வுக்கு வடிவமைப்பு அலுவலகத்தினூடாக தொழில்நுட்ப உதவியை வழங்கும் பொறுப்பையும் வதிவிட மேற்பார்வைப் பொறுப்பையும் கொண்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் பெறுமதி 25 பில்லியன் ரூபாவாகும். பெறுமதியான இந்தக் அடையப்பட்ட முன்னேற்றம் 25%. எவிக் ஹோட்டல்ஸ் லங்கா லிமிற்றட் இந்தக் கருத்திட்டத்தின் வாடிக்கையாளர் தரப்பாகும்



### ரத்மலான விமானத் தள நீச்சல் தடாக நிர்மாணம்

நீச்சல் போட்டிகளையும் நீர் சார்ந்த விளையாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்தும் நோக்கில் சர்வதேச நியமங்களுக்கு இணங்க மூழ்கி விளையாடக்கூடிய வசதிகள் அடங்கிய 50 மீற்றர் நீளமும் 25 மீற்றர் அகலமும் உடைய (10 மார்க்கங்கள்) ஒரு நீச்சல் தடாகத்தின் நிர்மாணப் பணிகள் இந்தக் கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றன.





## 2015 திசம்பர் முடிவடையும் வரை அடைந்த சாதனைகள் - நிர்மாணப் பிரிவு

### அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக் கட்டிட நிர்மாணம்

**பொதி/விவரம் :** 850 கட்டில் வசதிகளையுடைய பத்து மாடி வைத்தியசாலைக் கட்டிடம்

**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம்:** 1, 654 மில்லியன் இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் % :** 95% நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்புகள்:** கருத்திட்டம் நிகழ்கின்றது.



### ரத்மலான சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரிக்கான பட்டப் படிப்புகள் பீடத்திற்குரிய கல்விக் கலாசாலைக் கட்டிடங்களின் நிர்மாணம்

**கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமானம் :** 690 மில்லியன் இ.ரூ.

**பௌதீக முன்னேற்றம் %:** 100% வீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**குறிப்புகள்:** கருத்திட்டம் நிகழ்கின்றது.



### பத்து மாடியுடைய வைத்தியசாலைக் கட்டிட வடிவமைப்பும் நிர்மாணமும் - கொழும்பு

அடையப்பட்ட முன்னேற்றம் 99மூ. மொத்த ஆகுசெலவு 624 மில்லியன் ரூபா.





### மொரண நீர்த்தேக்க நிர்மாணம்

அடையப்பட்ட முன்னேற்றம் 31%. இந்தக் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 1008 மில்லியன் ரூபா.



பிராந்திய உதவு நிலையத்திற்கான அலுவலகக் கட்டிடம் - ரத்மலான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (மேல்மாகாணம் - தெற்கு)

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 338 மில்லியன் ரூபா. இந்தக் கருத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.



பத்தரமுல்ல தேசிய சுற்றாடல் செயலக வடிவமைப்பும் நிர்மாணம் - ஒரு பசுமைக் கட்டிடக் கருத்திட்டம்

இந்தக் கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு 1126 மில்லியன் ரூபா. அடையப்பட்ட முன்னேற்றம் 22%.






# அண்மை கால விருதுகள்


2015 ஆம் ஆண்டிற்கான நிறுவனங்களுக்குரிய "பொறியியல் சிறப்புக்கான" விருது - உசாதுணை சேவைகளுக்காக இலங்கைப் பொறியியலாளர்கள் நிறுவகத்தினால் தகுதி சான்றிதழ் வழங்கப்பட்டது.



# ம.பொ.உ.ப. நிதி சார் செயலாற்றுகை


குறித்த மீளாய்வு ஆண்டிற்கான ம.பொ.உ.ப. மற்றும் குழு ஆகியவற்றின் இயக்கச் செயற்பாடுகள் முறையே முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னர் மீளெடுத்துரைக்கப்பட்டுள்ள ரூ.552,433,247 மற்றும் ரூ.684,223,033 இலாபங்களுடன் ஒப்பிடும் போது முறையே வரிக்கு முன்னர் ரூ.595,972,241 மற்றும் ரூ.713,584,787 இலாபத்தை ஈட்டியிருந்தன. குழு தனது இலாபத்தை 4% வீதத்தால் அதிகரித்துள்ள அதே வேளையில் ம.பொ.உ.ப. தனது இலாபத்தை 7% வீதத்தால் அதிகரித்துள்ளது. ம.பொ.உ.ப. தனது 1347 ஊழியர்களையும் 16,607 மில்லியன் ரூபா பெறுமதியான மொத்தச் சொத்துக்களையும் பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 595 மில்லியன் ரூபா தேறிய இலாபத்தை (வரிக்கு முன்னர்) ஈட்டியுள்ளது. மேலும், இந்த இலாபமானது பணியகத்தின் மொத்தச் சொத்துக்களில் 4% வீதத்தால் பிரதிபலிக்கப்படுகின்றது.



# சர்வதேச மற்றும் உள்நாட்டு நிலை





# விஷேடமயப்படுத்தப்பட்ட பிரிவுகளும் சேவைகளும்



- கட்டிடம் சார்ந்த சேவைகள்
- வைத்தியசாலை அபிவிருத்தி
- கட்டடக்கலை சார்ந்த சேவைகள்
- நிர்மாண வடிவமைப்புகள்
- கணிய அளவை
- வீதிகள் மற்றும் பாலங்கள்
- புகையிரத வீதி வேலைகள்
- துறைமுக / கடலோரப் பகுதி வேலைகள்
- விமானநிலைய அபிவிருத்தி
- நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு
- நீரியியல் வலு மற்றும் மின்சக்தி
- மின்சார செலுத்துகை மற்றும் பகிர்ந்தளிப்பு
- நீர் வளங்கள் அபிவிருத்தி
- தொழில்நுட்பக் கணக்காய்வு /ணக்கட்டுப் பாதுகாப்பு
- மின்சார மற்றும் எந்திர வேலை
- நில அளவை
- தகவல் தொழில்நுட்பம் (த.தொ.)
- சுற்றாடல் ஆய்வுகள்
- கருத்திட்ட முகாமைத்துவம்
- புவித்-தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் ஆய்வுகூட சேவைகள்











# மனித வளம்

## ம.பொ.உ.ப. மனித மூலதனம்


மத்திய பொறியியல் உசாதுணை பணியகம் (ம.பொ.உ.ப.) "பணியகம்" எனவும் குறிப்பீடுசெய்யப்படுகின்றது. இது அடிப்படை ரீதியில் ஊழியர்கள் "தாமாகவே வளர்ச்சி பெறும்" வகையில் உந்தப்படும் ஊழியர்கள் அடங்கிய மிகவும் உன்னதமாக ஊக்கம்பெற்ற பணிக் குழுக்களின் பாகமாக வரையறையற்ற ஒரு பணி நிலைய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தனது ஊழியர்களுக்கு மதிப்பை பெற்றுக் கொடுக்கின்றது. ம.பொ.உ.ப. மொத்த மனித மூலதனத்தையும் தனது மிகப் பெறுமதியான சொத்தாக எப்பொழுதும் மதித்துள்ளது. இது தனது ம.வ. கொள்கைத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் நிர்மாணக் கைத்தொழிலின் பல வகையான தன்மையையும் அதே நேரம் கேள்வியையும், உறுதிசெய்துகொள்ளும் வகையிலும் பணியாற்றியுள்ளது. தனது ஊழியர்கள் உற்பத்தித்திறன் குறிக்கோள்களுக்கு உதவுவதற்கும் அதே நேரம் தனது ஊழியர்படைக்கு பெறுமானம் சேர்ப்பதற்கும் நிருவாகக் கட்டமைப்புகள், முறைமைகள் மற்றும் நடைமுறைகள் என்பன வகுத்தமைக்கப்பட்டுள்ளன.

## எமது மனித வள வலு

ம.பொ.உ.ப. பணியகத்தினுள் காணப்படும் மனித வளம் சார்ந்த சகல செயற்பாடுகளும் கொள்கை வேலைச்சட்டகத்திலும் மற்றும் கொள்கைப் பிரயோகங்களிலும் ஒருமைப்பாட்டை உறுதிசெய்து கொள்ளும் நிமித்தம் பணியகத்தின் ம.வ. பிரிவைக் கொண்டு முக்கியமாக ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றன.

மொத்தம் ம.பொ.ப.உ. பணியகத்திலுள்ள 1,073 தொழில்தேர்ச்சியாளர்களையும் மற்றும் ஏனைய ஊழியர்களையும் கொண்டு, ஒவ்வொரு தள அலுவலகமும் சிறந்த ஊழியர் அபிவிருத்தி வீதங்களையும் ஊழியர்கள் தக்கவைத்தல் வீதங்களையும் பிரதிபலித்துக்காட்டுகின்றது. இவை பணியகத்தின் பரந்த ம.வ. கொள்கைகளின் வெற்றிக்கான சான்றாக விளங்குகின்றன. எமது பணியகத்தில் பெரும்பான்மையான ஊழியர்கள் (76%) ஆண்களாகும். இதில் பெண்கள் 26 % வீதமாகும். இவர்கள் பின்வரும் பல தொழில்தேர்ச்சிகள் மற்றும் நிபுணத்துவப் பிரிவுகள் என்பவற்றில் பங்கேற்கின்றனர்.

- சிவில்/எந்திரவியல்/மின்னியல்/சுற்றாடல்/முறைமைப் பொறியியலாளர்கள்
- கட்டடக்கலைஞர்கள்
- கணிய அளவையாளர்கள்
- IT தொழில்தேர்ச்சியாளர்கள்
- சட்ட வல்லுநர்கள்
- ம.வ. தொழில்தேர்ச்சியாளர்கள்
- கணக்காளர்கள்
- தொழில்நுட்பம் மற்றும் தொழில்
- நுட்பம் சாராத உதவியாளர்கள்
- வரையுநர்கள்




## ஆட்சேர்ப்பு தொடர்பான கொள்கை

மேம்பாடு, ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள், சிறந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றுக்கு வாய்ப்பளிப்பதனூடாக வளர்ச்சிக்குக் கிடைக்கக் கூடிய பல வாய்ப்புகளின் காரணமாக தொழில்களை ஆரம்பிப்பதற்கு மிகச்சிறந்த ஒரு இடமாக ம.பொ.உ.ப. நீண்டகாலமாக மதிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தப் பணியகம் எமது தேவைகளின் நிமித்தம் தகுதி வாய்ந்த இளம் தொழில்தேர்ச்சியாளர்களையும் மற்றும் ஏனைய மட்ட ஊழியர்களையும் ஆட்சேர்ப்பதில் கவனம் செலுத்தி வருவதோடு, பிரத்தியேகமான செயலாற்றுகையின் அபிவிருத்தியை இயலச்செய்யும் பொருட்டு போதிய பயிற்சி வழங்கப்படுகின்றதா என்பதை உறுதியும் செய்கின்றது.

சகல ஆட்சேர்ப்புகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டல்கள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. சகல ஊழியர்களும் ஆரம்ப, முகாமைத்துவ உதவியாளர், கனிட்ட முகாமையாளர், நடுத்தர முகாமையாளர் மற்றும் உயர் முகாமையாளர் என்ற ஐந்து மட்டங்களில் வகைப்படுத்தப்படுகின்றனர்.

## ம.வ. கொள்கை

மனித வளங்கள் பிரிவு பொது முகாமையாளரின் நேரடியான மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்றது. இந்தப் பிரிவு பணியகத்தில் இடம்பெறும் சகல ம.வ. தொழிற்பாடுகளுக்கும் பொறுப்புடையதாகும். வழமையான உள்ளகக் கணக்காய்வு சோதனையிடல்களினூடாக உறுதிசெய்யப்படும் நடைமுறைகளினால் ஊழியர்களின் தொழில் சார் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் உரிமைகள் என்பன உத்தரவாதப் படுத்தப்படுகின்றன. முறையான கொள்கை வேலைச்சட்டகங்கள் அரசாங்கத்தினால் குறிப்பீடு செய்யப்படும் நடைமுறைகளுக்கு இணங்க பின்பற்றப்படுகின்றன. இத்தகைய வேலைச்சட்டகங்களில் ஆட்சேர்ப்பு, அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள KPI வழிகாட்டல்களின் அடிப்படையிலான செயலாற்றுகை மதிப்பீடு, முறைப்பாடுகளைக் கையாளுதல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, ஊ்டீஈடு என்பன உள்ளடங்குகின்றன.

## பயிற்சியும் அபிவிருத்தியும்

ம.பொ.உ.ப. தனது சகல வகுதி ஊழியர்களுக்கும் பொருத்தமான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டு வருகின்றது. பயிற்சியும் அபிவிருத்தியும் ஒரு கைத்தொழில் முதன்மைத் தரப்பு என்ற ரீதியில் பணியகத்தின் செயலாற்றுகையையும் புகழையும் மேலும் மேம்படுத்தக்கூடிய ஊழியர்களின் புதிய அறிவு, திறன்கள், மனோபாவங்கள், மேம்பாடு என்பவற்றினூடாக தமது கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு ஊழியர்களை மதிப்பிடுவதன் மூலம் தனது மனித வளங்களுக்கான பயிற்சியை நோக்கி பணியகத்தின் முறையான அணுகுமுறையை மேலும் வலுப்படுத்தும்.

மேற்குறித்த இன்றியமையாத அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டு, ம.பொ.உ.ப. தனது பயிற்சிப் பிரிவினால் ஒழுங்கமைக்கப்படும் வதிவிட அறிவு பகிர்வு நிகழ்ச்சித்திட்டம் (சமர்ப்பணங்கள்), உள்ளக வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் சார்ந்த மீளாய்வுகள், கள விஜயங்கள், வேலையரங்குகள், விரிவுரைகள் /கருத்தரங்குகள், சான்றிதழ் பாடநெறிகள், தொடர்ச்சியான தொழில் திறன் விருத்திப் பாடநெறிகள், டிப்ளோமாக்கள், வெளிநாட்டுப் பயிற்சி, முதுமானி மற்றும் பட்டப் பின்படிப்பு போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகளை தனது ஊழியர்களுக்கு வழங்குகின்றது.

பயிற்சிப் பிரிவு வழமையான மதிப்பாய்வுகளை மேற்கொண்டு, கற்கைப் பாடநெறிகள் மற்றும் ஆராய்ச்சி, மாநாடுகள், கருத்தரங்குகள், சமர்ப்பணங்கள், வேலையரங்குகள் போன்ற அமைப்புகளில் கிடைக்கக்கூடிய உள்ளக மற்றும் வெளிக்கள வாய்ப்புகளை இனங்காணுகின்றது. பயிற்சித் தேவைப் பகுப்பாய்வின் அடிப்படையில், பயிற்சிப் பிரிவு அத்தகைய உள்ளக /வெளிக்களப் பயிற்சிகளின் நிமித்தம் ஊழியர்களுக்கு வழிகாட்டுகின்றது. ம.பொ.உ.ப. நிதி அனுசரணையை வழங்குகின்ற தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான முதுமானிப் பட்டங்கள், பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்கள், குறுங்காலப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தனது தொழில்தேர்ச்சி ஊழியர்களுக்கு உதவுகின்றது.

## ஊழியர் ஈடுபாடு

பணியகம் ம.பொ.உ.ப. ஊழியர்களினால் ஏற்பாடு செய்யப்படும் சமூக செயற்பாடுகளுக்கு நிதி ரீதியில் பங்களிக்கின்றது. ஆகையால், சமய நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு மற்றும் நலன்புரி சார்ந்த செயற்பாடுகள் போன்ற பல செயற்பாடுகள் பணியகத்தின் ஊழியர்களின் பங்கேற்பில் தலைமை அலுவலகத்திலும் தள அலுவலகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. பணியகத்தின் ஊழியர்கள் சங்கங்களை அமைக்கும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளனர். அதன் பயனாக நாம் பல காத்திரமான தொழிற்சங்கங்களையும் மற்றும் நலன்புரி சங்கங்களையும் கொண்டுள்ளோம். இந்த சங்கங்கள் அவற்றின் ஊழியர்களின் தொழில் மற்றும் நலன்புரி முதலியன சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமது உறுப்பினர்களைப் பிரதிநிதிப்படுத்துகின்றன.

## ஊழியர் நன்மைகள்

இந்தப் பணியகம் ம.பொ.உ.ப. முழுதிலும் ஏற்புடைய சிறந்த ஓய்வூதிய நன்மைகள் பொதித் திட்டத்தை வழங்குகின்றது. இந்த நன்மைகள் திட்டத்தில் வைத்தியசாலையில் அனுமதித்தல், நுகரப்படாத மருத்துவ லீவுக்கான பண மீளளிப்பு, சட்டமுறையான மகப்பேற்று லீவு, தொழில் சார்ந்த சந்தாப் பணங்கள் மீளளிப்பு, மரணம் தொடர்பான நன்மைகள் என்பன அடங்கிய சிறந்தவொரு மருத்துவக் காப்புறுதி அணவல் உள்ளடங்குகின்றது. சட்டமுறையான தேவைப்பாடுகளுக்கு அமைய சகல ஊழியர்களும் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றின் கட்டாய உறுப்பினர்களாக உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். செயலாற்றுகை அடிப்படையிலும் வருடாந்த மிகைவூதியத் திட்டங்களின் அடிப்படையிலும் ஊழியர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது.



# சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்

## தூரநோக்கு

இலங்கையில் நிர்மாணக் கைத்தொழிலுக்கான பிரத்தியேக முன்மாதிரியாக விளங்குதல்.

## செயற்பணி

போதியளவில் மதிக்கப்படும் உன்னதமான, ஊக்குவிக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டவொரு பதவியணியைக் கொண்டு நிர்மாணம் சார்ந்த தொழில்நுட்பத்திலும் அபிவிருத்திப் புத்தாக்கத்திலும் சிறந்து விளங்குதல்.

சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் (CESL) நிறுவனம் மத்திய பொறியியல் உசாதுணை பணியகத்திற்கு (ம.பொ.உ.ப.) முற்றிலும் சொந்தமானவொரு துணை நிறுவனமாகும். இது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ஒரு பொறுப்புக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டு, 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு நவம் மாதம் மீளப்பதிவு செய்யப்பட்டது.

CESL நிறுவனம் இந்த வளமான காலப் பகுதியின் பயனாக நிர்மாணம் சார்ந்த சேவைகளுக்கான அதிக கேள்வியினூடாக உருவாகும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் நிமித்தம் 2011 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து நிர்மாணக் கைத்தொழிலில் துல்லியமாக ஈடுபட்டு வருகின்றது. CESL நிறுவனம் கைத்தொழிலில் வந்த சவால்களை ம.பொ.உ.ப. பணியகத்துடன் இணைந்து எவ்வாறு பணியாற்றுவது எவ்வாறு என்பது பற்றிய தனது கருத்திட்ட முகாமைத்துவ அறிவையும் அதே போன்று நிர்மாண முகாமைத்துவ அறிவையும் மற்றும் தொழில்நுட்ப அறிவையும் கொண்டு எதிர்நோக்கியது. CESL நிறுவனத்தின் முக்கிய வியாபார நடவடிக்கை கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் என்பவற்றின் நிர்மாணம், நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள், மற்றும் ஏனைய சேவை முதலிய பிரிவுகளில் ஒருமுகப்பட்டுக் காணப்படுகின்றது. இந்த நிறுவனம் தனது கருத்திட்டத்திற்கான கொங்கிறீட்டுக்களையும் அஸ்பால்ட்டுக்களையும் உற்பத்தி செய்வதிலும் ஈடுபடுகின்றது.

CESL நிறுவனம் அரச துறையிலும் அதே போன்று தனியார் துறையிலும் வாடிக்கையாளர்களுக்காக பணியாற்றி வருகின்றது. சகல விதமான நிறுவன சார் நிர்மாணக் கருத்திட்டங்களிலும் கால இலக்குகளை அடைவதன் மூலம், அரச நிறுவனங்கள், வியாபாரத் தலைவர்கள், மற்றும் நிருவாகிகள் முதலிய நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்களின் மனதை CESL நிறுவனம் கவர்ந்துள்ளது. ம.பொ.உ.ப. உசாவுநர் என்ற ரீதியில் முன்னர் 1973 ஆம் ஆண்டில் நிர்மாணக் கைத்தொழிலில் பிரவேசித்து, தற்பொழுது ஊக்குவிப்பின் மூலவளமாக இயங்குவது பற்றி எமக்கு பல பாடங்களைக் கற்றுத்தந்துள்ளது. ம.பொ.உ.ப. கீழ் எமக்குக் கிடைத்த நிர்மாண அனுபவம் நிலையானவொரு வியாபார சூழலை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது.

# இயக்குநர்கள் குழு



பொறியியலாளர் ஜி.டீ.ஏ. பியதிலக்க

**தலைவர்**

B.Sc.(Eng), PG Dip (Const.Mgt),
PG Dip, (Ports & Coastal) Norway, MIE(SL), C.Eng, MASCE



பொறியியலாளர் என். ரூபசிங்க

**பணிப்பாளர்**

BSc.Eng (Hons)., PG.Dip (Hydropower) Norway.,
C Eng., MIE(SL)., MICE (UK)., Ltd Surveyor



திரு எம்.ஆர்.ஜீ. ரணதுங்க

**தொழிற்படு பணிப்பாளர்**

LLB (Sri Lanka), Attorney-at-Law, Notary Public., Actg. Magistrate



பொறியியலாளர் கே.எல்.எஸ். சஹபந்து

**பொது முகாமையாளர்**

BSc.Eng (Hons), PG Dip (Hyd), MSc.(Struct.), CEng, MICE (London),MIE(SL),
M.Cons E(SL), FSSE (SL)



திரு எஸ்.எம்.என்.எல். சேனாநாயக்க

**பணிப்பாளர்**

BSc. Dip Mgt, FCA



பொறியியலாளர் எஸ்.பி.பி. நாணயக்கார

**பணிப்பாளர் / CEO**

Bsc.Eng, C Eng, MICE (UK), MIE (SL)



பொறியியலாளர் ரீ.டி. விக்ரமரட்ன

**பணிப்பாளர்**

BSc.Eng (Hons), M. Eng. PG. Dip. (Hydrology), MICE (UK), FIE (SL), C Eng



பொறியியலாளர் ஏ. கல்கெட்டிய

**பணிப்பாளர்**

BSc.Eng, C Eng, MIE (SL)



திரு யூ.என்.பீ. மாவத்தகம

**பணிப்பாளர்**

CBA (ICASL), Dip in Acct, SAT


# CESL மூலம் நிறைவு செய்யப்பற்ற சில திட்டங்கள்



Faculty of Graduate Studies Building at Kotelawala Defence University



Ceylon Electricity Board at North



New Building Complex for Teacher's Training College at Maharagama



District General Hospital at Hambantota




Police Station at Jaffna




Beddagana Bio Diversity



Crocodile Enclosure at Pinnawala Zoological Gardens




Police Station at Point Pedro



Ward complex at General Hospital Polonnarwa



Rambewa Welioya - Thambalagollewa Road